# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| எனது காதலி | சுவாமி சுத்தானந்த பாரதியார் ... | ௪௬ |
| இராமோபதேசம் | " திருஞானம் " ... | ௫௦ |
| நமது சமயக் கதை | ... ... ... | ௫௧ |
| நாம் செய்ய வேண்டியதென்ன ? | ' முருகன் ' ... | ௫௩ |
| செந்தமிழ் மொழியுட் சக்தியின் செறிவு | ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் ... | ௫௫ |
| இன்பப் பாட்டு | ' தேனீ ' (ஸ்ரீ ஹரீந்திரர்) ... | ௫௬ |
| திருமதி மோந்தெஸ்ஸோரி | ' புதன் ' ... | ௫௭ |
| மகளிர் பிறந்த இடத்தில் பயன்படார் | திரு. கு. மதுரை முதலியார் ... | ௫௯ |
| பாரத சக்தி மஹாகாவியம் | சுவாமி சுத்தானந்த பாரதியார் ... | ௬௧ |
| புதிய பாரதம் | திரு. கோட்டாறு தே. ப. பெருமாள் ... | ௬௫ |
| அனைவரும் தோட்டிகளே | (காந்தியடிகள்) ... | ௬௬ |
| கைலாச நிகண்டு சூளாமணி | இராவ் சாகிப் ஸ்ரீ S. வையாபுரிப்பிள்ளை பி.ஏ., பி.எல். ... | ௬௭ |
| ' நடு நிசி ' | ஸ்ரீ திருஞானசம்பந்தம் ... | ௬௯ |
| புதுக்கோட்டையும் தமிழ்ப் புலவரும் | பண்டிதை வி. பாலாம்பாள் ... | ௭௩ |
| தெய்வமும் கொழநனும் | ஸ்ரீ வே. நாராயணய்யர், எம்.ஏ., எம்.எல். ... | ௭௪ |
| காலத்தேர் | சுவாமி சுத்தானந்த பாரதியார் ... | ௭௫ |
| புதிய தமிழ் இலக்கணம் | ... ... ... | ௮௧ |
| சித்தன்னவாசல் | ஸ்ரீ ல. கணேச சர்மா ... | ௮௩ |
| ஒலி கேட்கப்படுவதும் கேட்கப்படாததும் | ஸ்ரீ ல. காமேச்வர சர்மா, எம்.ஏ., என்.டி. ... | ௮௭ |
| ஆகாச விமானம் | விஞ்ஞானி ... | ௮௯ |
| என்ரிக் இப்சன் | ' ராஜாராம் ' ... | ௯௧ |
| ஸ்டாலின் | மொழிபெயர்ப்பு : கு. மு. ... | ௯௩ |
| பெருங்காயம் | ... ... ... | ௯௫ |



## ஹிந்துஸ்தானில் — இன்ஷ்யூர் செய்யுங்கள் பிரதிநிதிகளா யிருங்கள்

இக்கம்பெனிக்குச் சமமான அனுபவம் வாய்ந்த ஆபீஸுகளுக்குள் மிகப் பிரதானமான லைப் ஆபீஸ்

### அபிவிருத்தியின் புள்ளி விவரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| புதிய வியாபாரம் (1938—39) | 3 | கோடி | 14 | லக்ஷத்திற்கு மேல் |
| அமுலில் இருக்கும் பாலிஸிகள் | 16 | ,, | 34 | ,, |
| ஆயுள் நிதி | 2 | ,, | 96 | ,, |
| மொத்த ஆஸ்தி | 3 | ,, | 36 | ,, |

## ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
சுரேந்திரநாத் பானர்ஜி ரோட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
170, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்

# ஸண்டே டைம்ஸ் பிராஸஸ் ஸ்டூடியோ

லைன் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள்
நவீன முறைகளில்
செய்து தரப்படும்

வியாபாரிகளுக்கு சகாய
மாகவும் துரிதமாகவும்
சேவைகள் செய்யும்.

விவரங்களுக்கு :

மானேஜர், "ஸண்டே டைம்ஸ்" சென்னை.

போன் : 2678.



## உங்கள் அதிர்ஷ்டம் காந்தி ஜோசியரால் விவரிக்கப்படுகிறது

எல்லாம் தலைவிதி என்று எமாற வேண்டாம். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம்; தொழில், வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல், லாட்ரீ, ரேஸ் எதிர்பாராத லாபம் அதிர்ஷ்ட துரதிர்ஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம்.

சார்ஜ் விவரம் :—

| | | | |
|---|---|---|---|
| ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத | ரூ. 3-0-0 | ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக | ரூ. 10-0-0 |
| ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் | ரூ. 1-0-0 | வி. பி. தபால் சிலவு | ரூ. 0-6-0 |

குறிப்பு :—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்கவேண்டும்.

சென்னை பிரபல தேசீய தமிழ் தினசரி, சுதேசமித்திரன் **30-1-37ல்** எழுதுவதாவது :—

"காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாசாரியாரை, 'மித்திரன்' நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள், சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா ? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்துவிட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹநுமத் உபாஸி **வி. கே. சடகோபாச்சாரியார்,**
ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௨ : இதழ் - ௨ பிரமாதி - மாசி

OFFICE OF THE ...
8 NOV19
MADR
298

## எனது காதலி

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

காதலி வந்தாள்—கவிக், காதலி வந்தாள்
சோதி மயமான சுத்த மனத்திலே
நாத வடிவாக நர்த்தனம் செய்தின்பக் (காதலி)

மலர்மணக் காலை—தென்றல், மங்கலம் பாட,
கலகலவெனப் புட்கள் கலந்து வரவேற்கச்
சலசலத் தருவிகள் தாவு * மலைமிசை (காதலி)

அருண முகத்தாள்—பதி, னாயிரங் கலையாள்
கருணை யகத்தினள் காந்த விழியினள்
வருணனைக் கெட்டாத வானத் திருமகள் (காதலி)

அழகென்னும் பேராள்—என்வாழ்வினுக், கமுதினும் இனியாள்
பழகும் இயற்கையாம் பாங்கியுடன் கூடி,
இளந்திரு நகைவீசி என்னுள்ளம் பொங்கிடக் (காதலி)

பூத்தொடுத் தீவாள்—நாணப், புன்னகை வாயாள்
தீத்திகழ் வெண்மரைச் செவ்வியள் என்கையைக்
கோத்து விழிமலர்க் கோணத்தாற் பார்த்தனள் (காதலி)

அன்னப் பெடைபோல்—என், அருகே நடப்பாள்
முன்னைக் கதைகளும், பின்னைக் கதைகளும்
என்னை மகிழ்விக்கச் சொன்னவண் ணமாவாள் (காதலி)

கனிரச முண்போம்—உலகெல்லாம், கலைரச முண்போம்
இனிய பொழில்களின் இன்ப நிழலிலே
பனிமல ருடனன்புப் பாமாலை சூடுவோம். (காதலி)

அந்தி மயக்கில்—சற்றே, ஆடி மறைவாள்
புந்தி மயங்கியென் பொன்மணிப் பாவையை
எந்தத் திசையிலும் ஏங்கிநான் கூவுவேன். (காதலி)

மீனணி வானில்—மயிலென, மெல்ல வருவாள்
தானேதா னாகுந் தனிமையிற் சேர்ந்தென்னை
ஞானச் சுகத்தினில் மோனத்துயில் கொள்ளும் (காதலி)

---

* பொதிகைமலை

அருட்சுடர்கள்

# இராமோபதேசம்

(திருஞானம்)

94. காரியசித்தி பெற வேண்டுமானால் முடிவைக் கவனிக்காதே. பயன்களைக் கருதாதே. முறையும் முடிவும் ஒன்றாகட்டும். கர்மத்தையே பலனாகக் கருது.

95. பயனும் முடிவும் எனக்குப் பொருட்டல்ல. வெற்றியும் தோல்வியும் பொருட்டல்ல. தொழிலை விரும்புகிறேன்; செய்கிறேன். தொழிலுக்காகவே நான் அதைச் செய்கிறேன். என் வாழ்வைச் சுறுசுறுப்பாக்க வேலையைக் குறிக்கிறேன். என் ஆத்மா சக்தி. நான் வேலை செய்யவேண்டும்.

96. பயன்களைப்பற்றிக் கவலைப்படாதே. மக்களிடம் எதையும் எதிர்பாராதே. உன் நூல்களுக்கு நல்ல மதிப்புரைகள் வந்தாலும் சரி, கடுமையாகக் கண்டனைகள் வந்தாலும் சரி, பாராட்டாதே.

97. எப்போதும் ஈபவனாயிரு. சுதந்தரத் தொழிலாளியாயிரு. பிச்சைத்தனத்தை விடு. தனக்கே வேண்டுமென்னும் சுயநலவழக்கத்தை விடு.

98. அவா அழிந்தாலேதான் நிறைவேற்றமுண்டு. நீ அவாவி ஆசைப்பட்டு கெஞ்சிக் கூத்தாடினால் பிறர் உன்னை மதிக்கமாட்டார்கள். உன்வார்த்தை ஏறாது. நீ நீத்தால் நீத்தது எதிராளியின் அந்தரங்கத்தைக் கவரும்.

99. உன்னால் ஊழ்வினையாம்.

100. மனம்போல மங்கலம். நினைப்பது போலவே சுற்றமும் ஆகும்.

101. நீ நினைக்கிறபடியே ஆகிறாய்; உன்னைப் 'பாபி' என்றால் பாபியாகிறாய்; முட்டாள் என்றால் முட்டாளாகத்தான் வேண்டும்; உன்னை மெலியன் என்றால் உலகிலுள்ள எந்தச் சக்தியும் உன்னைப் பலவானாக்க முடியாது. உன்னுள் சர்வவல்லமையும், சர்வவல்லவனும் இருப்பதை உணர்.

102. ஒருவன் உணர்வை மாற்று; அவன் நினைப்பே மாறும்.

103. ஆகாசத்திற்கு மிஞ்சிக் கழுகு பறக்க முடியாது; நினைப்பும் தனது எல்லையை மிஞ்ச முடியாது.

104. நினைப்பும் மொழியும் ஒன்றே; மொழியின்றி நினைக்க முடியாது; ஒரு குழந்தை மொழியாது, நினைக்காது.

105. நினைப்புகளிடையே வசிப்பவன் மாயம், நோய் இவற்றிடையே வசிக்கிறான். அவன் கற்ற அறிவாளியானாலும் அவன் அறிவும் படிப்பும் கறையான் அரித்த மரம்போல் ஓட்டை விழுந்ததாகும்.

106. புறத்துணைகளினின்றும் விலகி உள்ளிருக்கும் அகண்ட தத்துவத்தைப் பற்றும்போதே உண்மைக்கல்வி தொடங்குகிறது. அப்போதே அவனிடம் சுய ஞானம் உதிக்கும். அப்போதே அவன் பெரிய புதிய எண்ணங்களின் ஊற்றாகிறான்.

107. நமது படிப்பு வல்லபத்தைக் காட்ட நீண்ட பெரிய மேற்கோள்களை அள்ளி வீசுவதும், சுலோகங்களின் பொருளைக் கொலை செய்வதும், பழைய சாத்திரங்களை ஒப்பிப்பதும், வாழ்விற் பயன்படாத பாடங்களைப் படித்தலும் கல்வியாகாது.

108. சரியான காரியங்களைச் செய்வதுடன், அவற்றில் மகிழ்வது, உழைப்புடன் உழைப்பை ரசிப்பது—இவையே உண்மைக் கல்வியின் நோக்கமாகும்.

109. எனக்கு ஆத்ம சுயேச்சையும், மோக்ஷமும் தராத கல்வி காசுபெறாது. அதைத் தூரத் தள்ளுவேன். கல்வி என்னை அடிமையாக்கினால், அதனால் எனக்கு ஒரு பயனுமில்லை.

110. நோக்கத்தைச் சாமர்த்தியமாக நிறைவேற்றுதல் ஒன்று; அதன் மூலப்பொருளை அறிதல் மற்றொன்று.

111. மனிதனுக்கும் விலங்கிற்கும் வேறுபாடிதுவே :—ஒரு நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டி பரம்பரை விதியால் தனது பூரணத்திற்கு வேண்டியதை யெல்லாம் அடைந்துள்ளது; மனிதக் குழந்தை கற்றறிந்து நிற்றலால் உலகையே வென்றாளும்படி தனது சுபாவ சக்திகளை வளர்க்கலாம்.

112. உணர்வுகளைப் புத்தியால் அடக்கியாளும் மனிதனே விலங்குகளினும் உயர்ந்தவனாகிறான்.

# நமது சமயக் கதை

"நம்மவர் வெகு விரைவாகப் பிறமதம் புகுந்து வருகிறார்கள்; பிற சமயத் தொண்டர் கல்வியில்லாத நமது பெண்களையும், பாமர மக்களையும் நாடோறும் தமது சமயத்தில் சேர்த்து விடுகிறார்கள். சேலம், திருச்சி, திருநெல்வேலி முதலிய இடங்களில் இவ்வாறு மதம் மாற்றுதல் அதிகமாயிருக்கிறது; அதற்கு என்ன செய்யலாம்? சொல்லுங்கள் யோசனை!" என்று நமக்கு அடிக்கடி கடிதங்கள் வருகின்றன. இந்த மலரில் இக்கேள்வியை விரிவாக ஆராய்ந்து வழி காண்போம்.

**நமது நாட்டின் ஆதி மக்கள் திராவிடர்களே, தமிழர்களே**; அவர்கள் இங்கே வழிவழியாக வாழ்ந்தனர். **வந்தார்கள்** ஆரியர்கள்—நடு ஆசியாவிலிருந்தோ, நார்வேயிலிருந்தோ, திலகர் சொல்வதுபோல ஆர்டிக் பிரதேசத்திலிருந்தோ, அல்லது சிலர் ஊகிப்பதுபோல் ரஷ்ஷியாவிலிருந்தோ; எங்கிருந்தோவந்த ஆரியர் முதலில் பஞ்சாபில் குடியேறினர்; அங்கே வளர்ந்த திராவிட நாகரிகப் பெருமை **மோஹெஞ்சதாரோ, ஹரப்பா** என்னும் இடங்களில் தற்போது அகப்பட்டுள்ள ஆதாரங்களால் விளங்கும். வந்த ஆரியருக்கும் திராவிடப் பெருமக்களுக்கும் கடும்போர் நடந்தது; திராவிடர் காட்டிய வெல்லொணு வலிமையைக்கண்டு அவர்களை இராக்ஷஸர்களாகவும், தஸ்யுக்களாகவும், விருத்திராதி தானவர்களாகவும் ஆரியர் வர்ணித்துப் பாடினர், கதை கட்டி வைத்தனர். அவற்றையெல்லாம் தத்துவ விளக்கங்களாகக் கொண்டு மறப்போம். பாஞ்சாலத்திலும் மஹா கோஸலத்திலும் ஆரியர் ஊன்றிக்கொண்டனர். விந்திய மலைக்குத் தெற்கே திராவிடர் செழித்தனர். புத்தருக்குப் பிறகு ஆரிய திராவிடச் சண்டைகள் அதிகமில்லை. ஆரிய திராவிட நாகரிகங்கள் கலந்து போயின. இனிப் பிரிவினை பேசுவது வீணாகும். திராவிட நாகரிகத்தின் நன்மைகளையெல்லாம் ஆரியர் மேற்கொண்டு தமதாக்கினர். ஆரியர் பழக்க வழக்கங்கள் திராவிடத்திற் கலந்தன. **கீதை** ஆரிய நாகரிகச் சுவடி என்றால் **திருக்குறள்** தமிழர் நாகரிகச் சுவடி என்னலாம். அலெக்சாந்தர் படையெடுத்த பின் வட நாட்டில் கிரேக்க நாகரிகமும் கலந்தது. தமிழ் நாட்டிலே யவனர் நமது மன்னருக்குத் தொண்டு செய்தனர். அசோகன் காலத்தில் திராவிட நாகரிகம் தனிச் சிறப்புடன் விளங்கியது. ஆனால் தென்னாட்டில் பௌத்த சமயம் வந்து குடியேறியது. பிறகு சமண மதம் வந்தது; அறநெறிக் கோட்பாடுகளில் வேறுபாடில்லை. பதி பசுபாச லக்ஷணங்களிலே தான் வேறுபாடு. சமண பௌத்த சமயங்கள் அரசர் மனத்தைக் கவர்ந்தன. சமண சமயம் அரசியலிற் புகுந்தது; தமிழ் நாட்டிற்குரிய சைவ வைணவ சமயங்கள் மறைந்து கொண்டிருந்தன. அச்சமயம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் எழுந்து மீண்டும் நமது சமயத்தை நிலைநாட்டினர். சமயக் கொள்கைகளைப் பாமாலைகளாகத் தொடுத்துச் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சூட்டினர். அவர்களுக்குப் பிறகு நமது சமயம் புத்துயிர் பெற்றெழுந்ததென்னலாம். பிற்பாடு சங்கரர் வந்து "நான் பிரமம்" என்னும் வேதாந்த கர்ஜனை செய்தார். இராமானுஜர் வைணவத்திற்கு ஒரு மின்சாரவேக மளித்தார். பக்தி மார்க்கத்தை உபதேசித்தார். இம்மூவர் உபதேசங்கள் பாரத பூமி முழுதும் பரவின. சங்கரர் உபதேசம் உலகின் உள்ளத்தையே கவர்ந்தது. இன்று சங்கரரை உலகெல்லாம் அறியும். விவேகானந்தரும், இராமதீர்த்தரும் கடல் கடந்து சென்று சங்கர வேதாந்தத்தை முழக்கினர். நமது நாட்டில் விளங்கும் மற்றொரு சமயமான சுத்தாத்வைத சித்தாந்தம் தக்க பிரசாரகர் இல்லாமல் உறங்கியது. ஆயிரம் திருமடங்கள் இருந்தென்ன? இலட்சம் பண்டாரங்களும் சாமிக் கூட்டங்களும் அங்குமிங்கும் உலாவினாலென்ன? நாட்டிற்கும் சமய விளக்கத்திற்கும் பயனில்லை. பாமர ஜனங்களுக்குச் சமயக் கல்வியில்லை. மீண்டும் அஞ்ஞான இருள் மூடியது.

இச்சமயம் உட்பகைச்சலும், வேற்றுமையும் நம்மவரைப் பல கட்சிகளாகப் பிரித்தன. கட்சிப் போர் வலுத்து அன்னியர் வர இடமானது. எத்தனையோ அன்னியர் படையெடுப்புக்குப் பிறகு **இஸ்லாம்** நாட்டிற் புகுந்தது. அரியணையைப் பற்றியது. அரசியல் பலங்கொண்ட சமயத்திற்குத் தான் அந்தந்தக் காலத்தில் ஏற்றமிருக்கும். இவ்வுண்மை யறிந்தே நபிகள் நாயகம் மதபீடத்தை அரியணையுடன் இணைத்தார். நாட்டை என்று நாம் இழந்தோமோ அன்றே நம்மையும் இழந்தோம். நம்மவர் தொகை வரவரக் குறைந்தது. இப்போது ஏழு கோடி இஸ்லாமியர் நமது சகோதரராயிருக்கிறார்கள். இடையில் வீர சிவாஜி ராமதாஸர் அருளால் எழுந்து ஹிந்து

ஸாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினன். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக **நானகன்** சீக்கிய மதத்தைக் கண்டான். ஆனல் அது முடிவில் **சிங்கரைப்** படைத்து முகலாய சாம்ராஜ்யத்தையே எதிர்த்தது. அக்காலம் நாடு முழுதும் சண்டை சச்சரவாகி நமது சமயஞானம் உறங்கிப் போனது; தருமம் தலை குனிந்தது. இவ்வாறு போரும் இருளும் குடிகொண்ட நாட்டில் வியாபார தந்திரமும், அரசியல் சூழ்ச்சிகளும், அயராவுழைப்புங் கொண்ட ஐரோப்பியக் கிறிஸ்தவர் புகுந்தனர். போர்த்துகீஸியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் அனைவரையும் புறங்கண்டு, தம்முள் முரண்பட்ட சுதேச மன்னரையும் அடக்கி மலை முதல் முனை வரையில் ஆங்கிலேயர் தமது கொடியைப் பறக்க விட்டனர். ஆங்கிலேயர் வரவால் நாம் நல்ல உலகறிவு பெற்றோம்; ஐரோப்பிய நிபுணர் செய்த ஆராய்ச்சிகளைச் சிறிது கற்றோம்; உலகுடன் பழக ஒரு மொழியை அறிந்தோம். ஆனல் நமது அறத்தை இழந்தோம்; தாய் மொழியை மறந்தோம், சமய ஞானத்தைத் துறந்தோம். அரைகுறையாக அன்னிய மொழி கற்று நமது தாய்மொழியிலுள்ள அறிவுச் சுரங்கத்தையும் அதில் ஒளிரும் அருட் செல்வத்தையும் புறக்கணித்தோம்.

நம்மிடம் ஒற்றுமை கிடையாது, மொழியன்பும், சமயப் பற்றும் கிடையாது. ஒருவரையொருவர் நம்புவதில்லை. இஸ்லாமியர் குரான் ஓதுவர், மசூதியில் தொழுவர்; கிறிஸ்தவர் பைபிள் படிப்பர், சர்ச்சில் வணங்குவர்; நம்மவருக்கு அந்தக் கட்டுப்பாடுகூட இல்லை; நமது சமயக் கோட்பாடே பலருக்குத் தெரிவதில்லை. சில பண்டிதர்கள் அங்குமிங்கும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சித்தாந்தம், ஆண்டான் அடிமைத்திறம் என்று வாதம் புரிந்து கொண்டிருந்தாற் போதுமா? நம்மவரில் மாகாணிப்பேர்கூடப் படித்தவர் இல்லையென்றல் அரிய சமய நூல்களை எங்கே ஆராயப் போகிறார்கள்? வடநாட்டில் இராஜா ராம்மோஹன்ராய், தயானந்தர், பரமஹம்ஸர், விவேகானந்தர், ராமதீர்த்தர் போன்ற மஹான்கள் உதித்து ஒரு புதிய விழிப்பைத் தந்தார்கள். தென்னாட்டில் இராமலிங்க ஸ்வாமிகள் சமரச சன்மார்க்கச் சங்கூதினர்—யாரும் கேட்கவில்லை. இன்னுமென்ன? அருட்பெருஞ்ஜோதி பாடுகிறார்கள்; ஒருபுறம் தனிப்பெருங் கொள்ளை; மறுபுறம் தனிப்பெரும் உறக்கம்! சைவம் வைணவம் இரண்டும் நம் நாட்டுச் சமயங்கள், இரண்டிற்கும் உரிய பல அருட்சுவடிகள் உள்ளன. அவற்றைக் கற்றுப் பொது ஜனங்களுக்கு விளக்கும் பிரசாரகர் இல்லை. எத்தனையோ வடநாட்டு மேனாட்டுச் சங்கங்கள் வந்து தமிழ் நிலத்தில் ஊன்றி வளர்கின்றன; நாட்டிற்குரிய சமயம் உறங்குகிறது.

நமது ஒற்றுமையைப் பாழாக்கும் மாமூல் பழக்கங்களைத்தான் இன்று 'என் மதம், உன் மதம்' என்று முதலைப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். பரிதாபம்! பரிதாபம்!! நம்மைப்போன்ற பங்கிழந்த வீரப்பர்கள் எங்கேயுண்டு!!!

கிறிஸ்தவப் பாதிரிகள் வருகிறார்கள். பள்ளிக்கூடம் வைத்துக் கல்வி தருகிறார்கள்; நமது நூல்களை யெல்லாம் தற்காலத்திற் கேற்றபடி மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள்; வைத்திய சாலை வைத்து மேனாட்டு முறைப்படி நோய் தீர்க்கிறார்கள்; பலவிதத் தொழிற்சாலைகளை நடத்தி ஏழைகளுக்கு ஏராளமாக உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணுகிறார்கள். அவர் தொண்டு நமது மனத்தைக் கவருகிறது. பிறகு பைபிளை உபதேசிக்கிறார்கள். ஏராளமான பிரதிகள் அச்சிட்டு வாரி வழங்குகிறார்கள். மக்கள் மனம் மாறி மதம் மாறுகிறார்கள். நாம் இன்னும் உறங்கினல் அடுத்த ஜனக்கணக்கெடுக்கும்போது இலட்சக் கணக்கான பேர்களை இழப்போம்.

நம்மவர் விழித்தெழுந்திருக்க வேண்டும். சாதிமத வேறுபாடுகளைக் கட்டித் தூர வைத்துவிடவேண்டும். சோம்பேறி வாய்வேதாந்தத்தை விட்டொழிக்க வேண்டும். தாய்மொழியையும் அதில் பொதிந்துள்ள அருளறிவையும் நன்ருகக் கற்கவேண்டும். ஆங்கிலத்தையும் அதிற் செறிந்தோங்கும் கலை யறிவையும் மாசறக் கற்க வேண்டும். மேற்கின் ஆராய்ச்சித் திறனும், தொழில் வளமும், நமது நாட்டிற் கியல்பான **பக்தி—ஞானச்** செல்வத்துடன் இணைந்து ஒரு புதிய எழுச்சி பெறவேண்டும்.

நாம் ஜயசக்தி பெற்ற புதிய ஜாதியாக மறுமலர்ச்சி பெறவேண்டும். அப்போதுதான் நம்மை மேலோங்காமல் மட்டந்தட்டிச் சீரழிக்கும் அன்னிய சக்திகளை வெல்லமுடியும்.

தமிழர்களே! **சக்தி** உங்களை எழுப்புகிறாள். எழுந்திருங்கள்! மாட்டீர்களா? சரி; மீண்டும் இதோ **அகத்தியர்** வாயிலாகப் **பேசுகிறாள்.** கேளுங்கள். இரட்டை டமாரம் அடித்தாற்கூட உங்கள் உறக்கம் கலையாதா?—அட சிவனே! சிவனே!! சிவனே!!!

அகத்தியர் பேச்சு

# நாம் செய்ய வேண்டிய தென்ன ?

(முருகன்)

என் அருமைக் குழந்தைகளா! மேற்கும் கிழக்கும் சுற்றிப் பேரப்பிள்ளைகளான உங்களைப் பார்க்க வந்தேன்; பிள்ளைகளுக்கு என்ன கொண்டுவந்தேன்? என் **அனுபவக் கனிகளைக்** கொண்டுவந்தேன். நீங்களெல்லாம் முன்னேறும் வழிகளை அறிந்து உங்களைத் தூண்டி நடத்த **ஆர்வங்** கொண்டுவந்தேன்.

பம்பாய் வந்து இறங்கினேன்; துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தேன். அந்தக் காலம் கொற்கையிலும் புகாரிலும் மலைமலையாக நமது நாட்டுப் பொருள்கள் குவிந்திருக்கும்; அதை யவனர் சோனகர் முதலிய பிறநாட்டார் வந்து வாங்கிச் செல்வர். இன்றோ? நமது நாட்டுச் சீதேவி கப்பலேறிச் செல்கிறாள். அன்னிய நாட்டுப் பொருள்கள் கப்பல் கப்பலாக வந்து குவிகின்றன. நம்மவர் அவற்றையே வாங்குகின்றனர். நாட்டினின்றும் கோடிக்கணக்கான பணம் ஒவ்வொரு நாளும் வெளியேறுகிறது. இந்தப் பகற் கொள்ளையும், இப்படி நம்மவர் நமது செல்வத்தையே பறிகொடுத்து நிற்பதுமே என் கண்ணில் முதன்முதல் உறுத்தின. "இதென்ன தங்கமும் வெள்ளியும், முத்தும் மணியும், பயிரும் தானியமும் இப்படி நமது கரையை விட்டு அத்லாந்திக் கரைக்குச் செல்கிறதே! நம்மவர்கள் என்ன செய்கிறார்கள்?" என்று உள்ளே புகுந்து பார்க்கப் போனேன். அங்கே ஒரு கூட்டம் கூடியிருந்தது. ஒரு மேடைமேல் பத்துப்பேர்கள் சுவிசேஷ கீதங்கள் பாடினர். கீதம் நின்றதும் ஒரு ஆங்கில துரை நமது பாஷையில் பேசினர் :– அதன் சாரமாவது: "இந்துக்களெல்லாரும் மூடக் கொள்கையர், கல்லை வைத்துக் கோவில் கட்டித் தொழுகிறார்கள். அந்தக் கல்லை என் காலால் உதைத்தால் என்ன செய்யும்? [காலை உதறியடித்தார். "கல்லை உதைத்தால் உன் காலில் இரத்தம் வரும்" என்று கூடச் சொல்வாரில்லை.] இந்துக்கள் ஆயிரம் ஜாதி வித்தியாசமுள்ளவர்கள். ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் சண்டை. இந்தச் சண்டையை நாங்களே தீர்த்து வைத்தோம். இந்தியா ஒரு காடாயிருந்தது; கலகக் காடாயிருந்தது; அநாகரிகக் காடாயிருந்தது; நாங்களே இங்கே ஒளியைக் கொணர்ந்தோம்; நாங்களே கல்வி கொடுத்து இந்துக்கள் விழியைத் திறந்தோம், பல தொழில்களைக் கற்பித்தோம். பிழைப் பீந்தோம். இரயில் போட்டோம், தந்தி யிணைத்தோம், புதப்புது நாகரிக அதிசயங்களை யெல்லாம் இந்த நாட்டில் கொணர்ந்தோம். எல்லாம் கிறிஸ்து பகவான் அருளால் நடந்தது; கிறிஸ்துவை நம்புங்கள்; அவரே திருக்குமாரர்; பரலோகத்திலுள்ள பரம பிதாவின் அருட்குமாரர். அவரே உலக ரக்ஷகர். இன்றுலகில் பெரும்பாலார் கிறிஸ்தவர்.... கிறிஸ்துவை அடையுங்கள். கல்வி கிடைக்கும்; ஜாதிவேற்றுமை ஒழியும், தொழில் கிடைக்கும், சுகமாக வாழலாம்; வானரசு இறங்கி வரும். ஞான ஸ்நானம் பெறுங்கள்— அஞ்ஞானிகளே!" என்றெல்லாம் அவர் உபதேசித்ததும் அவரைப் பின்பற்றிச் சிலர் பேசினர். பிறகு அங்கு நின்றவருக்கெல்லாம் சுதேச பாஷையில் அச்சிட்ட பைபிளை வழங்கினர். கூட்டம் முடிந்ததும் அவர்களுடன் சுமார் ஐம்பது பேர் சென்றனர். எங்கே? ஞானஸ்நானம் பெறத்தான்.

"போகரே, இதென்ன!" என்றேன்.

"எல்லாம் உனது பேரப்பிள்ளைகளால் வந்த வினைதான். அவர்கள் தூங்குகிறார்கள். இவர்கள் விழித்திருந்து வெல்லுகிறார்கள்; பாரும் உமது நாட்டை!" என்று சுற்றிக்காட்டினார். பம்பாய், நாசிக், லாகூர், ஸ்ரீநகர், தில்லி, கோரக்பூர், பிரயாகை, காசி, கல்கத்தா, இராஜமகேந்திரம், சென்னை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, இராமேசுவரம், திருவனந்தபுரம், கொச்சி, மைசூர், பங்களூர் முதலிய ஊர்களையெல்லாம் நன்றாகச் சுற்றிப்பார்த்தேன். "ஐயோ நமது நாடும் சமுதாயமும் இப்படி அன்னிய மாயத்தால் அழிந்ததே--சிவனே!" என்று மயங்கி வீழ்ந்தேன்! மயக்கந் தெளியும்போது போகர் என்னிடம் "**தர்ம தீபம்**" என்றொரு பத்திரிகை தந்தார். அதில் "**சன்மார்க்க மகாநாடு**" ஒன்று குற்றாலத்தில் நடப்பதாகப் போட்டிருந்தது. அதுவே நானும் நினைத்தேன். உடனே இந்த மகாநாட்டிற்குச் செல்வதெனக் கிளம்பினோம். இருவரும் ஐரோப்பிய வேடத்துடனேயே சென்றோம். மகாநாட்டுக் காரியதரிசிக்கு வெகு

குதூகலம். "இரண்டு துரைமார் நமது மகா நாட்டிற்கு விஜயம் செய்திருக்கிறார்கள்" என்று அவர் சபைக்கும் அறிவித்து எங்களை முன்னணியில் அமர்த்தினர். மகாநாட்டில் பல அறிஞர் பேசினர். "நமது இந்து சமயம் தாழ்வடைந்திருக்கிறது; நம்மவர் விரைவாகப் பிறமதம் புகுவதால் நமது ஜனபலம் குறைந்து போனது. நமது அருள் நூல்களைத் தேடுவாரில்லை. எல்லாரும் ஆங்கில மோகம்பற்றித் திரிகிறார்கள். நாட்டில் வறுமை, மடமை, அடிமை இருள் படர்ந்திருக்கின்றன. இவற்றை நீக்கத் தொண்டர்படை எழுந்து உழைக்க வேண்டும். கல்வியும் தொழிலும், சன்மார்க்க ஞானமும் எங்கும் பரவ வேண்டும். இதற்கெல்லாம் ஏராளமான பணம் வேண்டும். அவரவர் இயன்றதை உதவுங்கள்!" என்பதே அனைவர் பேச்சின் சாரமுமாகும். எல்லாரும் பேசியதும் சிலர் ஒரு பெருத்த தாடிவாலாவைத் தூண்டிவிட்டனர். அவர் விநோதக் கேள்விகளை அடுக்கினர். "இந்து சமயம் என்றால் என்ன? பார்ப்பான் உயர்த்தி, மற்றவர்களெல்லாம் சூத்திராள் என்று அவமதிப்பதுதானே உங்கள் சமயம்? இந்த அவமதிப்புச் சமயத்தை ஆயிரஞ்சாமி, பதினாயிரம் பிரிவினைகள், இலட்சம் மூடக்கொள்கைகள், காலத்திற்குதவாத மாமூல் பழக்கங்கள் எல்லாம் வளைத்துக் கொண்டிருக்கின்றனவே! இதில் பகுத்தறிவுள்ள மனிதன் எப்படிப் புக முடியும்? விடிந்தெழுந்தால் சாமிக்கு மாரடிக்கத்தானே உங்களுக்குப் பொழுது சரியாயிருக்கிறது! சாமி எங்கே? எல்லாம் பார்ப்பான் வேலை, ஏமாற்றம், புராணப் புளுகு, புரோகிதப் புரட்டு" என்று நீளக்கிளம்பினர். சபை இரண்டானது. வாய்ச்சண்டை கைச்சண்டை அடிதடி எல்லாம் நடந்தது. ஏகரகளை!' அச்சமயம் சிவப்புத் தலைப்பாகையுடன் ஐந்துபேர் தோன்றினர். சண்டை அடங்கியது. நம்மவரை அமைதியாக்கப் போலீஸ் உதவி வேண்டியிருக்கிறது! நான் போகருக்குச் சாடை காட்டினேன். கொஞ்சம் அமைதி நிலவியதும் போகர் கூட்டத் தலைவர் ராவ்பகதூர் ஏகாம்பரம் பிள்ளை காதில் "இவர் எனது நண்பர்; சீமையிலிருந்து வந்திருக்கிறார். பெரிய அறிவாளி; கொஞ்சம் பேசச் சொல்லலாமே" என்றார். "ஆஹா மெனி தாங்ஸ்! ஆங்கிலத்திலேயே பேசட்டுமே, தமிழில் நான் மொழிபெயர்க்கிறேன்" என்றார். "நமது அதிட்டவசமாக மகாநாட்டிற்கு விஜயம் செய்த மிஸ்டர் அகஸ்டஸ்துரை இப்போது நமக்குச் செவிவிருந்தளிப்பார்" என்று தலைவர் ஆங்கிலத்திற் பேசி அமர்ந்தார்.

எழுந்தேன் "Dear Comrades" என்று நான் தடபுடலாக ஆரம்பித்து ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினேன். ஒவ்வொரு வாக்கியத்தையும் தலைவர் அழகாகத் தமிழில் மொழிபெயர்த்தார். என் பேச்சின் சாரத்தை உங்களுக்குத் தமிழிலேயே சொல்லுகிறேன் கவனமாகக்கேளுங்கள்:

"என் அருமைத் தோழர்களே! என் சட்டை தொப்பியை மறந்துவிடுங்கள்; என்னை உங்களுள் ஒருவனாக நினைத்துக் கொள்ளுங்கள். அந்த நினைப்புடனே நான் பேசுகிறேன். நான் ஐரோப்பாவை நன்றாகச் சுற்றியறிந்து உங்களிடையே வந்திருக்கிறேன். நான் இந்தியக் கலைகளை நன்றாக அறிவேன். இந்தியாவை நான் சுற்றிப்பார்த்து உங்கள் வாழ்க்கை, நிலைமை, குறைநிறைகள் அனைத்தையும் நன்கறிந்தேன். உங்கள் பாஷைக்கும் நான் அன்னியனல்லேன். இங்கே பேசியதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிந்தது. என்னைப் பற்றி இப்போது பேச்சல்ல; உங்களைப்பற்றித்தான். ஆதலால் நேராக விஷயத்திற்குச் செல்லுகிறேன். உங்கள் நாகரிகம் மிகப் பழமையானது, தெய்வத்தன்மை பொருந்தியது; உங்கள் முன்னோர்கள் அருட்புலவர்கள், தெய்வீக புருஷர்கள், அவர்கள் அருளிய வாக்குகளே உங்கள் நாகரிகத்தின் அடிப்படையாம். ஆனால் மறதியென்னும் திரை உங்கள் மனத்தை மறைத்தது; சாதிமத வேற்றுமை உங்கள் அறிவை மறைத்தது. காலத்தை அனுசரிக்காத பிடிவாதங்கள் உங்கள் முன்னேற்றத்தைத் தடுத்தன. கல்வியில்லாத மடமை உங்கள் கண்ணை இருளாக்கியது; தொழிலறிவில்லாத சிறுமை உங்களை வறியராக்கியது. இந்த நாட்டில் அன்னியமோகமும், அடிமை நினைப்பும், கட்சிப்போர்களும், சாதிப்போர்களும், படியா மடமையும், உழையாச் சோம்பலும் குடிகொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் பிறநாட்டார் புகுந்தனர், வென்றனர், பொருளைக்கொண்டு சென்றனர். "நாடு கொள்ளைபோகிறது, மதம் போச்சுது, ஆசாரம் போச்சுது. பிறமதங்கள் முன்னேறுகின்றன; நம்மதம் பின்னொதுங்குகிறது. அன்னியர் ஆக்கம் பெற்றனர்" என்று கூச்சலிடுகிறீர்கள். உண்மைதான்? இத்தீமைகளின் காரணமென்ன? நம்மவர் தூக்கமே யல்லவா? உங்கள் நிலைமை வெட்டவெளிச்சம். அது திருந்தி நீங்கள் முன்னேறச் சிலவழிகள் எனக்குத் தோன்றுகின்றன. அவற்றை மளமளவென்று சொல்லி என்பேச்சை நிறுத்திக் கொள்ளுகிறேன். என்னை ஒரு தமிழனென்றே கருதிச் சொல்லுகிறேன் கேளுங்கள்!

# செந்தமிழ் மொழியுட் சக்தியின் செறிவு

[யாழ்ப்பாணம், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர்]

சக்தியெனப் பேர்தாங்கித் தாரணியைத் தந்தவுயர்
சக்தி தனதின்பப் பேர்தங்க—எத்திசையும்
சென்றுலவுஞ் சீருடைய திங்கட்டாள், எந்நாளும்
நின்று நிலவுக நீடு!

இவ்வுலகின்கண்ணே வாழும் மக்களுக்கு மொழியின் துணை அவசியமாகும். அம்மொழிகள் பலவாகி வழங்கா நிற்கின்றன. பாரத நாட்டினும் பல நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. எல்லா மொழிகளுக்கும் முற்பட நிற்பன ஆரியமும் செந்தமிழும் என்ப. வடமொழிக்குச் சமஸ்கிருதம் என்ற பெயருமுண்டு. தென் மொழியும் இன்பங் கனிய நிற்கும். இவ்விரண்டும் இறைவரருளியன. இறைவனர் செய்த தனி மதிப்புடைய அகப்பொருள் தமிழுக்கு அணிசெய்து நிற்கின்றது. இலக்கணமின்றிய எம்மொழியும் நன்மொழியாகாது.

"வடமொழியுந் தென்றமிழு மானுன்" என்பதும் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்—குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்" என்ற பகுதியும் தமிழுயர்வு காட்டும்.

இன்னும்,

"ஆரியமுந் தமிழு முடனே சொலிக்
காரி யார்க்குக் கருணைசெய் தானே"

என்ற திருமூல யோகிகள் திருவாக்கும் நோக்கற் பாலதாம். சொல்லும் பொருளும் அத்துவைதமாக நிற்றல்போல இறைவனுஞ் சக்தியும் பிரிவின்றி நிற்பர் என்பர் பெரியோர். காளிதாசரும்,

வாகர்த்தா இவ சம்பிருக்தௌ வாகாத்தப்ரதி பக்தயே
ஜகத: பிதரௌ வந்தே பார்வதி பரமேஸ்வரௌ!!

(சொல்லும் பொருளும் போலக் கூடியவர்களும், வாக்கு அர்த்தங்களாற் பிரதிபாதிக்கப் படுகிறவர்களும் உலகபிதா மாதாக்களா யுள்ளவர்களுமாகிய பார்வதி பரமேஸ்வரர்களுக்கு வணக்கம்) என்ருர். இத்தகுதியுடைய தமிழைப் பலர் ஒதுக்கி விடுகின்றனர். சிலர் மாத்திரங் கற்று யாதாகும்? கற்ருரையும் மதியாத பணக்காரர் இருந்தால், கற்றவர் தான் என் செய்வர்?

தமிழுக்கு முன் சிறப்பளிந்து நிற்கும் ஓங்காரம் சக்தியின் வாசகத்தை, மகரத்தைத் தன்னுள் அடக்கி விளங்குகின்றது. உலகத்தை இறைவர் சிருட்டிக்கும் நிலையில் நிமித்த காரணராவார். சக்தியே துணைக்காரணியாக நிற்பாள். தமிழையும் சமயத்தையுஞ் சேர்த்து வளர்த்த சிவஞானச் செல்வர்களாகிய அடியார் சக்திக்கு உயர்வு காட்டிப் போந்தனர்.

மூவரசர்கள் கடவுள் பெருமை நாடித் தமிழ் வளர்த்துப் பேரம்பலவுந் திகழச் செய்தனர். புலவர் பெருமக்கள் செய்யுட் பேரணிகளைத் தமிழ் மாதா அணியப் புனைந்து தம் புகழ் நிறுவினுர்கள். சமய நூல்களையும், தோத்திர நூல்களையும் படித்து இன்புறுவார் தொகை பெருகவில்லை. விஞ்ஞான நூல்கள் வேண்டும் என்பவரை நாம் வெறுக்கவில்லை. ஆராய்ந்து நமது கடமைகளை மொழி சமயம் என்பவற்றுள் ஏற்றன செய்தால் மிக நலமாகும். பத்திரிகைகள் படித்து உள்ள அறிவை வளர்க்கலாம்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் மக்களறிந்து இன்பமாக வாழ்வது நன்றே. தமிழை வரம்பாக எத்தனை மாணவர்கள் கற்று வருகின்றனர்? தமிழ் நாட்டில் ஆயிரத்திற்கு ஐந்து பேர் கூடத் தமிழைத் தக்கவாறு கற்றிருப்பார் என்று எண்ண முடியாது. தமிழை முதன் முதலில் நமது புத்திரர் கற்க வேண்டும் என்று ஒரு முக்கிய தீர்மானமும், இத்தனை வயது வரையுந் தமிழ் படிக்கவேண்டும் என்ற கட்டாயச் சட்டமும் இப்போது அவசியந் தோன்ற வேண்டும். நிற்க;

நமது தமிழ் நாட்டவரின் பரிதாபகரமான நிலையை எண்ணினுல் ஒவ்வொரு அறிஞரும் வருந்துவர். ஊதுகிற சங்கை ஊதினுல் விடியும் போது விடியட்டும்; இதனை நாம் கடமையாகச் செய்யவேண்டும்! சுவாமி சுத்தானந்த

(௬௬-ம் பக்கம் பார்க்க)

# இன்பப் பாட்டு

(மகாகவி ஹரீந்திரர்)

எழுகநீ இன்பமே !......எகுக விரைந்தே !
நிலையறச் செல்வதில் நிகருனக் கில்லை.
நின்னைத் தீண்டுமுன் நினைப்பாய் வளர்வாய் ;
ஒருதரம் தொட்டால் உள்ளங் கலங்கி
கண்ணைக் கசக்கிக் கவலை யாவாய் ;
அத்தனை அழகும்......அத்தனை நிறமும்
சாவத னாலே சார்ந்தது ரோஜா
அனந்த சக்தியின் அற்புத மினுக்காம்
என்றும் விடுதலை எய்துங் கைதியாம்
கவின்பெரும் அழகுதன் கன்னித் தனிமையை
காக்கும் மர்மம் போக்கிட விரைந்தே !

—"தேனீ"

குறிப்பு :—இக்கவிதை காதல், அழகு முதலியவற்றிற் காணும் இன்பம் மாறும், நிற்காமல் ஓடும் ; ஆனால் மீண்டும் மீண்டும் வந்துசெல்லும் என்பதைக் குறிக்கிறது. ரோஜாவின் அழகும் மணமும் வாடுகிறது. ரோஜா மண்ணாகி மண்ணிலிருந்து மீண்டும் புதியரோஜா உண்டாகிறதல்லவா ! அதுபோல உலகின்பம் பகட்டி மினுக்கிச் சென்று, வந்து நிலையில்லாமல் இயங்கும்.

# திருமதி மோந்தெஸ்ஸோரி

(Madame Maria Montessori)

"புதன்"

திருமதி மோந்தெஸ்ஸோரி இன்று அடையாற்றில் இருக்கிறார். அவர் சிறுவர் கல்விக்காகப் பெரிதும் உழைத்தவர். அவர் கல்விமுறை உலகெங்கும் புகழ்பெற்று விளங்குகிறது. "எனது கல்விமுறையைப் பற்றிப் பேசமட்டும் நான் இங்கே வரவில்லை; என் வாழ்வின் அனுபவங்களை யெல்லாம் சொல்லவந்தேன். இத்தேசம் என் உள்ளத்தைக் கவர்ந்தது; அதனால் இந்த முதுமைப் பருவத்திலும் இதைக் காண வேண்டுமென்று ஆவலாக வந்தேன்" என்கிறார் இவ்வறிஞர். அவருக்கு இப்போது 75 வயது. அடையாற்றில் அவர் கல்விமுறையை இன்று 315 ஆசிரியர்கள் பயிலுகின்றனர். இவர்கள் பலதிசைகளி னின்றும் வந்தவர்கள். சென்னை மாகாணத்திலிருந்து மட்டும் 60 ஆசிரியர்கள் வந்து மோந்தெஸ்ஸோரிக் கல்விமுறையைப் பயிலுகின்றனர். உலகெங்கும் அம் மாதரசியைப் போற்றுகின்றனர். அவர் வரலாற்றையும், கல்விமுறையையும் தமிழர் அறிய வேண்டும்.

மாதாம் மாரியா மோந்தெஸ்ஸோரி இத்தாலியில் பிறந்தவர்; ஏழைகளிடம் இரக்கமும், குழந்தைகளிடம் ஓர் அன்னையின் அன்பும் நிறைந்தவர். இத்தாலியில் பெண்களுக்கிருந்த கட்டுப்பாடுகளை மீறி இவரே முதல்முதல் வைத்திய நிபுணர் (Doctor of Medicine) பரீக்ஷையில் தேறி டாக்டர் பட்டம் பெற்றார். இவர் ரோம் சர்வகலாசாலையைச் சேர்ந்த மூளை வைத்தியசாலையில் வேலை செய்தார். அச்சமயம் குழந்தைகளின் நிலைமையை இவர் கண்டார். குழந்தைகளே இனிவரும் பிரஜைகள். அவர்களை நன்றாக வளர்த்தலே நாட்டிற்குப் பாதுகாப்பாகும். டாக்டர் மோந்தெஸ்ஸோரியின் உள்ளம் குழந்தைகளை நாடியது. தாம் மருத்துவராயிருப்பதைவிடக் குழந்தைகளுக்கு ஆசிரியராயிருப்பது நலமெனக் கண்டு, அவர் ஒரு குழந்தைப் பள்ளிக்கூடத் தலைவியரானார். அது அரசாங்கப் பள்ளிக்கூடம். அங்கே மெலிந்து நலிந்த சிறுவர்களைப் பயிற்றினார். இக்குழந்தைகளை மோந்தெஸ்ஸோரி தமது சொந்தக் குழந்தைகளைப் போலப் பிரியமாக நடத்தி, வேண்டிய சுயேச்சை தந்து, அவர்களை நன்றாகப் பயிற்றினார். குழந்தைகளுடன் இவ்வாறு இரண்டாண்டுகள் பழகி இவர் ஒரு புதிய கல்விமுறையைக் கண்டுபிடித்தார். குறையுள்ள குழந்தைகளை இவரது அன்புவழி அற்புதமாகத் திருத்தியது. மற்றக் குழந்தைகளுக்கு இவர் வழி இன்பச் சுயேச்சை யளித்தது. 1907-ம் ஆண்டு ஒரு குழந்தை இல்லம் இவர் பொறுப்பில் நடந்தது. தமது கல்விமுறையை இவர் அங்கே பரிசோதித்துப் பெரும்பயன் கண்டார். பிறகு அம்முறைப் படியே பல பள்ளிக்கூடங்கள் எழுந்தன. அதன்பின் இவர்முறை நூலாக உலகெங்கும் பரவியது. எல்லா நாடுகளிலும் மோந்தெஸ்ஸோரி முறை புகழ்பெற்றது.

நான் உபாத்தியாயர் பரீட்சை தேறியதும் மோந்தெஸ்ஸோரி, புரோபெல் ஆகிய இரண்டு ஆசிரியர் கல்விமுறைகளிலும் பயின்றேன். மூன்று மாதம் குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடினேன். மோந்தெஸ்ஸோரி முறை சிறு குழந்தைகளுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். ஆனால் அதற்குரிய சாமான்களை வாங்கப் பணம் அதிகமாகிறது; நமது நாடு ஏழை நாடு. கடுமையான காலஅட்டவணை, அரட்டி மிரட்டிப் பிரப்பம்பழம் கொடுக்கும் உபாத்தியாயர் கொடுமை, பரீட்சைப் பேயின் பயம், பாடக் கட்டுப்பாடு—இவைகளெல்லாம் இல்லாமல், குழந்தைகள் சுயேச்சையாக, தாராளமாக, மனமகிழ்ச்சியுடன் கல்வி பயிலவேண்டும். குழந்தை ஒரு சிறு உலகம். அதற்குப் புலன்கள், மனம், புத்தி, சித்தம், பகுத்தறிவு, உணர்ச்சிகள் எல்லாம் உள்ளன. நாலு குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடுவதைக் காணுங்கள். காலை எழுந்து, பல் விளக்கி, பற்று விளக்கி, வீட்டை மெழுகிக் கோலம் போட்டு, செம்மண் பட்டையிட்டு, குளத்திற்குப் போய், குடந் தேய்த்து, புடவை துவைத்து, மஞ்சள் பூசிக் குளித்து, நீர் சுமந்து வந்து, அடுப்பு மூட்டி, உலை வைத்து, அரிசி களைந்து போட்டு, பருப்பு வேகவைத்து, குழம்பு வைத்து, கறி சமைத்து, அப்பளம் சுட்டு, வெந்நீர் வைத்து, கணவனை உப

சரித்துச் சோறுபோட்டு, கச்சேரிக் கனுப்பி, குழந்தைகளைப் பேணி, குழந்தைகளுக்கு புத்தி மதி சொல்லி விளையாட்டி, மாலை நீர் சுமந்து வந்து சமைத்து, கணவனை உபசரித்து, சாப்பாடானதும், வெற்றிலை போட்டு, குடும்ப விஷயங்கள் பேசி, கொஞ்சம் பாடி, குழந்தைகளைத் தூங்க வைத்து, பிறகு கணவனுக்குப் படுக்கை போடும் வரையில் ஒரு காரியம் பாக்கிவிடாமல் பெண் குழந்தைகள் நடிப்பதைப் பார்க்கலாம். ஆண் குழந்தைகள் பூவரசங்காயினுல் தேர்கட்டி, சாமி வைத்து, இலைக்குழலூதி, தகரத்தாளம் போட்டுத் திருநாள் நடத்துவர். சிறுவர் சிறு செங்கல்களைச் சுற்றிலும் வைத்து, மண் வீடு கட்டி, மண் செப்புகளைக் கொண்டு, பெரிய கலியாணங்களை நடத்துவர். வஞ்சமில்லாத அவர் உள்ளத்தினின்று வரும் சொற்களும், பாவனைகளும், ஆடல்களும் காணக்காணக் கண்ணிற் கின்பமாகும். உண்மையாக நம் நாட்டில் ஏழெட்டு வயதுச் சிறுவரும் சிறுமியரும் ஆடும் இயற்கையான விளையாடல்களே மோங்தெஸ்ஸோரி முறையாம்; பின்னதற்கு விலையுயர்ந்த சாமான்கள் வேண்டும் ; அவ்வளவே.

இம்முறைப்படி மூன்று வயது முதலே குழந்தைகளைப் பழக்குகின்றனர். பள்ளிக்கூடம் அழகான தோட்டங்களில் இருக்கும். வேனிற் காலங்களில் குழந்தைகள் கூடாரம் கட்டி விளையாடுவர். ஆசிரியர் ஒரு தாயாரைப் போலக் குழந்தைகளைக் கவனிப்பார். ஒருவரோடொருவர் சண்டை போடக் கூடாது, மரியாதையாகப் பேசவேண்டும், ஒருவர் வேலைக்கு மற்றவர் இடர் செய்யக்கூடாது. அவ்வளவே சட்டதிட்டம். குழந்தைகளுக்கு ஏராளமான விளையாட்டுச் சாமான்களுண்டு. அவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாயிருப்பர். ஒவ்வொரு சாமானையும் தாமே தொட்டுப் பார்த்துச் சோதித்து, உபயோகிப்பர். ஆடையணிகளைச் சுத்தமாக வைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், உணவாக்கல், மாடுகன்றுகளைப் பிரியமாக நடத்தல், தம்மினும் சிறிய குழந்தைகளைப் போற்றல், சாமான்களை அடுக்கல், எளிய தொழில்களைச் செய்தல், கைப்பழக்கம், கூர்ந்த பார்வை, கண்ணைக் கட்டிவிட்டு ஸ்பரிசத்தாலேயே பொருள்களை நிதானித்தல், ஐம்புல வளர்ச்சி, பகுத்தறிவு வளர்ச்சி, மனப்பான்மை வளர்ச்சி, கதை சொல்லுதல், நடித்தல், எண்ணெழுத்தறிதல், பாட்டு, நடனம், வீடுகட்டல், துணி தைத்தல், காயிதப் பூ செய்தல், நோயாளரைப் பாதுகாத்தல், ஓடி விளையாடல், பந்தாட்டம், தோட்டம் வைத்தல் முதலிய பல பயிற்சிகளால் குழந்தைகள் நல்ல வளர்ச்சி பெறுகிருர்கள்.

கண், காது, குரல், வாய், கால், உடல், மனம், குணம், மூளை அனைத்திற்கும் முறையாக நல்ல பயிற்சி கிடைக்கிறது. பள்ளிக்கூடம் என்ருல் நமனைப் போன்ற உபாத்தியாயர், எம தண்டம் போன்ற பிரம்பு, குருட்டுப் பாடம், பரீக்ஷை மார்க்கு, தேர்வு, அடி, வசவு என்றஞ்சிக் குழந்தைகள் அங்கே போகவே மனமின்றி முரண்டு செய்வதைக் கண்டிருக்கிருேம். ஆனல் மோங்தெஸ்ஸோரிக் கல்விமுறை சுயேச்சையானது; குழந்தைகள் ஆவலாகப் பள்ளிக்கூடம் செல்கின்றனர். வீட்டைவிடப் பள்ளிக்கூடம் இன்பமாயிருக்கிறது.

இந்தக் கல்வி முறையைக் கண்டு, கோடிக் கணக்கான குழந்தைகளுக்கு மகிழ்வீந்த மோங்தெஸ்ஸோரி இன்று நமது நாட்டில் நமக்கருகே வந்து தமது இன்பக் கல்வி முறையைப் போதிக்கிருர். இவர் இத்தாலியும் பிரெஞ்சும் கொஞ்சம் ஆங்கிலமும் பேசுவார்.

குழந்தையே நாடு ; சிறிது பெருகியே பெரிதாகிறது ; சிறிய சம்பவங்களே பெரிய சம்பவங்களாக வளரும். அற்பமென்று எதையும் அசட்டை செய்யக்கூடாது. அற்ப விஷயங்களிலும் கவனமாக நடக்கவேண்டும். குழந்தைகளின் நடை உடை பாவனை, ஆடல் பாடல், படிப்பு, சிந்தனை, ஊண், உறக்கம், பயிற்சி அனைத்திலும் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். நமது நாட்டில் ஒவ்வொரு தாயும் ஒரு மோங்தெஸ்ஸோரி ஆதல் வேண்டும்.

# மகளிர் பிறந்த இடத்தில் பயன்படார்

(லயோலா கல்லூரியில் தமிழ்ப்புலவராயிருந்த திரு. கு. மதுரை முதலியார்)

எம்மொழியிலும் இல்லாத் தனிச் சிறப்பொன்று நம் தமிழ்மொழியில் இருப்பதைத் தமிழ் அறிஞர் அனைவரும் அறிவர். அஃதாவது, பண்டைத் தமிழரின் ஒழுக்கத்தை விளக்கிக் காட்டும் இலக்கணமே. இவ்விலக்கணத்தைப் பொருள் இலக்கணம் என்பர் புலவர். இஃது அகம், புறம் என இருவகைப்படும். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள், அகம் இன்பத்தைப் பற்றியும், புறம் அறம், பொருள் என்னும் இரண்டைப்பற்றியும் கூறும். நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் உள்ள பண்டைப் பனுவல்களை யெல்லாம் தொகுத்துப் பார்ப்பின், அகத்தைச் சார்ந்த நூல்களே அதிகமாய் இருக்கக் காண்கின்றோம். இதனால் தமிழரின் வாழ்க்கை இன்பத்தின் வடிவாய் இருந்திருக்க வேண்டும் என்பது ஒருவாறு புலனும்.

அகப்பொருளில் 'உடன்போக்கு' என்னும் துறை சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியைக் காண்போம்; ஒரு தலைவன், தலைவியை அவளது பெற்றோர்க்கும் மற்றையோர்க்கும் தெரியாது, பாங்கியின் உதவியால் அழைத்துக்கொண்டு காட்டின் வழியே கடிது செல்கின்றான்.

தலைவியை வீட்டில் காணாது கலங்கிய செவிலித்தாய் ஆற்றொணாத் துன்புற்றுத் தன் இன்னுயிர் போன்ற தலைவியைத் தேடிக்கொண்டு அவள் சென்ற அக்காட்டின் வழியே வருகின்றாள். அப்பொழுது அக்காட்டிடை, உறியில் பொருந்திய கமண்டலத்தையும் முக்கோலையும் முறைபடத் தோளிலே வைத்து, கதிரவனது கதிர்களின் வெம்மையைத் தடுத்து இனிய நிழலைத் தரும் குடையின்கீழ் சென்று கொண்டிருந்த அந்தணர் சிலரை அவள் காண்கின்றாள்.

பின்னர், அச்செவிலித்தாய் அப்பெரியோரை நோக்கி, "வெவ்விய காட்டில் போதலை இயல்பாகவுடைய ஐயன்மீர், என்மகள் ஒருத்தியும் பிறர் மகன் ஒருவனும் இவ்வழிச் சென்றதைக் கண்டீரோ?" என அருவிபோல் கண்ணீர் வார வினவினாள்.

செவிலித்தாயின் நிலையைக்கண்ட அந்தணரும் அகம் வருந்தி நின்றனர். பின்பு, அப்பெருந் தகையாளர் செவிலியை உற்று நோக்கி, "அன்னாய், வருந்தற்க! அழகெலாம் திரண்டோர் உருவெடுத்தாலனைய உன் அருமை மகளையும், ஆண்மக்கட்குக் கூறும் அழகெலாம் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு மகனையும் கண்டு, அப்பெண்மணி மேற்கொண்டுள்ள நெறி அறநெறியே யெனத் துணிந்து அகமிக மகிழ்ந்தோம். இன்னும் கேளாய்! நறுமணமார்ந்த சந்தனம், மலையில் பிறந்தனவாயினும், தம் உடம்பில் அப்பிக் கொள்வார்க்குப் பயன் கொடுப்பதல்லது, அம்மலைக்கு என்ன பயனைக் கொடுக்கும்? அவ்வாறே உன் மகளும் பயன்படும் பருவத்தில் உனக்கும் உன்னைச்சார்ந்தவர்க்கும் பயன்படாள். சிறந்த வெண் முத்துக்கள், கடலிடத்தே பிறந்தனவாயினும், தம்மையணிவார்க்குப் பயன்படுவதல்லது, அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? அவ்வாறே, உன்மகளும் பயன்படும் பருவத்தில் உனக்கும் உன்னைச் சார்ந்தவர்க்கும் பயன்படாள். எழுநரம்பாற் கூட்டிய இனிய வோசைகள், யாழிலிருந்து பிறந்தனவாயினும், பாடுவார்க்குப் பயன் கொடுத்தல் அல்லது அந்த யாழுக்கு என்ன பலனைக் கொடுக்கும்? அவ்வாறே உன்மகளும், பயன்படும் பருவத்தில் உனக்கும் உன்னைச் சார்ந்தவர்க்கும் பயன்படாள். ஆகையால், கற்பிற் சிறந்த அக்காரிகை நிமித்தம் நீ கவலற்க! அப்பெண்ணரசி, பெற்றோரைக் காட்டிலும் பேரன்பு செய்யும் பெருந்தகையைக் கணவனாகக் கொண்டு அவன் பின்னே சென்றாள். இம்மையில் இவ்வண்ணம் கற்புப்பூண்டு நிகழ்த்தும் இல்லறமே எல்லா அறங்களிலும் தலையான அறம். இவ்விருவரும் நீங்காமல் மறுமையில் துறக்கம் செல்லுதற்குரிய வழியும் இதுவே" என அவள் மனம் தெளியச் செய்தனர். இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் பண்டைத் தீந்தமிழ்ச் செய்யுளைப் பன்முறைப் படித்து இன்புறுவோம்:

'எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீர் இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும
காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை
ஆணெழில் அண்ணலோ(டு) அருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்(கு) அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்(கு) அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்(கு) அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்(கு) அனையளே

எனவாங்கு,

இறந்த கற்பினாட்(கு) எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
அறந்தலை பிரியா ஆறுமற் றதுவே'

—கலித்தொகை, பாலை-9.

---

# பேரணைகள்

1. **சுக்கூர் அணை** :—இது வட இந்தியாவில் சிந்து நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 4675 அடி. 55 லக்ஷம் ஏகர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கிறது.

2. **பம்பாயிலுள்ள லாய்ட் அணை** :—பம்பாயைச் சார்ந்த **பாத்கர்** என்னுமிடத்தில் உள்ளது. இதற்குச் செலவான சாந்தும் செங்கலும் 215 லக்ஷம் கன அடி ஆகும். இச்சாந்து செங்கல்லைக் கொண்டு 6 அடி உயரம் $1\frac{1}{4}$ அடி அகலமுள்ள சுவர் ஒன்றைத் தொடர்ச்சியாக 520 மைல் நீளம் கட்டலாம்.

3. **மேட்டூர் அணை** :—காவேரியின் குறுக்கே உள்ளது. நீளம் 5300 அடி; உயரம் 176 அடி. 935 லக்ஷம் கன அடி நீரைத் தேக்குகின்றது. 1 கன அடி என்பது நீளம் 1 அடி, அகலம் 1 அடி, உயரம் 1 அடி அளவுகளையுடையது.

4. **நிஜாம் சாகர் அணை** :—இந்தியாவின் இரண்டாவது பெரிய அணை. கோதாவரியின் கிளை நதியாகிய மன்சிராவின் குறுக்கே 2 மைல் நீளம் கட்டப்பட்டுள்ளது. இத்தேக்கத்தின் நீர் 50 சதுர மைல்கள் பரவியுள்ளது. இந்த நீர்ப் பரப்பு 40 கிராமங்கள் இருந்த இடத்தை ஆக்கிரமித்துள்ளது. இதன் நீர் 300 ஆயிரம் ஏக்கர் நிலங்களின் நெல் கரும்பு சாகுபடிக்கு உதவுகின்றது.

# பாரத சக்தி மஹாகாவியம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

## புத்த பகவான்

பேதைச் செல்வத்தைப் பிணியெனத் துறந்துமெய்த் தவமார்
மேதைச் செல்வத்தை மேதினிக் கினிதுறத் தந்தான்
போதிச் செல்வனும் புத்தனைச் சித்தனை ஞானச்
சோதிச் செல்வனைத் தொழுதவர் பதங்களைத் தொழுவாம்.

தந்தை இன்பமாளிகை யமைத்துச் சுகபோகங்களை நிரம்பத் தந்தான். "இவையெல்லாம் அநித்தியம், அஞ்ஞானம், பேதைமை, பந்தப்பிணி தந்து துயரில் ஆழ்த்துவன" என்று அனைத்தையும் ஒரே இரவில் துறந்து வனஞ்சென்று தவம் புரிந்தான் கௌதமன். அத்தவத்தால் விளங்கிய உயர்ந்த ஒள்ளிய விஞ்ஞானச் செல்வத்தை ஆசையாணவ மோகபாசங்களற்று அறிவும் அமைதியும் அருளும், அன்பும்கொண்டு இனிது வாழ வேண்டி உலகிற்களித்தான். அவன் போதியடியில் வீற்று தியானித்த தவச்செல்வன், புத்தன், பூரணம் பெற்ற சித்தன், ஞானஜோதியாகிய அரிய செல்வத்தைப் பெற்றவன். அவன் மலரடியைத் தொழுதவர் பதத்தைத் தொழுவாம். அவன் மலரடிக்கு அவ்வளவு சிறப்புண்டு. ௬௫

## மஹாவீர பகவான்

பற்ற றுத்தவன் பதினறம் போற்றிய பகவன்
முற்றும் அன்புரு வானவன் அஹிம்ஸையின் முதல்வன்
குற்ற மற்றசற் குணநிதி அதிமஹா வீரன்
பொற்றிருப் பதம் போற்றினர் புண்ணியம் புகழ்வாம்.

மஹாவீரன் தேவதைகளால் 'அதிமஹாவீரர்' என்று வணங்கப்பெற்ற சித்தன். எல்லாப் பற்றுக்களையும் நீத்தவன்; வினைகளை உதிர்த்தவன். பொறுமை, பணிவு, நேர்மை, தூய்மை, வாய்மை, அடக்கம், தவம், தியாகம், பற்றின்மை, பிரமசரியம் ஆகிய பத்து அறங்களையும் காத்தவன். பேரின்பச் செல்வம், ஆன்ம பரிபூரணம், வீரியம், யோகத் திரு, புகழ், ஞானம், வைராக்கியம் ஆகிய பெருமைகள் நிறைந்த பகவன். உள்ளும் புறமும் முற்றிலும் அன்பே வடிவாய் விளங்குவோன். அஹிம்ஸா தர்மத்தை உபதேசித்த முதல்வன், தலைவன், குரு; குற்றமற்றவன், நற்குணச் செல்வன். அத்தகைய அதிமஹா வீரனுடைய அழகிய பொன்னடிகளைப் போற்றினவர் புண்ணியராவார். அவர் புண்ணியத்தை நாம் புகழ்வாம். ௬௬

## அசோகன்

புத்தர் பொன்மொழி புவியெலாம் பரவிட நின்றான்
கத்தி யின்றிநற் கருணையால் உயிர்களைக் காத்தான்
குப்த மௌரியன் குலமணி அசோகனைப் போலே
இத்த லத்தினிற் சனகன்பின் யாவரே யிருந்தார்?

சந்திரகுப்த மௌரியன் சாணக்கியன் உதவியால் மகத ராஜ்யத்தை வென்று முறையாக நீதி செய்தான். அவன் குலமணி அசோகனாவான். அவனுக்குப் 'பிரியதர்சனன்' என்று காரணப் பெயருண்டு. அசோகன் கலிங்கப் போரில் தான் கொன்று குவித்த வீரர்கும்பலைக் கண்டு மனமிளகி, அஹிம்ஸை விரதம் பூண்டான்; துறவுடன் அருளாட்சி செய்தான். புத்தர் சொன்ன பொன்மொழியாகிய தர்மபாதத்தை அனுட்டித்தான். இலங்கை, பர்மா, திபேத்து, யவனம் முதலிய நாடுகளிலும் அதைப் பரப்பினான். பொது ஜனங்கள் பார்த்து நடக்கவேண்டி அறக்கோட்பாடுகளைத் தூண்களில் செதுக்கி வைத்தான். கத்தி யெடுக்காமலே அமைதியாக, அன்பும் கருணையும் கொண்டு மன்னுயிர்களைத் தன்னுயிர்போலே காத்தான். அசோகனைப் போன்ற மன்னர் ஞான ஜனகனுக்குப் பின்னே யாரும் இல்லை யென்னலாம். ௬௭

## புகழ்பெற்ற அரசர்

புஷ்ய மித்திரன் சதகரன் புகழ்பெறுங் கனிஷ்கன்
விஷ்ணு வர்த்தனன் விக்கிர மாதித்தன் சிமுகன்
ஹர்ஷன் ஆதித்தன் கிருட்டின தேவன் சுவர்ண
வர்ஷத் தாற்கவி வளர்த்தநம் போஜன்வா ழியவே !

மயூரமரபை வீழ்த்திப் பட்டத்திற்கு வந்து அந்தண்மை விளங்க அரசாண்ட புஷ்யமித்திரன், ஆந்திர சதகர்ணி, சிமுகன், சீனத்திலும் அரசு விரித்த கனிஷ்கன், விஷ்ணுவர்த்தனன், விக்கிரமாதித்தன், தனது செல்வத்தைக் குடிகளுக்குத் தானதருமமாகத் தந்த ஹர்ஷவர்த்தனன், ஆந்திர திலகமான கிருஷ்ண தேவ ராயர், ஆதித்ய குப்தன், மழைபோலப் பயன் கருதாது தாராளமாகப் பொன்னை அளித்துப் புலவர் கவிப் பயிரை வளர்த்த போஜராஜன் ஆகிய இவர்களெல்லாம் சிறந்த மன்னர்களாவார். இவர் பெயர் வாழ்க ! சூஅ

## சித்தாந்தப் பெரியார்

அன்பெனும் சிவம், அன்பினல் அன்பருக் கறிவாம்
இன்பமே யது தில்லையாம் இதயத்தில் வளரும்
துன்பப் பற்றினைத் துடைத்தருட் சுடர்வழி சேர்மின்
என்பர் தூயசித் தாந்தத்தின் இணையறு பெரியோர்.

அன்பே சிவம்; உள்ளுருகும் அன்பினல் அன்பருக்கு அதுவே தன்னை அறிவிக்கும்; அப்பொருளே இன்பமானது. உங்கள் உள்ளமே தில்லைவெளி, அதில் அப்பொருளே நடராஜ மூர்த்தமாகத் திருநடனம் செய்கிறது. ஆடுந் திருவடியைப் பற்றுங்கள்! ஆசை ஆணவம் ஆகிய வினைப்பற்றுக்களை ஒழியுங்கள் ! அதற்கு அருளே வழி. இருள் வழி செல்லாதீர்கள் ! அருட்சோதி வழியே செல்மின்கள் ! சரியை, கிரியை யோகம், ஞானம் ஆகிய நாற்படிகள் ஏறித் திருவருளும், அறிவும் பெற்றுச் சிவத்தை இரண்டறக் கூடுமின்கள் ! என்று சித்தாந்தப் பெரியார் உபதேசித்தனர். சூகூ

## திருவடியார்

உப்பும் அப்பும்போற் சிவத்துடன் ஒன்றிய தூயர்
அப்பர் சம்பந்தர் சுந்தரர் வாதவூ ரடிகள்
ஒப்பு மெய்கண்டார் மந்திரம் உரைத்தமா மூலர்
செப்புமின் இவர் திருப்பெயர் சென்மமுய் திடவே !

உப்பும், நீரும்போலே சிவத்துடன் இரண்டற ஒன்றுபட்ட பரிசுத்த முத்தரான, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், அகச்சமயம், புறச்சமயம் எல்லாம் ஒப்பும்படியான சிவஞான போதத்தை அருளிய மெய்கண்டமாமுனிவர், திருமந்திரம் என்னும் அற்புத யோகநூ லருளிய திருமூல முனிவர் ஆகிய இவர்கள் திருநாமத்தைச் சொல்லுங்கள் ! உங்கள் மானிடப் பிறவி உய்ய வேண்டுமானல் இவர்கள் திருநாமத்தைச் சொல்லி இவர்கள் காட்டிய வழியில் நடந்துவாருங்கள் ! எ0

வாய்மனங் கடந் தருள்வழி வாய்ந்திடும் பொருளே
தோய ருட்சுடர் வள்ளலார், துறவிவெண் காடர்
தாயு மானமா முனிவர்தந் தமிழெலாம் அமிழ்தம்
தூய காதலோ டருந்துமின் பொருந்துமின் சுகமே !

சுத்த சமரச சன்மார்க்க தேசிகரான அருட்சோதி வள்ளலார், முற்றுந் துறந்த பட்டினத்தார், சித்தாந்த வேதாந்த சமரசஞானியான தாயுமான முனிவர் ஆகியோர் சொல்லுக்கும் நினைப்பிற்கும் எட்டாத திருவருளாலேயே கைகூடும் பேரின்பப் பொருளிலேயே தோய்ந்து ஜீவன் முக்தர்களாய் வாழ்ந்தவர். இவர்கள் செய்த தமிழ்ப் பாடல்கள் அமுதினும் இனியன. அவற்றைப் பரிசுத்தமான பதியன்புடன் கற்று அனுபவியுங்கள் ! சுகம் பெறுவீர்கள். எக

'பத்தி செய்குமின் ; பதமலர் பற்றிவீ டடைமின்
முத்தியின் முதல்வன் ஹரி முகுந்த ' னென் றோதும்
மத்துவர், உடையவர், நிமை, மாதவ னன்பர்,
நித்தமும் நம துளமிசை நிலவுக மாதோ !

மத்வாசாரியார், இராமானுஜாசாரியார், கிருஷ்ண சைதன்யர், ஆழ்வார்கள், கபீர், துளசிதாஸ், மீராபாய், ரவிதாஸ் முதலிய எண்ணிறந்த விஷ்ணு பக்தர்கள், "ஹரி, முகுந்தன், நாரணன் ஆகிய விஷ்ணுமூர்த்தியே நமது பந்தங்களை நீக்கி அருள் வழிகாட்டி முத்தியளிக்கும் முதல்வனாவான். அவனையே பக்தி செய்யுங்கள் ! அவன் திருவடி மலரையே அன்பினாலும், தூய ஆர்வத்தாலும் பற்றிப் பேரின்ப வீடுபெறுங்கள்" என்று உபதேசித்தனர். இந்தத் தெய்வக்காதலர் நமது இதயத்தில் நாடோறும் விளங்கி நமது பதியன்பைத் தூண்டுக. ௭௨

சாதி யற்றது சமரசச் சுடரது தர்க்க
வாத மற்றது மோனத்தில் வளரும்சுத் தான்மா
போத மானது பொருளது நீயெனப் புகலும்
ஆதி சங்கரன் அறிவினால் ஐக்கியம் அடைவோம்.

ஆதி சங்கரபகவான் ஜீவப்பிரமைக்கியத்தை உபதேசித்தார். அதை விளக்கிக் கணக்கற்ற, அற்புதமான பாடல்களையும் விரிவுரைகளையும் செய்தார். கீதை, பிரமசூத்ரம், உபநிடதம் இம்மூன்றற்கும் அக்கொள்கைப்படியே வியாக்கியானம் செய்தார். 'ஒன்றே பொருள் அல்லது பிரமம், அது சாதிமதபேதமற்றது, தர்க்கவாதங்களில் அடங்காதது. வாய்மனம் கடந்தது. அது எல்லார் இதயத்திலும் 'நான்' என விள்ங்கும் சமரசச் சுடரானது ; மனம் அடங்கிப் புத்தியில் லயித்து புத்தி இதயத்தில் லயித்த உள்மோனத்தில் விளங்குவது. அது சிற்போதமாக, அருளுணர்வாக, தானே தானாக விளங்குவது. அதுவே உண்மை, அதுவே நீ, தத்வமஸி' என்பதே சங்கரர் உபதேசசாரம். அவர் சொன்ன ஞானமார்க்கத்தால் 'நான் பிரமம், எல்லாம் பிரமம்,' என்னும் ஐக்யானுபூதி எய்துவோம். ௭௩

## ஜாரதுஷ்ட்ரன், கிறிஸ்து, முஹம்மது நபி

மிக்க வுள்ளன்போ டிறைவனை மேவுமின் என்ற
சொக்கத் தூயனும் ஜாரதுஷ் டிரன்சிலு வையிலே
திக்கெ லாந்தொழுந் தியாகத்தீ யெனவளர் கிறிஸ்து
மக்க மாநகர் நபிமணி வாழிய மாதோ !

மனோவாக்குக்காய சுத்தமே ஜெந்தாவஸ்தாவின் சாரம். அதைப் புகன்றவர் ஜாரதுஷ்டிராராம் சொக்கத் தங்கம்போன்ற பரிசுத்தவான். சிலுவையே கிறிஸ்து தருமச்சின்னம். அது அகங்கார நாசத்தைக் குறிக்கும். அதில் நாற்றிசை யுலகெலாம் வியந்து பயந்து வணங்க, தியாகத் திக்கொழுந்துபோல் கிறிஸ்துபகவான் விளங்கினார். அந்த மஹா தியாகத்தினாலேயே சிலுவைக் குறியுடன் அவர் இன்று கோடிக்கணக்கான அன்பர் உள்ளத்தில் வளர்கிறார். மக்கமாநகரில் விளங்கி, ஹிராக் குகையில் தியானித்து, திருவருள் பெற்று, திருக்குரானை அருளிய நபிகள் நாயகமாகிய முஹம்மது ஸல்லம் மதீன நகரத்தில் இஸ்லாமியக் குடியரசை நாட்டினார். இந்த மூன்று ஸெமிட்டிக் சமயாசிரியர்களும் மிகவும் தீவிரமான உள்ளார்ந்த அன்புடனும் ஆர்வமுடனும் அடைக்கலத்துடனும் இறைவனை வணங்கி அவனருளை மேவும், பக்தி மார்க்கத்தையே உபதேசித்தனர். இவர்கள் பெருமை எந்நாளும் உலகில் வாழ்க ! ௭௪

## மஹான்கள்

தீர ராகிய நானகன் கோவிந்த சிங்கன்,
வீர ராமதாஸ் விரும்பு சிவாஜி, ராம்மோஹன்
ஆரி யர்க்குயி ரான தயானந்தன், ஞான
வாரி யாம்குரு பரமஹம் ஸன்புகழ் வாழ்க!

ஆத்ம தீரரும் சிறந்த அருள்வணக்கம் செய்த தெய்வ பக்தரும், 'ஸத்ஸ்ரீ அகால்' என்னும் முழக்கத்தால் பாஞ்சாலத்தைத் தியாகத்திற் கெழுப்பிய மஹான் களுமாகிய குரு நானகர், ராமதாஸ், தேகபஹதூர், சுதந்தரத்திற்கும் சுதர்மத்திற்கும் தர்மாவேசத்துடன் போர்புரிந்த தவசீலனுகிய குருகோவிந்தன், மந்திர சித்தனுன சமர்த்தகுரு ராமதாஸ், அவனருளால் உதித்துத் தருமத்தையும் சுதந்தரத்தையும் காத்து ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திய சத்ரபதி சிவாஜி, உடன்கட்டை பெண்ணடிமை மூடக்கொள்கைகள் அனைத்தையும் ஒழித்து, பிரமசமாஜம் ஏற்படுத்தி, சமயம், கல்வி, சமுதாயம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் செய்த ராஜாராம்மோஹன் ராய், ஆரியர்க்குச் சாதிமத பேதமில்லாமல் வேத வாழ்வை விளக்கி ஆரிய சமாஜத்திற்கு உயிர்போல விளங்கும் தயானந்த முனிவன், சக்தியருளால் சர்வமத சமரசக் கொள்கைகளை எளிய முறையில் உபதேசித்த ஞானக்கடலும் விவேகானந்தர் குருவுமான ராமகிருஷ்ணபரமஹம்ஸர் ஆகிய மஹான்களெல்லாம் நமது நாட்டிற்குப் புத்துயிரும் புதிய சக்தியும் அளித்தவர்கள். இவர்கள் புகழ் என்றும் வாழ்க! ௭௫

## சத்தியராஜன்

இனைய வீரரும் இறைவரும் பகவரும் இலகும்
புனிதமாம் அருட் குலத்தினில் இறுதியாய்ப் பூத்தான்
தனையொவ் வாத்திரு மிகுந்தவன் சத்தியன் என்போன்
இனிய வன்வள நாட்டினை இசைத்திடு வோமால்.

இப்படிப் பெருமைபெற்ற மஹாவீரர்கள், நீதி மன்னர்கள், அருட்பெரியார்கள், தெய்வ மனிதர்கள் விளங்கிய அருட்குலம் நீண்டு செழித்தோங்கியது. அதில் கடைசியாகத் தோன்றியவன் சத்தியராஜன். அவன் ஒப்புயர்வில்லாத அருட்செல்வன், பொருட்செல்வன், அறிவுச் செல்வன். அவனே புண்யபூமி முழுதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டான். அவன் ஆண்ட புண்ணிய நாட்டின் புகழை இனிச் சொல்லுவாம். ௭௬

அருட்குலப் படலம் முற்றிற்று

---

(௩௩-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதியாரவர்களின் செந்தமிழ்ப் பணி மிகவும் பாராட்டற்பாலது. இச்சமயம் யாவரும் தமிழன்னையை வனப்புறச் செய்ய முன் வருவார்களாக.

சக்தியின் மாட்சியைக் குமரகுருபரர் நறுந் தமிழ்ப் பெருமொழியுட் பெய்துரைத்த பாவை ஈண்டுத் தருவாம்.

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத் தீந்தமிழி னொழுகு நறுஞ்சுவையே!
அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர் சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென்பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தி லழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக! வருகவே!

தமிழின் நறியசுவை சத்தியாதலை எவ்வளவு இரசமாக இப்பாடல் தெரிக்கின்றது! தமிழ் நூற்பரப்பை அளவிட முடியாதாயினும், சில சிறந்த அரிய நன்னூல்களைப் பயின்று மாணவர்கள் சிறப்படையவும், நாட்டுப் பற்றுடன் சமயப்பற்றுள் திளைக்கவும் சக்தி யருள் உண்டாவதாக!

சா நி

# புதிய பாரதம்

(திரு. கோட்டாறு தே. ப. பெருமாள்)

உதித்து வந்தனன் ; உரிமைச் சூரியன்
உலைந்த பாரதம் கண்டிடவே
மிதித்தே யெம்மை வருந்தி நின்ற
மேகங்கள் சென்று மறைந்தனவே !

வீரம் பிறந்தது ; வாய்மை எழுந்தது ;
வீழ்த்துந் தீயச்சம் ஒழிந்ததுவே
சூர மமையப் புத்துணர் வெய்தினம்
சூழ்ச்சிகள் யாவும் அழிந்தனவே !

சாதிகள் மாய்ந்தன ; சண்டைக ளோய்ந்தன ;
சமரச ஞானம் பிறந்ததுவே
தீது புரியும் தெவ்வர்கள் மாய்ந்தனர் ;
தீரமும் எம்மில் எழுந்ததுவே !

ஒற்றுமை கண்டிட ஊக்கம் பிறந்தது ;
உள்ளத் திலன்பு நிறைந்ததுவே
வெற்றுப் பகைமைகள் விட்டுப் பிரிந்தன ;
வெம்மைக் கொடுமைகள் மாய்ந்தனவே !

பெண்ணை யடிமைப் படுத்தும் வழக்கப்
பேயுமே யிங்கு மறைந்ததுவே
கண்ணிலே மண்ணை யள்ளியே தூவும்
கசடர் செய்கையும் மாய்ந்தனவே !

நீதிகள் வந்தன ; நேர்மைகள் தோன்றின ;
நீணிலம் கண்டு வியந்திடவே
சூதுகள் மாய்ந்தன ; வாதுகள் தீர்ந்தன ;
சுதந்திரம் இங்குப் பெருகியதே !

கலைகள் வந்தன ; காவியம் வந்தன ;
கண்ட தொழிலெலாம் வந்தனவே !
நலிவைப் போக்கும் நல்ல வளங்களும்
நம்மை யேயிங்குச் சூழ்ந்தனவே !

ஏழையர் ஏக்கம் இன்னல் ஒழித்தனர் ;
இன்பத்தை யவரும் கண்டனரே
வாழப் பிறப்பித்த பாரதத் தையவர்
வானுல காகவும் கண்டனரே !

# அனைவரும் தோட்டிகளே!

(காந்தியடிகள்)

தீண்டாமை நாமறிந்திருப்பதைவிட இன்னும் அதிகமான கேடுகட்குக் காரணமாகும். கிராமங்களின் சுகாதாரக் கேட்டிற்கு இத் தீண்டாமை உணர்ச்சியே காரணம். நம் மலத்தை நாம் தீட்டென்று அஞ்சிச் சுத்தஞ்செய்யாது விட்டு விடுகிறோம். ஆதலால் அசுத்தத்தில் புரளக் காரணமாகிறது. சகல வேலைகளிலும் மிக முக்கியமானதாகிய தோட்டி வேலையை நம் சகோதரர்கள் ஒருசாராரிடம் ஒதுக்கி விட்டு விட்டு, அவர்களை மனித சமூகத்தின் குஷ்ட ரோகிகளாக எண்ணுகிறோம். அவர்களைப்பற்றி நாம் சிந்திப்பதே இல்லை.

இந்தச் சமூகச் சீர்கேட்டிற்குப் பரிகாரம் நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தத் தோட்டியாக இருந்து கொள்வதாகும். அப்படி முயன்றோமானால் விரைவில் சுத்தமாயிருப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வோம். அசுத்தம் காரணமாகத் தோன்றி நம்மைப் பீடிக்கும் பல நோய்கள் மாயும். அதனால் நமக்குப் பொருள் லாபமுமுண்டு.



ஜி. ஐ. பௌலர் என்பவர் "செல்வமும் குப்பையும்" என்ற புத்தகத்தில் ஒரு விஷயம் கூறியிருக்கிறார். மனிதர் மலத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினால் வருஷத்தில் 2 ரூபாய் விகிதம் மிச்சமாகும் என்கின்றார். பிரயோஜனகரமான அந்த எருவை நாம் வீணாக்கி நோயைத் தேடிக்கொள்ளுகிறோம். புரொபசர் பிரல்டினி என்பவர் "குப்பைகளைப் பிரயோஜனப்படுத்தும் வழி" என்ற புத்தகத்தில் சொல்லியிருக்கும் ஒரு விஷயத்தை மிஸ்டர் பௌலர் மேற்கோளாக எடுத்துக் காண்பிக்கிறார். அதனால் புரொபசர் பிரல்டினி "டில்லியில் வசிக்கும் 2 லட்சத்து 82 ஆயிரம் ஜனங்கள் கழிக்கும் மலத்தினின்றும் கிடைக்கும் உப்பு வாயு (Nitrogen) 10 ஆயிரம் முதல் 95 ஆயிரம் ஏக்கர் வரையிலும் பண்படுத்தும் என்று சொல்வதாகத் தெரிகிறது. நமது தோட்டிகளை நாம் சரிவர நடத்தாததனால் தான் புராதனப் பெருமை கொண்ட நம் டில்லி மாநகரம் இன்று கொள்ளை நோய்கட்கு அங்கமாயிருந்து வருகிறது. நாம் இதற்கு வெட்கப் பட்டுத் தலைகுனிய வேண்டுவதாகும். நாம் எல்லோரும் தோட்டிகளாய் மாறினோமானால் நாம் எவ்வாறு ஒழுங்குற நடந்து கொள்ள வேண்டு மென்பதையும், நமக்குத் தீங்கு பயக்கும் அவ் இழிபொருளாகக் கொள்வதை எப்படிச் செடி கொடிகட்கு உணவாய் மாற்றுவதென்பதையும் கற்றுக்கொள்வோம். 30 கோடி மக்களாகிய நாம் (இந்தியர்) பௌலர் கூறுகிற மாதிரி புத்தி சாலித்தனமாக நடந்துகொண்டால் வருடத்தில் 60 கோடி ரூபாயை மிச்சப்படுத்திக் கொள்வோம்.

இந்தக் காரியம் எப்படி நடக்கும்? கஷ்டமானதல்லவாவென்று யாரும் சஞ்சலமடைய வேண்டாம். கூறுவது சரி என்று நம்பிக்கை பிறந்தவர்கள் இப்பொழுதே வேலையில் இறங்கவேண்டும். அப்படி இறங்குபவர்கள் ஆரம்ப சூரத்தனத்தோடு அல்லாமல் சலியாமல் வேலை செய்வார்களானால், நிச்சயமாக ஒவ்வொருவரும் பின்பற்றவே செய்வார்கள். நம்பிக்கை பிறந்தால் என்றுகூடச் சொல்ல வேண்டியதில்லை. கால்நடை எருவைப்போலவே மனிதர் மலமும் பிரயோஜனமானது என்று யூகிப்பதற்கு நம்பிக்கை தேவையில்லை, அதை நடைமுறையில் தினமும் காண்கின்றோம். பல வருடங்களால் மூடிக்கிடக்கும் நம் மடியை உதறித்தள்ளுவதுதான் அவசியம். சோம்பலில்லாமல் சிலர் நிதானமாக உழைப்பார்களானால் நாளைப் பலர் அதனைப் பின்பற்றி விடுவார்கள்.

முன் இதழ்த் தொடர்ச்சி

# கைலாச நிகண்டு சூளாமணி

(இராவ்சாகிப் ஸ்ரீ S. வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.)

## இடப்பெயர்த் தொகுதி

241. புடவி காசினி புவனம் பவனம்
படியிகம் வையம் பார்தலம் அகலிடம்
தாரணி ஞாலந் [தரா] தலம் பூமி
புரம்புவி குவலையம் பொழில்பூ தலநிலம்
தரணி வசுந்தரை சாந்தை வசுதை
மண்கூ வுலகம் வசுமதி அசலை
சகம்நகர் விபுலை தரித்திரி மேதினி
நானிலந் தாலம் நகம்தாரை நாடு
தாத்திரி மகியுகந் தரைகோப் பிருதுவி
அளக்கர் நிலைகோத் திசரை யவனி
புவனி யம்பரி பூதிய மம்புவி
கிடக்கை யம்புய மண்டலம் ஆடகி
பொறைவேலா வலையம் பூவேந்த னுரிமை
நேமி பணிபரம் நீளையென வனைத்தும்
பூமி யென்னும் பொருள வாமே.
242. புவன் நாடு பொழில்தலம் புடவி
பவன முலகின் பொதுப்பெயர்ப் பால.
243. வடபால் விதையந் தென்பால் விதையம்
வடபாற் பாரதம் தென்பாற் பாரதம்
வடபா லிரேவதந் தென்பா லிரேவதம்
குடபால் விதையங் குணபால் விதையம்
மத்திம கண்டமென் றத்திற மனைத்தும்
நவகண் டத்தின் நாம மாகும்.
244. சம்புத் தீவும் சன்மலித் தீவும்
கிரவுஞ்சத் தீவும் குசையின் தீவும்
பிலக்கத் தீவும் சாகத் தீவும்
புட்கர மென்னப் புகழ்பெருந் தீவுமென்
றுட்படுந் தீவே ழுடையதிப் புவியே.
245. ஏழ்பெருந் தீவு மேழ்புவி யெனப்படும்.
246. ஒளியூ றிரத மோசை நாற்றமெனக்
குளிர்கடல் மண்ணின் குணமைந் தென்ப.
247. அகரம் வருண மம்புயன் தெய்வம்
நிகரி லுருவம் நிறுத்த செம்பொன்
சதுரம் வடிவு தடம்படை வச்சிரம்
அதிர்கடல் மண்பரப் பைம்பது கோடி.
248. பாடி தண்ணடை பைதிர மண்டிலம்
தேயங் கோட்டம் செனபதஞ் சும்மை
அகலுள் கண்ட மேணி யென்றுங்
கிகலில் புலவர்நா டென்றுரைத் தனரே.
249. அழும்பென் கிளவி யாகுமுண் ணடு.
250. காழங் கிடார மீழஞ் சிங்களம்.
251. கச்சி காஞ்சி கருவூர் வஞ்சி.
252. கோழி யுறையூர் கூடல் மதுரை.
253. புகாரே காவிரிப் பூம்பட் டினமே.
254. பூண்டி பாக்கம் பூகதங் கேடகம்
காப்புச் சும்மை காடு சேர்வு
குடியகங் கிராமங் குடிக்கா டகலுள்
பட்டு நொச்சி பாடி குறும்பு
பட்டின மார்க்கம் பாழி குறிச்சி
சில்குடி மூதூர் சிற்றூர் பாசறை
எயிலிடம் விடுதி யெயிலி முனையிடம்
அகர மிருக்கை நகரி துருக்கம்
உறைவைப்பு யேத்தமு முரைத்தவை யெல்
அறையுங் காலை யாகு மூர்ப்பெயர். [லாம்
255. பள்ளியும் நொச்சியும் பட்டு மென்றிவை
ஒள்ளிய சிற்றூர்க் குரைக்கும் பெயரே.
256. குறிச்சி சிற்றூர் குறிஞ்சி நிலப்பெயர்.
257. துடியு முருகியமுந் தொண்டகமு மந்நிலத்
துரிய பறையென வுரைத்தன ருளரே.
258. மூதூர் குறும்பு முனையிட மென்ன
ஓதிய மூன்று முயர்பாலை யூர்ப்பெயர்.
259. பகைத்துடி யென்பர் பாலையூர்த் துடியே.
260. பாடி குறும்பொறை பகரில் முல்லைப்பதி.
261. ஏறுகோட் பறையே யிவ்வூ ரடுபறை ;
பம்பையு மாமெனப் பகருவோ ருளரே.
262. பாக்கம் வாழ்க்கை பதிபுரி யுறையுள்
பூக்கம் அகலுள் புரங்குடிக் காடு
தண்ணடை மருதத் தெண்ணூர்ப் பெயரே.
263. கிணையே மருதக் கிளர்பறை யாகும்.
264. பாக்கம் பட்டினம் பகருநெய் தற்பதி
265. மீன்கோட் பறையென விளங்கு நெய்தற்
266. புரமும் பாடியும் புகலும் நகர்ப்பதி. [பறை.
267. சூழக மிருக்கை தோணு முகமே.
268. ஆறுங் கிரியு மணைந்தவூர் கேடகம்.
269. கொடுங்குறும் பரணிருக்கை குறும்பென்
270. பாசறை முனைப்பதி பாடி வீடு [றுகும்.
பகைத்தென முனைமேற் படர்ந்தோ ருறை
271. பதமு மடையும் பந்தமும் ஆறும் [பதி.
ஆற்று மார்க்கமும் அயனமும் நடவையும்
வதியுங் கீற்றும் வாரியும் போக்கும்
நடையுந் தாரியு மிடவையும் நெறியும்
தெருவு மியல்வையுஞ் செப்பமுங் காலும்

சரியுஞ் செலவுந் தாங்குங் கதியும்
பவழும் வனமும் பதவியுந் தண்டமும்
அத்தமுங் கடமும் அருஞ்சுரமுமொழுக்கும்
வட்டையுங் கவலையும் வகுந்தும் வரியும்
இகுவையுங் கடறு மிடங்கரு மிருவையும்
படுகாலும் வழியெனப் பகர்வோ ருளரே.
272. அத்தமுந் தூம்பும் அருஞ்சுரமுங் கடமும்
உய்த்துணர் அருநெறிக் குரிய வாகும்.
273. தந்தி போம்வழி தண்ட மென்ப.
274. படுகா லென்பது பகருங் காலை [புலவர்.
இழிந்தேறு நெறியென மொழிந்தனர்
275. சிறுவழி விடங்கர் சேய்வழி யளக்கர்.
276. கவலை யென்பது கவர்த்த வழியே.
277. மாசி புதிய வரப்பு வழியே.
278. ஆவணம் ஒஞள்ளல் அரச மார்க்கம்.
279. மன்று வீதி மறுகு கவலை
கோசு நியமங் கூலம் பீடிகை
சியம் விசிகை தெருவின் மேற்றே.
280. பீடிகை கூலம் பெறுமங் காடி
ஆவணம் நியம மாதலு முரித்தே.
281. சந்தி யந்தி சதுக்கங் கவலை
அந்தநாற் சந்திக் கபிதா னம்மே.
282. பள்ளி சதனம் பாடி தாவளம்
பாழி சரண்பதி ஆவாசம் நிலையல்
தாம நிகேதன மாலயம் நியமம்
நிகாயம் நிசாதனை யுறையுள் வசதி
உடை.சம் வசநம் ஆவேசனம் கோட்டம்
நகரம் புரிபுரம் அகர மென்றிங்
கிட்டிய நாம மேழுநகர்க் காமே.
283. தேவ ராலயஞ் செனகரஞ் சேதியம்
குலம்நி கேதனங் கோட்ட மாலயம்
பாழி நிலையம் பள்ளி மந்திரம்
நகரொடு பிறவும் நாடுங் காலை
நிகரில் தேவர் நிலைபடு மிடமே.
284. இல்மனை மாட மிடமுறை யுட்பதி
வசதி புக்கில் வையின்சேர்வு இடவகை
மாளிகை சாலை மந்திரம் பவனம்
குலநகர் வீடு குடிலகம் பாத்தி
கூரை கிரகங் குரம்பை யென்றிவை
ஒருங் காலைக் குயர்மனைக் குரித்தே.
28˜. குரம்பையுங் கூரையும் நிரம்பாச் சிற்றில்.
286. இறையும் வளவியு மிறப்புங் கூரை.
287. மாளிகை யுயர்நிலை மண்டபப் பரப்பே.
288. விடங்க முகடென விளம்பினோ ருளரே.
289. சாளரம் நூழை சாலேகஞ் சாலகம்
பல்கணி மந்த பவனு யனமெனச் [பொருளே.
சொல்லிய வென் பேருஞ் சொல்லுமொரு
290. அட்டில் மடைப்பள்ளி அடும்புலம்
[அடுக்களை.
291. முத்தான மென்பது மொழியி லடுப்பே.
292. கல்வி யூரி கல்லூரி யாகும்.
293. முற்ற மில்முன் முன்றி லங்கணம்
உற்றவிந் நான்கு மொருபொரு ளாகும்.
294. அங்கணந் தூம்புரையி லாகலு முரித்தே.
295. அரமியம் நிலாமுற்ற மாகு மென்ப.
296. தெற்றி குறடு திட்டை வேதிகை
மண்ணீடு பரிகந் திண்ணையு மதற்கே.
297. அளிந்த மென்பது அரங்கதன் மேற்றே.
298. தெற்றி யம்பலஞ் சித்திர கூடம்.
299. பொதுவு மன்றமும் பொதுவிலு மென்னும்
விதிமுறை மூன்றும் விளம்பி லம்பலம்.
300. அத்தாணி யென்ப தரசிருப் பாமே.
301. பந்தஞ் சாலை பந்தி பணையுடன்
மந்திர மென்பது மாவி னில்லம்.
302. சேவகம் விளம்பும் செப்புங் காலை
ஆவக முடைய தானை சேரலிடம்.
303. கந்துத் தறியே தம்பம் பிணிப்பிடம்.
304. அந்தப்புரம் வெள்வேல் மன்னர்வாழ்
305. கூடு கட்சி குடம்பை குலாயம் [கட்டே.
நாடும் பஞ்சரமும் நவிலி லதற்கே.
306. வேள்விக் குண்டம் வேள்வி நித்தியம்.
307. சுள்ளை மண்கலஞ் சுடுமிடஞ் சூளையும்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே.
308. ஆரோகணஞ் சோபான மாகுந்தாழ் வாரம்.
309. தொழுவும் ஆவேலியுஞ் சுரபி நிலையே
கொட்டி லெனவுங் கூறு மதற்கே.
310. பள்ளி கொண்டை பாழி மடங்குகை
தாவதந் தவத்தோர் தம்மிட மாகும்.
311. சேர்ப்புக் கிடக்கை சேக்கை பள்ளி
பாயல் தளிமம் பரியங்கம் அசகை
சட்டகந் தர்ப்பஞ் சயனம் அம்பரம்
அரிதுயி லயவகை ஆய்வை யமளியென்னும்
உரியவை யெல்லா மொருபொருள் மேற்றே.
312. பண்ணை பாழி பணைபள்ளி சேர்ப்பு [வும்
சேக்கை குடம்பை யெனச் செப்பின பல
விலங்கு துயிலும் புலங்களின் பெயரே.
313. ஊரி யெனவு முரைக்கு மதற்கே.
314. தூச்சி லென்பது சொல்லி லொதுக்கிடம்.
315. ஒருசிறை வேறிட முரைக்குங் காலே.
316. வைப்புப் பாங்கர் வயின்களந் தேயம்
மாய்புல வழியுளி மருங்கு தனைபால்
பக்கஞ் சூழல் பட்டி வளாகம்
தான மிடநிலந் தலம்அயல் பாடு
காலுழை மார்க்கங் கடைதலை கண்சார்
புடையிடை சிறைமுன் புற[ே]ம அகம்பின்
உழிவ விடமென வகுத்தன ருளரே.
317. அக்கசா லையர்தெரு ஆவே சனமே.
318. அரச வீதிக் கமைந்தபெயர் பூரியம்.
319. சுருங்கையும் புராலுஞ் சொரிசல தாரை.
320. கல்வி பயில்களங் கழக மாகும்.

சாகே

ஓற்றையங்க நாடகம்

# நடு நிசி

(ஸ்ரீ ஆர். திருஞானசம்பந்தம்)

**பாத்திரங்கள் :** நளன், தமயந்தி.

**காலம் :** நடுநிசி

**இடம் :** விதர்ப்ப தேசத்தின் சமீபமுள்ள, மலையடர்ந்த ஓர் அரண்யம்; சுற்றிலும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை மூங்கில் புதர்களும், சவுக்கை சந்தன மரங்களும் அடர்ந்து, ஒரே கருஞ்சாயலாக அப்பிரதேசம் இருண்டிருக்கிறது. பச்சைப் பாம்புகள்போல் பின்னிக் கிடக்கும் மூங்கிற் காட்டினின்றும் எழும் ஓசையுடன், அடிவாரத்தை நோக்கிவரும் அருவியின் மிருதுத்வனியும் கலந்து, மனதை மயக்கும் மனோகர நாதம் அங்கு நிரம்பி யிருக்கிறது. கற்கள் பெயர்ந்த ஓர் க்ஷீணித்த கோவிலின் எதிரில், கீழே விரித்திருக்கும் சிறு துணிமீது நளன் உட்கார்ந்திருக்கிறான். தமயந்தி அவனருகே தலைசாய்த்துப் படுத்திருக்கிறாள்.

நள : தமயந்தி, இந்த எட்டு நாட்களில், இன்றுபோல் ஒரு நாளும் வானம் கருமை கொண்டிருக்க வில்லை. இன்றைக்கு என்றுமில்லாத ஒரே இருட்டு; அந்த காரம் தன் ஆட்சி முழுதும் செலுத்துகிறது போலும்!

தம : ஆமாம், நக்ஷத்திரங்களைப் பதித்து வானம் அழகு பார்க்கிறது. கடல் கண்ணாடியில், நீர் நிலைகளில் தன் சோபையைக் கண்டு சொக்குகிறது போல் இருக்கிறது.

நள : நித்தியம் இப்படித்தான். இன்னும் எவ்வளவோ அற்புதங்களை இயற்கை நிகழ்த்திக் கொண்டே யிருக்கிறது. ஆனால் அதைக் கண்டு களிக்க யாராவது முந்துகிறார்களா, என்ன?

தம : இவ்வித அசிரத்தை நமக்கும் இல்லை என்று சொல்ல முடியுமா? நீங்களே சொல்லுங்கள்! நாம் அரண்மனை அந்தப்புர நிழலைவிட்டு அடியெடுத்து வைக்காதிருந்தால், இவைகளைப் பார்க்க முடியுமா? இவ்வானந்த லஹரியில் நம் உள்ளம் தேங்கித் திளைத்திருக்குமா?

நள : வாஸ்தவந்தான். அதற்காகப் புஷ்கரனுக்கு நன்றி செலுத்தவேண்டு மென்கிறாயா! இருக்கட்டும், தமயந்தி, உன் தேகம் துவண்டமலர் போல் மிகச் சோர்ந்து விட்டது. இதைக் காணக்காண என் உள்ளம் கலங்குகிறது. இந்த முள்ளிலும் கல்லிலும், குண்டிலும், குழியிலும், உன் தளிர்ப் பாதங்கள் தடுமாறுகின்றனவே?

தம : இதை யெண்ணி வருந்தாதீர்கள். நீங்களும் சேர்ந்துதானே அனுபவிக்கிறீர்கள்? எனக்கு மட்டும் தனியாக வந்து விடவில்லையே?

நள : அதற்கில்லை; நான் எதையும் சகித்துக்கொள்வேன். என் ஹிருதயம் கடினமானது. ஆனால், பூப்போன்ற உன் நெஞ்சு, இக்கனல் கக்கும் காட்டு ஜ்வாலையால் வாடி வதங்குகிறதே? வெதுப்பு, வேக்காட்டைத் தாங்காது உன் பால் உள்ளம் பொங்குவது எனக்குத் தெரியாதா?

தம : இல்லை, இல்லை, உங்கள் அருகிலிருப்பதாலே ஓர் இன்பரஸம் என்னுள் ஊற்றெடுக்கிறது. குழைவும், குதூகலமும் என் மனதைக் கட்டிப் பிடித்து, தித்திப்பும் தீங்கனவும் பாய்ச்சுகிறது. நான் சந்தோஷமாகத் தானே இருக்கிறேன்?

நள : என்ன இருந்தாலும் தமயந்தி, இவ்விதம் இந்த நாடோடி வாழ்விலா உன்னை நான் வைத்திருக்கட்டும்? ஒரு சக்கரவர்த்திக்குப் பிறந்த சிரேஷ்ட செல்வி, பட்ட மகிஷி—இத்தகைய இடர்களையா அனுபவிப்பது?

தம : அம்மாதிரி ஒரு சக்கரவர்த்தியே அனுபவிக்கும் போது அவளும் அனுபவிக்கலாமே?

நள : வேண்டாம், எனக்காக இத்துன்பச் சுமையைத் தாங்காதே! கனம் பெரிது, காலிடறி விழக்கூடும்.

தம : விழுந்தாலும் உங்கள் பாதங்களில்தானே விழுவேன்? அதனால் பாதகமில்லை.

நள : இனி, மேலும் மேலும் என்ன நடக்குமென்பது பாவம், உனக்குத் தெரியாது. தெரியவும் நியாயமில்லை.

ஏனெனில் உனக்கு இப்பேர்ப்பட்ட விஷயங்களில் அனுபவமில்லை.

தம : எது வந்தாலும் சகிப்பேன் என்று சொல்கின்றேனே?

நள : தமயந்தி, நீ உலகமறியாதவள்; பாழடைந்த வெளிதனிலும் பலமான மழை கொட்டுவதுண்டு. என் மீதும் நற்காற்று வீசும். இவ்விஷ நாட்கள் மாண்டு மறைந்து போகும். அப்போது நான் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்.

தம : என்ன, என்ன சொல்கிறீர்கள்?

நள : அவசரப்படாது பதறாது பொறுத்துக் கேள்! சங்கதியைச் சாந்தமாகத் தெரிவிக்கவேண்டுமென்பதற்காக அவ்வாறு கூறினேன். சரி, எல்லாவற்றையும் விளக்கிவிடுகிறேன். உன் தந்தையிடம் உன்னைச் சேர்க்க நிச்சயித்து விட்டேன்.

தம : ஹா! ஒரு புஷ்பத்திலிருந்து வாசனையை மட்டும் பிரிக்கப் பார்க்கிறீர்களே! பூக்கொத்துகளுடன் குலுங்கும் கொடியின் வேரையே அறுக்க முற்படுகிறீர்களே! வேறு ஏதாவது சொல்லுங்கள். இப்பேச்சையே எடுக்க வேண்டாம்.

நள : யோசித்துப் பார்! தமயந்தி. உன் நல்வாழ்வுக்காக மொழிகிறேன்.

தம : என்ன, இவ்வித யோசனையையா? ஐயோ! நீங்கள் எவ்வாறு இங்ஙனம் பேசத் துணிந்தீர்கள்? ஆம், பேசுவீர்கள். கனிவும், காதலும் கலந்திருந்த தங்கள் ஹிருதயத்திலே கொடிய சூதிற்கு இசையத் துணிவு வந்ததல்லவா? அப்படியிருக்க இது என்ன பிரமாதம்? சரி, மறுமுறை ஒன்றையும் கிளப்பாதீர்கள்.

நள : உன் கேள்விக்குப் பதில் சொல்ல, கொந்தளிக்கும் உணர்ச்சிகளைச் சமாதானப்படுத்த இடந்தர மறுக்கிறாயே?

தம : இதுவல்ல சமாதானம் செய்யும் விதம். வாள் கொண்டு என் அங்கங்களைத் துண்டித்தாலும் இவ்வேதனை ஏற்படாது. என் ஜீவனே ஒடுங்கிப் போகும் போலிருக்கிறதே!

நள : தமயந்தி, எதற்காக நான் சொல்கிறேன். உன்னைப் பிரிவதென்பது என்னால் நினைக்கக்கூட முடியாததாயிருக்கிறது. ஆனால், இங்கு என்னோடு உடுக்க உடையும், படுக்க இடமும், உண்ண உணவுமின்றித் தொல்லைப்பட நேருமே! உன் தந்தையிடம் சென்று நீயாவது சௌக்கியமாக இருக்கக்கூடாதா என்பதற்காகச் சொன்னேன். இத்துரதிர்ஷ்டமெலாம் மாறி, பழைய நிலைமைக்கு வந்துவிடுவேன் என்ற தைரியம் எனக்குப் பூர்ணமாக இருக்கிறது.

தம : நானும் அதைத்தான் சொல்கிறேன. பாலைவனத்திலும் நீர் ஊற்றுக்கள் சுரக்கும். இத்துயர நாட்களிலும் பசுமை தளிர்க்கும். நானும் உங்களுடன் இருந்து யாவற்றையும் ஏற்க வேண்டுமென்பதே என் கனவு.

நள : அது மகா கஷ்டமானது. நம் வருங்கால வாழ்வை நினைத்தால் என் மனமே ஆட்டங் கொடுக்கிறது. உன்னைச் சௌகர்யமாக அனுப்பி விடுகிறேன். சுகமாக நாட்களைக் கழித்துக் கொண்டிரு.

தம : என்னால் அது செய்யக்கூடிய காரியமா? சுகம்! சுகம்!! சுகம்!!! பாழும் சுகம் எனக்கு வேண்டாமே! ஹா! நான், ஹிமாசலத்தைவிட உயரத்தில் உல்லாசமாகப் பறந்துகொண்டிருந்தேனே! யார் என்னை அதல பாதாளத்தை நோக்கி உருட்டிவிட்டது! என்னுடைய வீழ்ச்சியில் பெருமகிழ்ச்சியும், பேரவாவும் கொண்டவர் எவரோ? எந்தப் பேய்க்கண்களுக்கு என் ஒயிலும், உயர்வும் பிடிக்கவில்லை, சகிக்கவில்லை? இவ்விபரீத விளையாட்டை வேடிக்கை பார்ப்பதில் 'விதி'க்கு அவ்வளவு ஆனந்தமா?

நள : கிடையவே கிடையாது. உன் சிங்காரமும் சிறப்பும், சொகுசும், சுகுமாரமும் எந்தப் புலன்களிலும் பூசலை ஏற்றவில்லை; ராஜ்யத்தையும், என் உடைமை முழுவதையும் பணயம் வைத்து இழந்ததற்கும், அரண்யத்திற் புகுந்ததற்கும், கோமள அறையில் சுகித்திருந்த உன்னை, வானக் கூரையைப் பார்த்துப் படுக்கும்படி செய்ததற்குங் காரணபூதன் நான் அல்லவா? என்னாலன்றோ இயற்கையின் குழந்தைபோன்று அகண்டத்தை நோக்கி நித்தம் கண் துஞ்சுகின்றாய்?

தம : என்ன, விளங்கவில்லையே!

நள : தமயந்தி, விளங்கித்தான் யாது பயன்? நான், என்னினின்றும் பிரிந்து—இல்லை—க்ஷணம் பிரியாச் சுவர்க்க வாழ்விலே, மென்மையான ஸ்வப்பனங்களிலே மூழ்கியிருந்தால் சூதிற்கு உடன்பட்டிருப்பேனா?

தம : சென்ற காலம் செல்லரித்துப் போனது. குழந்தை தன் பழைய பாடத்தை ஓயாது ஒப்புவிப்பதுபோல், என் வீணாக மனதை அலட்டிக்கொள்கிறீர்கள்? இந்நிர்மலமான அடவியிலே, குளிர்ந்த ஒரு கரையிலே சின்னஞ் சிறு குடில் அமைத்துக் கொண்டு எஞ்சியுள்ள நாட்களை இன்பமுடன் கழித்து விடலாமே.

நள : உன் சிந்தனைகள் இவ்வழியில் செல்லுகிறது... உம்......

தம: ஆம், இதில் குற்றமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே. மகத்தான அரசு நொடியில் மாயமாய்ப் போனதைக் கண்கூடாகக் காணவில்லையா? அதோ பாருங்கள், அடிவானில் நிலா பூப் பூக்கிறது. அப்புத்தம் புது நிலாப்போல் நாமும் இனி மலர்ச்சி யடைவோம்.

(நளன் மௌனமாக வானக்கரையை அண்ணாந்து நோக்குகிறான். முகிலைக் கிழித்து தேஜோமயமாக மதி கிளம்புகிறது. எங்கும் ஒரே நிலாக் காடு. நிலவு வெள்ளம் புதர் ஓரங்களிலும் ஓடி வர்ணிக்க முடியா வனப்புக் கூட்டுகிறது.)

நள: ஆஹா! இந்த ஆனந்தக் காட்சி, என் உள்ளத்தில் எதை ஞாபகப்படுத்துகிறது தெரியுமா? ஜோதி பட்டவுடன் மறையும் மேகத்துண்டுகளைப் பார்! அக்கருக்கல்களைப் போல், நம்மைச் சுற்றியிருக்கும் மாசுத்திரையும் ஒரு நல்லொளியால் நீங்கக்கூடுமென எண்ணுகிறேன்.

தம: அதுவரை நானும் உங்கள் பக்கலில் இருக்கும் பாக்கியம் பெறக்கூடாதா?

நள: இதைவிடப் பெரும் பாக்கியத்திற்கு உன்னை அழைத்துப்போக ஏற்பாடு செய்கிறேன். வியாபார மார்க்கமாக தேசாந்தரம் சென்று திரும்பும் ரத்தின, முத்து வியாபாரிகள், ஒட்டகைகள் மீதும் புரவிகள் மீதும் நாளை இப்பக்கமாக வருவார்கள். வருஷத்தில் இந்த நாட்களில்தான் அவர்கள் தாயகம் திரும்புவது வழக்கம். நேற்று நெடுந்தூரத்தில் புழுதிப் படலம், எழுந்தபோது சுட்டிக் காட்டி, அவர்களைப் பற்றிச் சொன்னேனல்லவா? பருத்த பொதிமாடுகளை ஓட்டிவரும், அம்மாட்டு வியாபாரிகளிற் சிலர் உன்னை அடையாளமும் கண்டுகொள்ள முடியும். பால்யப் பருவத்தில் தொட்டு வளர்த்தவர்கள் அல்லவா அவர்கள்! மகா ஆனந்தத்துடனும், அன்புடனும் உன்னை அன்னையிடம் இட்டுச் செல்வார்கள்.

தம: இந்நெஞ்சு துளைக்கும் வெஞ்சொற்களை மறுபடியும் சொல்லாதீர்கள். (ஒரு அன்றில் பறவை சருகசைப்புடன், சிறகடித்துக் கத்திப் பறந்து செல்லுகிறது.) என்ன இப்படி அலறுகிறது! ஹா! பக்ஷியின் குரலா இவ்வளவு பரிதாபமாய்க் கேட்கிறது!! என்ன, உங்களுக்குக் கேட்கவில்லையா?

நள: ஆம், கேட்டது. அது ஏதோ ஒரு பக்ஷி; நீ தூங்கு. நெடு நேரமாய் விட்டது. சிறிதாவது தலைசாய்த்துக் கண் வளரம்மா! நாற்புறமும் பனி மயமாக இருக்கிறது. இனி, நாளை பேசிக் கொள்வோம்.

தம: சரி, நீங்கள் ஏன் விழித்திருக்க வேண்டும்? தூங்கா வரம் ஒன்றும் தங்களுக்கில்லையே!

நள: நானும் இதோ படுத்துக்கொள்கிறேன். என் நித்திய வழக்கப்படி, பகவானைச் சற்று தியானிக்கிறேன். என்னதான் பரமதரித்திர தசை வந்தாலும் அனுஷ்டானத்திலிருந்து பிறழலாமா?

தம: அப்படியே செய்யுங்கள். ஆனல், இன்னும் கொஞ்சம் நகர்ந்து உட்காருங்கள். எனக்கு என்னவோ அக்குரலைக் கேட்டதிலிருந்து பயமாக இருக்கிறது. நித்திரையும் தலையைச் சுற்றுகிறது.

நள: இந்தா, இங்குத் தலைசாய்த்துக் கொள்!

(தமயந்தி கண் மூடியதும் சீக்கிரமாகத் தூங்கி விடுகிறாள். நளன் அசையாது அவளையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறான்.)

நளன்: (தனக்குள்) பாவம், அலைச்சலில் அயர்ந்து நித்திரை கொள்கிறாள். இனி விடிந்ததும் இவ்வனாந்தரத்தில் இவளும் சுற்றுவதா? — இல்லை — நான் இப்போதே புறப்பட்டுப் பிரிந்து செல்கிறேன். அதுவே உத்தமம். ஹா! என்ன பரிதாபம் இது! காட்டுக் கொடிகளும், நிலமும் நீரும், கூவும் குயில்களுமா நாளை இவள் புலம்பலுக்குச் செவிசாய்க்கப் போகின்றன! என்னென்ன மொழிந்து அரற்றுவாளோ? ஒரு வேளை, விளையாட்டாக நான் எங்கேயாவது ஒளிந்திருக்கிறேன் என எண்ணித் தேடித்திரிவாளே! அவள் மனம் என்ன பாடு படுமோ? ஜகதீசா! நீ தான் இவ்வபலையைக் காக்க வேண்டும். இக் கணத்திலிருந்து நீயே அவளுக்குச் சர்வமும்!

(நளன் எழுந்து நாலடி நடக்கிறான்)

நளன்: அடடா! என்ன கொடுமை இது! இல்லை இல்லை. என்னுடன் பல தொந்தரவுக்குள்ளாவதை விடத் தந்தையின் அரண்மனை சென்று மகிழ்ச்சியுடன் வாழட்டும். காலையில் எவ்வளவோ வர்த்தகர்கள் இவ்வழியாக வருவார்கள். ஆனல்.........



(பத்து அடி சென்று திரும்பி)

பஞ்சமா பாதகன் நான்! வண்ணக் கிளியை மலர்க்குலத்தின் தேனமுதை, சின்னக் குயிலைச் சீந்தாது செல்கிறேனே! இல்லை—அவள் க்ஷேமத்திற்காகவே இவ்வளவும்! ஹா! அவள் தேகம் அசைகிறதே! புரண்டு படுக்கிறாளா அல்லது, விழித்துக் கொண்டாளா?—(ஒரு க்ஷணம் கழித்து) ஐயோ! கைகள், ஒருபுறமாக அடியில் சிக்கியிருக்கிறதே! அவ்விளங் கரங்களுக்குத் தேகத்தின் பளுவைத் தாங்கத் தான் சக்தி ஏது? (திரும்பி வருகிறான்) இவ்வொரு காரியம் மட்டும், அக்கைகளை மட்டும் சரியாக எடுத்துப் போட்டுவிடுகிறேன். ஆனால்...இப்படியே போய்விடலாமா? (இரண்டடி பின்னுக்கு எடுத்து வைக்கிறான். மறுபடியும் தமயந்தி படுத்திருக்குமிடம் வருகிறான்) இப்போது தான் அலர்ந்த மலர் போன்று உன் கன்னங்கள் ரஞ்சிதமாக இருக்கின்றனவே! அக் கருவிழிகள் கமல மலர்போல் குவிந்திருப்பது நிஜமலரைவிட நேர்த்தியாகவே இருக்கிறது. ஆனால் நாளை......ஹா! விக்கி விம்மி உன் அதரம் சிவக்கையில் — தேம்பித் தேடி நீ திக்கற்று நிற்கையில் — ஐயோ! நான் இன்னும் இங்கு நின்று கொண்டிருக்கிறேனே! ஒரு வேளை அவள் எழுந்துவிடக்கூடும் ... அவள் காத்தை ... வேண்டாம்... அப்படியே இருக்கட்டும்! தொட்டால் இவ்வன்னப்பூ திடுக்கிட்டெழக்கூடும். நான் போகிறேன். ஹா! என் ஸ்பரிஸம் இனி படாமலே தான் போய்விடுமா? தம...தமயந்தி! (வானை நோக்கிப் பரிதாபமாக) ஹே! இயற்கைத் தேவி, உன் மடியிலே படுத்திருக்கும் இத் தேவியையும் கவனித்துக் கொள்ளம்மா!

(நளன், அக்காடு அருவி கடந்து துரிதமாக நடந்து செல்கிறான். பதுமை போன்று தன் ஸ்வப்பன உலகிலேயே லயித்திருக்கிறாள் தமயந்தி.)

---

# புதுக்கோட்டையும் தமிழ்ப் புலவரும்

[பண்டிதை வி. பாலாம்பாள்]

சில வருடங்கட்கு முன்னர்ப் புதுக்கோட்டையில் கதிரைவேற் கவிராயர் என்னும் செந்நாப் புலவரிருந்தார். ஒருநாள் திருக்கோகர்ணத்திலிருந்து புதுக்கோட்டைக்கு வரும் வழியில் அக் காலத்துப் புதுவையரசர் தந்தப்பல்லக்கு ஒன்றில் வரக்கண்டு வணங்கவே, அரசர் பல்லக்கை நிறுத்திப் புலவரோ டளவளாவும்போது கவிராயர் அங்கு நின்றபடியே தாய்க் கூற்றுக :

“ அந்தப் பல்லக்கு மார்பிற் சுமந்திடு
மத்தனர் வரத்தால் வந்த புத்திரா !
பந்தப் பல்லக்குக் கொங்கைகண் பூங்குழல்
பைங்கழுத்துப் படைத்த வெனங்கைதான்
தந்தப் பல்லக்கு வள்ளலென் றேயுனைத்
தாழக்கொங்கையு தட்டினுங்க யமா
விந்தப் பல்லக்கு வைத்தாற் சகிப்பளோ
எச்சலன்னி மகாராஜா தீரனே !”

என்னும் கட்டளைக் கலிப்பாவைக் கூறவே அரசர் மகிழ்ந்து வெகுநா ளாதரித்தனர் என்பர்.

[குறிப்பு] பல் அக்கு—பல்லும், எலும்பும்; பந்து, அப்பு, அல், அக்கு—இவை முறையே கொங்கை கண், குழல், கழுத்து ஆமாறு அறிக. பல் அக்கு; பல அடையாளங்கள்.

மற்றுமோர் நாள் தாமும் நண்பர் சிலருமாகக் கோவிலுக் கேகிச் சுவாமி தரிசனஞ் செய்து பிரதட்சணம் வருகையில் முருகர்சந்நிதியில் நண்பர்கள் “ஓர் கவி பாடுக” எனக் கூறுமுன்,

“ பத்துக் கந்தனைப் பெற்றவன் போலப்பெண்
பாரிலாசை பொன் பூவாசையால் வரு
முத்துக் கந்தனை யுள்ளங் கொளாமலுன்
முளரித் தாளின் மனம்வைப்ப தென் றுகாண்
கொத்துக் கந்தனை வில்லாத பைந்தருக்
குலவு வானவர் கோவான செந்நெலின்
வித்துக் கந்தனை யானை முனிந்தருள்
வேல னேமலை வல்லிதன் பாலனே !”

என்னும் மதுரம் பழுத்தொழுகும் கட்டளைக் கலிப்பாவைக் கூறிக் களிப்பித்தனராம்.

[குறிப்பு] பத்துக்கம்—பத்துத்தலை (அவையுடைய ராவணன் பெண்ணாசையால் நலிந்தமை).

முத்துக்கம்—மூவகைத் துயரம்
கொத்துக் கந்தம்—நிறைந்த வாசனை
அந்து—ஓர்வகைப் பூச்சி
மலைவில்லி—மேருமலையை வில்லாகக் கொண்ட சிவன்

பண்டைத் தமிழ்ப்புலவர் பலரையும் ஆதரித்த புதுவை யரசர் ஒருவரே என்பது மேற் கூறியதினு லறியலாம்.

# தெய்வமும் கொழுநனும்

(ஸ்ரீ வே. நாராயணய்யர், எம். ஏ., எம்., எல்.)

பிரசித்திபெற்ற ஆங்கிலக் கவியாகிய ஜான் மில்டன் என்பார் 'நந்தவன நஷ்டம்' என்னும் ஒப்புயர்வற்ற காவியத்திலே ஆதி தம்பதிகளான ஆதாமையும் ஏவாளையும் வர்ணிக்கையிலே 'அவன் கடவுளுக்காக வாழ்ந்தான்; அவள் அவனிடத்துள்ள கடவுளுக்காக வாழ்ந்தாள்' என்று கூறியுள்ளார். இக்கருத்து,

> "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை"

என்னும் திருக்குறளின் கருத்தை யொத்துள்ளது.

இதுபோன்றே ஸ்ரீவால்மீகி ராமாயண சுலோகம் ஒன்றும் உள்ளது. இராமபிரான் காட்டுக்குச் செல்லுமுன் அன்னை கோசலையிடம் விடை பெற வருகிறான். கோசலை தன் மகனைப் பிரிய மனம் வராதவளாய் 'கன்றுள்ளிச் செல்லும் மடநாகு போன்று, உன்பின் நானும் வருவேன்' என்று கடவுளே மகனாக வடிவெடுத்து வந்த மகனை வேண்டுகிறாள். அவ்வேண்டுகோளின் உட்கருத்து, "மக்களது இதயம் தெய்வத்தை நாடிப் பிரிவாற்றகில்லாது, கன்றை நாடும் கறவைப் பசுவைப்போலே" என்பது. அக்கருத்தினை உய்த்துணர்ந்த இராமபிரான், "அன்னையே! நீ இவ்வாறு கூறுவது தகாது. ஸ்திரீகளுக்குப் புருஷனே தெய்வம்; தெய்வம் தொழாதவளாயினும் பதி சிசுரூஷையிலே ஈடுபட்டவளாயின் அவள் தெய்வ வழிபாட்டால் அடையும் நற்கதியை அடைவது திண்ணம். ஆதலின், மன்னனுக்குப் பணிவிடைசெய்து கொண்டு இங்கே இருத்தலே தகும்" என்று தேற்றுகிறான்.

கோசலைக்கும் ஏவாளுக்கும் இருந்த சங்கடம் ஆடவர்களுக்கு இல்லை. ஆடவர்கள் பெண்மையை அவாவிப் புருஷோத்தமனையே நாயகனாகக் கொள்வது இயலும்; ஆதலால் நாயகீ பாவம் பெற்ற தண்டகாரணிய முனிவர்கள் ஆடவர் பெண்மை அவாவும் தோளழகுடைய இராமபிரானைத் தெய்வமாகவும் கொழுநனாகவும் கொள்ள இயன்றது. இதுபோலவே, நம்மாழ்வாரும் நாயகீபாவமுற்று, வெறிவிலக்குத் துறையிலே பாடிய பாசுரமொன்றிலே, "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்" என்று தலைவியின் மனோநிலையை எடுத்துக்காட்டுகிறார். தெய்வத்தைக் கொழுநனாகப் பெறுவதனால் உண்டாகும் சௌகரியத்தைக் கருதியே போலும் உமாதேவி தவமிருந்து பரமேசுவரனை நாயகனாகப் பெற்றனள். சீதாப்பிராட்டியே "தெய்வத்தை நாயகனாகப் பெற்றதனால் எனக்கு ஒரு அசௌகரியம் ஏற்பட்டது. என் கணவன் அதி குரூரனாய்க் குரூபியாய்த் தூர்த்தனாய் இருந்தாலல்லவா என்னுடைய பாதிவிரத்தியம் மேம்படும்! இராமன்பின் யார்தான் காட்டுக்கு வர விரும்பார்கள்? என்று நினைக்கும்படியாகப் புருஷோத்தமனை யன்றோ நான் கொழுநனாகப் பெற்றேன்" என்று அத்திரி முனிவரின் தருமபத்தினியான அனசூயையிடம் விசனித்துக் கூறுகிறாள். 'பதி வேறு, தெய்வம் வேறு' என்றிருந்ததாலன்றோ, கோபியர் "பதி, மக்கள், சுற்றத்தார், துணைவர் முதலானோரிடத்திற் காட்டிலும் அச்சுதனிடத்திலே பிரேமை கொண்டவர்களாய் வாழ்ந்தனர். இக்கோபியரை அநுகரித்த ஆண்டாள் அக்கோபியர் சொல்லாக, "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று திருப்பாவையிலே பாடுகிறாள்; தானான நிலையிலும்,

> "ஊனிடை யாழிசங் குத்தமர்க் கென்று
> உன்னித் தெழுந்த என்தட முலைகள்;
> மானிடவர்க் கென்று பேச்சுப் படில்
> வாழகில் லேன். கண்டாய், மன்மதனே!"

என்றே பிரார்த்தித்து, அவ்வுத்தமனையே மணந்ததாகக் கனாக் காண்கிறாள். இவ்வாறு நோன்பு நோற்றுத் தெய்வத்தையே பதியாக அடைந்த பெண்பாலார் மிகச் சிலரே. மற்றையோரும் இப்பெரும்பேறு பெறவேண்டுமென்றே பிராம்மணரின் விவாகச் சடங்கிலே, மணமகனைத் திருமாலின் உருவாகத் தியானித்துப் பூசித்து மணமகளை அத்திருமாலுருவனுக்குக் கன்னிகாதானம் செய்வதென்ற விதி விதிக்கப்பட்டது போலும். பரதெய்வத்தின் திருவுருவாகக் கொழுநனைக் கொண்டால், கொழுநனைத் தொழும் பதிவிரதை தெய்வத்தையும் தொழுதவளாகி எழுச்சி பெறுகிறாள். இவ்வகைப்பட்ட பெண்மணிகளைப் பற்றிய வரையில் தெய்வ வழிபாட்டிற்கும் பதி சிசுரூஷைக்கும் யாதொரு முரண்பாடும் இல்லையாகின்றது.




( சுவாமி சுத்தானந்த பாரதியார் )

[காவியங்களில் நாடகமே இனியதென்பர் (காவ்யேஷு நாடகம் ரம்யம்). ஷேக்ஸ்பியர், ரஸீன், மோலியர், கெத்தே, காளிதாஸன் போன்ற மஹாகவிகள் தம் நாடகங்களைக் காவியமாகச் செய்தனர். தமிழில் அத்தகைய காவிய நாடகங்கள் சிலவே உள. தமிழில் பல நாடகக் கவிதைகள் உண்டாகவேண்டும்.

**சுவாமி சுத்தானந்த பாரதியார்** பல நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவற்றுட் சில காவிய்நாடகங்கள். அந்நாடகங்களைத் தொடர்ச்சியாக ஒரு சிறப்பான பகுதியாக நமது சக்தியில் வெளியிட்டு வருவோம். அதற்கு உத்தரவளித்த **அன்பு நிலயத்தாருக்கு** நன்றி செலுத்துகிறோம். தமிழ் இப்போது சிறுகதைப் பருவத்திலே யிருக்கிறது. இது குழந்தைகளின் சிற்றில் பருவம் போன்றது. தமிழ்க் கலைவாணி மேன்மேலும் வளர்ந்து பரவுவாள். இன்னும் சில ஆண்டுகளில், வசன நாடகங்களைப் போலவே காவியநாடகங்களையும் பொதுஜனங்கள் சுவைப்பர். இங்கிலாந்திலும், பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் செய்யுள் நாடகங்களே புகழ்பெற்று மேடையில் விளையாடுகின்றன. நமது தமிழ்நாடும் அத்தகைய பெருமை பெற்று உலகில் கலைக்கதிர் வீசி விளங்க வேண்டும்.

"**காலத்தேர்**" என்னும் இந்நாடகம் காலத்தேராகிய இந்த உலக வாழ்வையே படம் பிடித்துக் காட்டுகிறது. ஆண் பெண் இருபாலாருக்கும் உயர்ந்த ஆதர்சங்களைக் காட்டுகிறது. எளிய இனியநடையில், படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவாறு அமைந்துள்ள இந்நாடகத்தைத் தமிழ்த்தாய் வடிவான தமிழர் கூட்டத்திற்கே அர்ப்பணம் செய்கின்றோம். —ஆசிரியர்]

# நாடக உறுப்பினர்

| | |
|---|---|
| வேதாந்தப் பாட்டி : | மதுரைக் கிழவி. அனுபவத்தால் உலகியல்பை அறிந்தவள், 80 வயது. |
| சிவசங்கரன் (சிவம்) : | பாட்டியின் ஏகபுத்திரன், பணக்கார வக்கீல், சாது, சன்மார்க்கி, தெய்வபக்தன். 50 வயது. |
| சுந்தரி : | சிவத்தின் இரண்டாம் மனைவி, மஹா சாகஸி, நவநாகரிகக்காரி, ஸ்கூல் பைனல் படித்தவள். 24 வயது. |
| மங்களாம்பாள் : | கதாநாயகி, சிவத்தினுடைய முதல்தாரத்தின் மகள், குணவதி, கலாவதி, அறிவும் வீரமும் அருளும் மிக்காள். 15 வயது. |
| பொன்னு : | சுந்தரியின் அத்தை பிள்ளை. நாகரிக நாஸ்திகன். கல்லூரி மாணவன். 22 வயது. |
| அண்ணுவி : | பொன்னு நண்பன், கில்லாடி, ஜகப்புரட்டன். 24 வயது. |
| முல்லை : | நாடகக்கணிகை, மாயக்காரி, பொன்னுவின் தாசி. |
| முருகனார் : | சிவத்தின் நண்பர், செந்தமிழ்ச்செல்வர், இசைப்புலவர், சோதிடர், திருப்பரங்கிரி முருகனை உபாசிப்பவர், வைகைக் கரையில் ஒரு பூந்தோட்டம் அமைத்து இறைவனுக்குப் பூமாலையுடன் பாமாலையும் சூட்டி வழிபடும் பக்தர், மங்களத்திற்குப் பாட்டுச் சொல்லி வைப்பவர். 55 வயது. |
| ஜோதி : | முருகனார் மைந்தர், மிஷன் கல்லூரியில் பி.ஏ., படிப்பவர், வீரர், தியாகி, தமிழன்பர், கதாநாயகர். 22 வயது. |
| கண்ணன் : | அழகர் கோயிலான், கல்லூரி மாணவன், சமரஸ வைணவன், வள்ளி காதலன். |
| வள்ளி : | ஜோதியின் தங்கை, பாலிய விதவை, தமிழ்க் கலையிற் சிறந்தவள், கண்ணன் காதலி, மங்களத்தின் தோழி. 16 வயது. |
| யோக முனிவர் : | சித்தபுருஷர், ஜோதியின் பரமகுரு. |
| மில்லர் : | பாதிரி, கல்வித்தொண்டும், சமயத்தொண்டும் செய்பவர். மங்களத்திற்குப் புகலீந்தவர். ஜோதியின் ஆசிரியர். |
| காப்டன் அப்துல்லா : | ஐரோப்பியப் போரில் பெயர்பெற்ற வீரர். தொண்டர்படைத் தலைவர். ஜோதியின் அன்பர், சமரஸ இஸ்லாமியர். 30 வயது. |
| டாக்டர் வைகுண்டம் : | சுந்தரி நண்பர், பணம்பிடுங்கும் வைத்தியர். |

நடன், நடி, குருக்கள், சமையல்காரன், தொண்டர்படை, தோழிமார் முதலியோர்.

| | |
|---|---|
| இடம் : | மதுரை, திருப்பரங்குன்றம், மங்களபுரம், அழகர்மலை, தேவர் மலை, சென்னை. |

# மலர்ச்சி

[அரங்கில் **நடராஜர்** உருவம். நடனும், நடியும் வந்து வணக்கம் பாடிக் கர்ப்பூரம் காட்டுகின்றனர் ; பிறகு நாடகத்தின் கருத்தை விளக்குகின்றனர்.]

### நடன், நடி

(கலி விருத்தம்)

ஞால நாடகன் ஞானச் சிதம்பரன்,
மூல சக்தி முதல்வன் பராபரன்,
காலத் தேரினைக் காக்கும் பசுபதி
கோலச் சேவடி வெற்றி கொடுக்குமே.

[தீபாராதனை செய்தல்]

### நடன்

(அகவல்)

திருவருட் சோதியைச் சிந்தனை செய்து
மங்கல மாக நங்கடன் புரிவாம்.
இன்பக் காதலீ, என்னுயிர்த் துணைவீ !
தேன்மலர் சுற்றித் திரள்வண் டினம்போல்,
அரங்கின் முன்னே அமர்ந்தனர் நல்லோர்.
இசையும் கலையும் வசையறத் தேர்ந்தாய்,
கண்மனங் குளிருங் காட்சி நிரம்பிய,
காலத் தேரோனுங் கோலநா டகத்தால்
இப்பெருஞ் சபையோர் இன்புறச் செய்வோம்.

### நடி

மங்கல மாருக மணாளர் விருப்பம் !
காலத் தேரைக் கவினுறச் செலுத்தி,
ஞாலத் தியல்பை நாடக மன்றில்
வியனுறக் காட்டவே பயனுறுங் காட்சிகள்
அனைத்துங் கருத்துடன் அணிவகுத் துள்ளோம்.
உறுப்பினர் யாவரும் உவகை யோங்கினர்.
நவரச பாவனை நயமுறத் தேர்ந்தார் ;
அவரவர் பகுதியை அமைவுறக் கற்றார் ;
கொள்கைப் படியே குரலைப் பழக்கினர் ;
வில்லுடன் கணைபோல், விரலுடன் யாழ்போல்,
சொல்லுடன் செய்கையும் சொக்க நடிப்பார்.
கூடிய சபைக்கு நாடகக் கருத்தை
விளக்கிக் காட்சி துலக்குவோம்
சிற்சபை யப்பன் சீர்த்தி யருள்கவே !

### நடன்

ஞால மெல்லாங் காலத் தேராம் ;
எல்லா உயிர்களுஞ் செல்லு மதனிலே ;
புலன்க ளேயதன் புரவிக ளாகும்.
அந்தக் கரணமே அதன்சா ரதியாம்.
அறமே தேரின் அச்சாணி யாகும் ;
பொருளே தேரின் பொன்னுட லாகும் ;
இன்பமே தேரின் இரண்டுசக் கரமாம் ;
வீடே தேர்மேல் விளங்கும் சிகரமாம்.
சூத்தான் மாவே சுடர்பெறுந் தலைவன்.
அவன்சொற் படியே அந்தக் கரணம்
புலப்புர விகளைப் பொறுமையாய்ச் செலுத்தினால்,
இறைவன் சந்நிதிக் கேகுமித் தேரே !
அவ்வா றின்றேல், வெவ்வா றேகி,
இருவினைக் களத்தில் வருமிடர் வருந்தி,
காமமும், கவலையுங், கலவியும், புலவியும்,
வீட்டுப் போரும், நாட்டுப் போரும்,
கூட்டப் போரும், கொள்கைப் போரும்,
கண்ணீர்ப் பெருக்கும், புண்ணீர்ப் பெருக்கும்,
இடர்க ளாலே குடங்கவிழ் துயரும்,
சூழ்ந்தித் தேரின் வாழ்வைத் தடுக்கும்.
ஆழ்ந்தநல் லறிஞர் அறிவார்
இயல்வழி இதனை யியக்குந் திறனே !

### நடி

ஆம், ஆம், உண்மை ! அனுபவம் கண்டோம்
திருப்பரங் கிரிவாழ் செவ்வேள் முன்னே,
காதல ரான ஜோதி—மங்களர்
காலத் தேர்மிசை ஞாலங் கண்ட
வியன்பெறு காட்சியை விளக்குவோம்,
பயன்பெறச் சபையோர் பார்த்து மகிழ்ந்தே !

[கோயில் மணியோசை கேட்டல்]

### நடன்

கேட்குது முருகன் கிளர்மணி யோசை
மந்திர நாதம் வருகுது முந்தி... ...
அன்பர் தமிழிசை அழைக்குது நம்மை !

### நடன், நடி

உயருக காதல்... உயருக வுள்ளம்,
உயருக வுலகம் ஓங்கி,
உயருக திருவருள்... உயருக திரையே !

[இருவரும் செல்லல் ;
உடனே திரை உயர்தல்]

# முதல் அங்கம்

## முதற் காட்சி

[திருப்பரங்குன்றம் முருகன் சந்நிதி. கார்த்திகை அலங்காரம், ஒளிமயம். **சிவம், மங்களம், வேதாந்தப் பாட்டி, முருகனுர், ஜோதி, வள்ளி, கண்ணன்** அனைவரும் தரிசனம் செய்தல். சிவம் மங்களம் பெயருக்கு அருச்சனை செய்வித்தல். மங்களாம்பாள் விழிகளும் ஜோதியின் விழிகளும் பொருந்துதல். அவ்வாறே வள்ளியும் கண்ணனும் விழிநட்பாடுகின்றனர். முருகனுர், ஜோதி, வள்ளி மூவரும் இனிமையாக முருகன்புகழ் பாடுகின்றனர். திரை உயர்த்தும் போது குருக்கள் மந்திரமலரால் அருச்சனை செய்கிருர்.]

**குருக்கள்** [மலர்தூவி]

ஓம் சிவக் கனலே ! ஓம் சுப்ர மண்யா !
ஓம் ஷண் முகனே ! சரவண பவனே !
பரம குருவே ! சுரர்படைத் தலைவா !
அருளே யான பொருளே போற்றி,
அன்பே யான நண்பா போற்றி !
இருளிடர் போக்கும் இரவியே போற்றி !
கந்தா போற்றி ! கடம்பா போற்றி !
சேந்தா, குறிஞ்சி வேந்தா போற்றி !
வேலா, தானவர் காலா போற்றி !
சூரனைக் கொன்ற வீரனே போற்றி !
குன்றை யெறிந்த குமரா போற்றி !
குகனே, உமையாள் மகனே போற்றி !
இதயக் குகையில் இருப்பாய் போற்றி !
ஓங்கா ரப்பொருள் உரைத்தாய் போற்றி !
புலவா, ஞானப் பொலிவே போற்றி !
சங்க மிருந்த தமிழா போற்றி !
புள்ளி மயில்மேல் வள்ளி யுடனே
வருவாய், வரங்களைத் தருவாய் போற்றி !
முருகா, திருமால் மருகா போற்றி !
கருத்தினி லினிக்குங் கரும்பே போற்றி !
அழகா போற்றி ! குழகா போற்றி !
அடியார் துயரங் கடிவாய் போற்றி !
ஐயா, பன்னிரு கையா போற்றி !
அறிவுக் கறிவாய் நிறைவாய் போற்றி !
செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி !
திருப்பரங் கிரிவாழ் செல்வா !
அருட்பெருஞ் சோதி ஆண்டவா போற்றி !

[தீபாராதனை நடத்தல்]

**எல்லாரும்** [கைகூப்பி]

சரவண பவஓம் ! குருபர முருகா !
குஹாய நம ஓம் ! குமராய நமஓம் !
சுப்ரஹ்மண்ய ஓம்...சுப்ரஹ் மண்ய ஓம் !

**முருகன், வள்ளி, ஜோதி**

(அறுசீர் விருத்தம்)

விருப்புடன் அடியார் மேவும்
வெற்றிவேல் முருகா போற்றி !
உருக்கியென் னுள்ள மெல்லாம்
உண்டமெய் யன்பே போற்றி !
பருப்பதந் தோறும் ஆடும்
பரசிவக் கனலே போற்றி !
திருப்பரங் கிரியில் வாழும்
தெய்வமே போற்றி போற்றி !

**குருக்கள்**

[விபூதி யளித்து, சிவனுக்குப் பிரசாதமீந்து]

எண்ணிய காரியந் திண்ணமாய் நடக்கும்.
புண்ணியர் பக்கம் ஷண்முகன் இருப்பான் !

**சிவம்**

வளர்பயி ருக்கு வான்மழை போலே
வாழ்வினுக் கருளுக வடிவேல் முருகன்.

**பாட்டி**

வருகிற தைக்குள் வரன் கிடைத்துத்

**குருக்கள்**

திருமணக் கோலம் சிறப்புறக் காண்போம் !

**பாட்டி**

மலரை வைத்தவன் மனத்தினை யறிவோம் !
மங்களம் போடுக செங்கையி னலே !

[மங்களம் பூமுடிப்பைக் குலுக்கிப்போடல்]

**சிவம்** (குருக்களிடம்)

திருக்கரத் தாலே தேர்க ஓர் மலரே !

[ஒருமலர் எடுத்துத் தரப் பெற்றுச் சிவம் பிரித்தல்]

**குருக்கள்**

சேர்ந்தது வெண்மலர் ! செயம் செய மினியே !
பாரீர் முருகன் பரிவினை யின்னே !

**சிவம்** (மங்களத்திடம்)

என்னருஞ் செல்வீ ! இறைவன் உனக்கு
நன்மலர் கொடுத்தான் ... ...

**மங்களம்** (மனத்துள்)

என்மன மளித்தான் !

[ஜோதியைப் பார்த்தல்]

### சிவம்

நண்பீர் அன்பீர், நலமெலாம் பொருந்தும் ;
போற்றுவோம் 'குகனைப் பூந்தமி ழாலே !

### சிவம், மங்களம், பாட்டி

முருகா முருகா முருகா வென்றே
பெருகா தலுடன் உருகுவாய் மனமே!
ஆர்வங் கொள்வாய் ! ஆறு முகத்தான்
கார்மேகம் போற் கருணை பொழிவான்.
வெற்றிவே லென்றால் வீரங் கனலும் ;
கொற்ற மோங்கும் குலநல மோங்கும் ;
படர்க ளொழியும்; பந்தனை சிந்தும்;
இடர்க ளெல்லாம் இரவிமுன் பனியாம்.
அன்பே வளரும், ஆணவந் தளரும் ;
இன்பம் பெருகும், துன்ப மொழியும் ;
அறமுந் திருவும் அறிவும் ஆற்றலும்
வரமுந் திவ்விய வாழ்வும் வளரும் ;
கெடுத லொழியுங், கீழ்மை யொழியும் ;
விடுதலை சேரும், வினைத்திட்ப முறும்
தவக்கன லொளிரும் சிவக்கன லொளியைப்
பவப்பிணி தீரப் பரவுநன் மனமே !
அமரர் சேனைக் கரசே, குகனே
குமராய நமவெனக் கும்பிடு மனமே !
திருவார் செவ்வேள் முருகா...
முருகா வென்றே உருகுவாய் மனமே !

[மூவரும் செல்லல். மங்களம் திரும்பித்திரும்பி ஜோதியைப் பார்த்த படியே செல்லல்.]

### முருகனர்

மகனே முருகனை மனமுற வழுத்துவோம்!

### முருகனர், வள்ளி, ஜோதி

(கலிவிருத்தம்)

அருண முகத் திருவழகா கருணைவிழிக் குழகா !
இருள ரக்கர் குலமழியப் பொருதியகை வேலா !
தருண மழை போலுதவும் தயைமிகுந்த குமரா !
குருபர ஓம் சிவக்கனலே ! குகனே ! ஷண் முகனே !

அன்பு மண மலர்மாலை, ஆர்வமுடன் சூட்டி,
என் புருக மனங்குழைந்தே என்முகம்பா ரென்றேன்,
பண் புடனே உன்புகழைப் பாடிநட மாடும்,
இன்ப மெனக் கருள்புரிவாய் என்னுயிருக் குயிரே !

புண் ணறிப் போர்விலகிப் பூவுலக மாந்தர்,
தண் ணரும் சுத்தசிவ சன்மார்க்கம் போற்றி,
அண் ணவுன் அருளாடல் அன்பொளியாய்ப் பரவிக்
கண் ணரக் கண்டிடவே காதல்கொண்டேன் முருகா !

வஞ்ச னைசெய் மாயமற வாய்மையொளி காட்டாய்,
அஞ்ச வரும் தீவினையை அக்கணமே மாற்ருய்,
நெஞ்சி னிலே நீண்டுயரும் சிவஞான நெருப்பே !
தஞ்ச முன்னை யன்றியில்லை சண்முகனே சரணம் !

[வணங்கிச் செல்லல். திரைவிழுதல்]

## இரண்டாங் காட்சி

[பசுமலைக் கருகே பெரிய ஏரி. அந்திச்செவ்வானில் கங்குல் படர்கிறது. விண்மீன்கள் பளிச்சிடுகின்றன. ஏரிக்கரை மரங்களில் புட்கள் பாடிக் கூடடைகின்றன. முதற்காட்சியிற் கண்டவர்கள் சாலையில் மோட்டாரை நிறுத்தி, அங்குமிங்கும் காற்றுட உலாவுகின்றனர். ஜோதி ஒருபுறமும், மங்களம் ஒருபுறமும் உலாவுதல்.]

### ஜோதி

சூரியன், கதிராந் தூரியங் கொண்டு
உயிர்க்கும் உருக்களை உலகினில் வரைந்து,
விடைகொண் டேகினன்... விரிமலர்க் கூந்தலை
அந்தி வானில் அவிழ்த்தனள் இயற்கை!
என்பகல் அங்கே இலங்கு கின்றதே...

[மங்கள த்தைப் பார்த்து]

அங்கே நடக்கும் அருணத் திருவால்,
வெட்கிச் சந்திரன் வெளிவரா தொளிந்தான்,
மாலைப் புள்ளவள் வனப்பினைக் கண்டு,
காலைப் பாட்டையே களிப்புறப் பாடுமே !
கமலம் பூத்த கண்களைக் கோடி...
குமுத வாய்கள் கூடிப் புகழுமே !
கண்ணொளி கண்டு விண்ணொளித் திரள்கள்
புண்ணியம் வந்தது பூமிசை யெனுமே !
முல்லை பூத்த முறுவலே கவிகளின்
சொல்லிற் பூத்துச் சுகமணம் வீசுமே !
மங்களம் அவள் பெயர்... ஆம் ஆம் மங்களம்...

மங்கள — ஜோதியாய் வளர்கவென் வாழ்வே !
முருக னிச்சை முடியுக நன்றே !
ஆனல் எப்படி... ?

[கண்ணன் வருதல்]

### கண்ணன்

அதென்ன ஜோதி ?

தனியே ஏதோ தயங்கி நடக்கிருய் ?
என்ன சிந்தனை ? உன்மனம் எங்கோ
பிடிபட் டிருப்பதை நடையே காட்டுமே ?

### ஜோதி (எண்ணத்தை மறைத்து)

கண்ணு ! நண்பா ! கருத்திற் கினியாய் !
பசுமலை வந்ததும், பாதிரி மார்செய்
பணிகளில் என்மனம் பளிச்செனத் தாவும்...
' நம்மத முய்ய, நம்மவர் செழிக்க,
நந்தமிழ் விளங்க, நங்நா டுயர,

அவர்போல் யாமும் அரும்பணி புரிவோம்'
என்றோர் உறுதி ஏறுமென் மனத்தே!
அத்தகை யுறுதி சித்திபெற் றிலங்கவே,
செவ்வேள் முருகன் செயம்பெறு துணையைக்
காட்டினன்; இனியதைக் கூட்டினால்...
எப்பெருஞ் செயலும் இயற்றுத லாமே!

[மற்றோர் மூலையிலிருந்து]

### முருகனார்

வா, வா ஜோதி வண்டி யேறுவோம்!

[கண்ணன், ஜோதி செல்லல். மங்களம் சிந்தித்தவண்ணம் வருதல். வள்ளி பின்னாலே மெல்ல வருகிறாள்]

### மங்களம்

வண்டுதேன் மலரைக் கண்டது போலே,
கண்டது மிவனைக் கொண்டனன் மகிழ்வே...
தாமரை முகமும், தண்டமிழ் வாயும்,
காமர் விழியும், கனிநகை யமுதும்,
வீரத் திருவும், விஜய மார்பும்,...
கற்றறிந் தடங்கிய சொற்றிற மாண்பும்,
முருக னன்பால் உருகு நெஞ்சமும்,
பக்தியி னாலெழும் பாசுரப் பண்பும்,
கொண்டெனைக் கொள்ளை கொண்டவன் இவனே!
இரும்பைக் காந்தம் இழுப்பது போலே
ஏதோ வொன்றெனை யிவன்பா லிழுத்ததே.
வெளியழ கன்றே; உள்ளே பொலியும்
ஒளியழ கேயென் உள்ளுயி ருள்ளே
விறுவிறுப் பாயொரு மின்சா ரத்தைப்
பாய்ச்சிய ததனைப் பகருவல் யானே!

### வள்ளி [மங்களம் தோளைத்தொட்டு]

யாது சிந்தனை? ஏதோ போலே
என்னையும் பாராய்; உன்னையே மறந்தாய்!
தனியே நடந்தாய்; இனிய தோழீ!
மனத்திற் கொண்டதை எனக்கொளிப் பாயோ?

### மங்களம்

அன்புள வள்ளீ! துன்புறு முல்லைக்
கொடிக்கு நல்ல கொழுகொம் பளித்தான்......
சோதி முருகனைத் துதித்தேன்
ஈதினும் வாழ்விற் கினியதொன் றுண்டோ?

### வள்ளி

வள்ளிக் கொடிக்குமோர் வகையவன் காட்டினன்.

### மங்களம்

அல்லலைக் கண்டான், அபய மளித்தான்;
எல்லையில் அருளாம் இறைவன்
வெல்லநம் விருப்பம் நல்குக துணையே!

### சிவம், பாட்டி [தொலைவிலிருந்து]

மங்களம், மங்களம்! மதுரைக் கேகுவோம்!

[இருவரும் ஓடுதல். எல்லாரும் வண்டியில் ஏறிச் செல்லல்.]

(தொடரும்)

## அடுத்த சக்தியில்

### மூன்றாங் காட்சி

சுந்தரியின் தடபுடல், போலி நாகரிக மினுக்கு
பொன்னுவின் நாத்திகத் திமிர் —
வேதாந்தப்பாட்டியின் உபதேசம் —
சிவத்தின் கவலை —

### நான்காம் காட்சி

மங்களாம்பாள் படும்பாடு —
சுந்தரியின் கொடுமை —
சிவத்தின் பரிவு —

பாப்பா இலக்கணம்

# புதிய தமிழ் இலக்கணம்

## 11. அளவு (மாத்திரை)

**குயிலம்மை பாடினுள் :—"சிவனே இஃதென்ன மாஅஅயம் !"** என்னும் சங்கராபரண கீர்த்தனம் ஆதிதாளம். இலக்கணப்புலி சங்குப்புலவர் "சி உயிர்மெய்க்குறில் 'டக்' ஒரு மாத்திரை **வ** ஷெி ஒரு மாத்திரை, **னே** நெடில் இரண்டு மாத்திரை, ஃ ஆய்தம் அரை மாத்திரை, து குற்றியலுகரம் அரை மாத்திரை, மாஅஅ அளவுநீண்டு போச்சுது மூன்று மாத்திரை" என்று மாத்திரை எண்ணிக் கையைச் சும்மா நொடித்துக்கொண்டேயிருந் தார். பின்னுலிருந்த நண்பர், "சும்மா இருங் காணும்!" என்று புலவர் கையை நிறுத்தினுர். "தொடை தூக்கு அளவு மாத்திரை எல்லாம் பார்க்கிறேம்" என்றுர் புலவர். "சை, சும்மா இரும்! பாட்டு மாத்திரை வேறு, இலக்கண மாத்திரை வேறு, மருந்து மாத்திரை வேறு! உமது மாத்திரைக்குக் கைந்நொடியும், கண்ணிமைப்பும் அளவல்லவா? கைந்நொடித் துக் கச்சேரியைக் கெடுக்காதேயும். வேண்டு மானுல் கண்இமைத்துக் கொண்டிரும்" என்றுர் நண்பர். புலவர் அவ்வாறே எழுத்தெண்ணிக் கண்ணைக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருந்தார். வேடிக்கைதான்! இடத்திற்கேற்ற நடத்தை வேண்டும் ; இல்லாவிட்டால் பொல்லாப்பாகும்.

ஓர் எழுத்தை உச்சரிக்கும் அளவுக்கு மாத் திரை என்பர். தொல்காப்பியர் அதை "**அளவு**" என்றே வழங்குகிறுர். கையைச் சுண்ட நினைப் பது கால், விரலைச் சேர்ப்பது அரை, முறுக்குவது முக்கால், சுண்டி விடுப்பது ஒன்று. இமைப்பும், நொடிப்பும் மாத்திரைக்கு அளவாம்.

| எழுத்து | மாத்திரை |
|---|---|
| உயிரளபெடை | 3 |
| நெடில் | 2 |
| குறில் | 1 |
| மெய்<br>ஆய்தம்<br>குற்றியலிகரம்<br>குற்றியலுகரம் | ½ |
| மகரக்குறுக்கம்<br>ஆய்தக்குறுக்கம் | ¼ |

சாதாரணப் பேச்சில் இதே அளவிருக்கும்.

(1) நீஇ நிசதாஅஅ பாஅஅ என்று பாடகர் இராகம் நீட்டுகிறுர்.

(2) ஐயோ ஓஓஓ என்று செத்த வீட்டில் அழுகை நீட்டுகின்றனர்.

(3) தயிரோ ஓஓஓ தயிர் என்று வியாபாரி பண்டங்கூவி விற்கிறுன்.

(4) அடே எஎ அப்பாஅஅ என்று தொலைவி லிருப்பவனைக் கூப்பிடுகிறுன் நண்பன்.

(5) எஎஎஎ தருவேனே ஓஓ என்கிறது ஒரு குழந்தை.

(6) அம்மா அஅஅஅ என்று கூவுகிறுள் ஒரு பெண்.

இவற்றிலெல்லாம் அளவுகடந்து ஒலியைக் கேட்கிறேம்.

## 12. அளபெடை

ஓசை குறைந்தால் மாத்திரையை அதிகப் படுத்துவது அளபெடையாம். அளபு + எடை = அளவு அதிகப்படுவது. உயிர் எழுத்து அளவு அதிகமானுல் **உயிரளபெடையாம்** (தூஉய்மை) ; மெய்யெழுத்து (ஒற்று) அளவு எடுத்தால் **ஒற்றள பெடையாம்** (கலங்ங்கு). ஒரு சொல்லுக்கு முதலில், நடுவில் அல்லது கடைசியில் அள பெடுக்கலாம். ஓஒவுதல் (முதல்), நற்றுள் தொழூா அர் (நடு), கழூஅ (கடை). செய்யுளில் ஓசை இனி மைக்காகவும் அளவெடுப்பதுண்டு; அதற்கு **இன்னிசை அளபெடை** யென்பர். (எடுப்பதூஉம் எல்லாம் மழை).

அளபெடுக்கும் சொற்கள் பொருளில் வேறு படுவதுமுண்டு. அவற்றிற்குச் **சொல்இசை அளபெடை** என்பர்: உரன் நசைஇ, வரன் நசைஇ என்பதில் **நசை** (விருப்பம்) என்பது அள பெடுத்து நசைஇ = விரும்பி என்ற பொரு ளேற்றது.

இந்த உதாரணங்களிலிருந்து அளவுக்கு அறிகுறியான எழுத்துக்களை அறிந்து கொள்ளலாம். உயிரளபெடையில் நெட்டெழுத்து எழும் அளபெடுக்கும். அளவிற்கு அறிகுறி ஒவ்வொன்றிற்கும் இனமான குறிலை அடுத்துப் போட்டுவிடவேண்டும். உயிர்மெய்யானாலும் சரி, அதிலுள்ள உயிருக்குச் சரியான இனவெழுத்தையே போடவேண்டும்.

தமீஇ (மீ=ம்+ஈ; ஈக்கு இனஎழுத்தான இயை அளவுக்குறியாகப் போட்டுள்ளது) அதே மாதிரி மரூஉ, வாஅழிய முதலியவற்றிலும் காண்க.

உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை. எப்படி? நெடிலுக்கு 2, அளவுக்குறியான குறிலுக்கு 1; ஆக 3. ஆடூஉ என்பதில் டூஉ அளபெடை. டூ இரண்டு மாத்திரை+உ ஒரு மாத்திரை=3 மாத்திரை. ஆனால் இராக ஆலாபனத்தின்போது 'தாஅஅஅஅ நீஇஇ'. என்று அளபெடை மிகவும் அதிகமாகும். செய்யுளில் "செருஅஅய் வாழியநெஞ்சு" என்று வரும்போது 'ருஅஅ' உயிரளபெடை. அதற்கு எத்தனை மாத்திரை? உரு+1 அ+1 அ=4 மாத்திரை. ஆகக்கூடி உயிரளபெடை எத்தனை? நெட்டெழுத்து ஏழல்லவா? அவை மொழிக்கு முதலிலும், நடுவிலும், கடையிலும் அளபெடுத்தால்? 7×3=21. ஔ சொல்லுக்கு நடுவிலும் முடிவிலும் வராது. ஆதலால் இரண்டைக் கழிப்போம்; 21−2=19. இத்துடன் இன்னிசை அளபெடை சொல்லிசை அளபெடை இரண்டையும் சேர்த்தால் 19+2=21—கணக்குச் சரியாய்ப் போயிற்று. உயிரளபெடை 21.

ஒற்றளபெடை: ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள, ஃ ஆகிய 11 எழுத்துக்களும் அளபெடுக்கும். மாத்திரையில் ஒன்றாயிருப்பதால் ஃ இங்கே மெய்யுடன் சேர்ந்தது. இந்தப்பதினொரெழுத்துக்களும் அளபெடுக்க இன்ன இடம் என்றுண்டு. சொல்லுக்கு முதலில் இல்லை; நடுவிலும் முடிவிலுமே ஒற்று அளபெடுக்கும். அந்த அளபு இரண்டு வகையாயிருக்கும், (1) இரண்டு குற்றெழுத்திற்குப் பிறகு (குறில் இணைக்கீழ்) [இலங்ங்கு] (2) ஒரு குற்றெழுத்திற்குப் பின்பு (குறில்கீழ்) [எங்ங்கு].

விலஃஃகி, இலஃஃகி, அஃஃகி இவ்வாறு ஆயுதம் மொழி நடுவிலேதான் அளபெடுக்கும்.

விடங்ங்+கலந்த. ங்ங் மொழிமுடிவில் வந்தது. இவ்வாறு ஒற்றளபெடை எத்தனை?

ஙஞணநமன வயலள ஆகிய பத்தும் நாலு வகையாக அளபெடுக்கும்.

| | | |
|---|---|---|
| (1) | இரண்டு குறிலுக்குப் பிறகு (கலங்ங்கு) | 10 |
| (2) | ஒரு குறிலுக்குப் பிறகு (மஞ்ஞ்ஞை) | 10 |
| (3) | பத்தும் மொழி நடுவில் | 10 |
| (4) | ,, ,, முடிவில் | 10 |
| ஆய்தம் | இரண்டு குறிலுக்கப்புறம்+ஒரு குறிலுக்கப்புறம் மொழி நடுவில் வரும் | 2 |
| | ஆக ஒற்றளபெடை | 42 |

## சேரன் வீரம்

அளபெடையப்பன் ஒரு கதை சொல்லுகிறான் கேளுங்கள்:—சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கல்கொண்டு வர இமயமலைக்குப் புறப்பட்டான். "வாஅழிய நீஇடு" என்று எல்லா மன்னரும் அவனை ஊஉர்தொறும் போஒற்றினர். கங்கைக் கரைக்கு வந்தான் சேரன். கனகவிஜயன் என்னும் வடமன்னர் தமிழரை இகழ்ந்தனர்; ஏஎழு மன்னர் துணைகொண்டு சேரனை எதிர்த்தனர். சேரன் கனகவிஜயர் படைகள் கலங்ங்கக் கடும் போர் புரிந்து வெற்றி பெற்றிலங்ங்கினன். கனகவிஜயர் காஅவியுடை யணிந்து உயிர்தப்பிச் சென்றனர். தமிழர் வீரத்தை உலகம் போற்றியது.

இக்கதையிலுள்ள உயிரளபெடை, ஒற்றளபெடைகளைத் தனித்தனியாக இன்னின்ன வகையென்று எழுதுக!

——

# சித்தன்ன வாசல்

(ஸ்ரீ ல. கணேச சர்மா, Archaeological Photographer)

முகப்பிலுள்ள வர்ணப்படத்தைச் சற்றுக் கூர்ந்து கவனியுங்கள். கைகளும், முகமும் இருக்கும் விதத்தைக் கவனித்தால் அது ஒரு நாட்டியக்காரியின் படமென விளங்கும். அதற்கேற்றவாறே அவளது கைகளிலுள்ள வளையல்களும், வங்கிகளும் கழுத்திலுள்ள மாலைகளும், காதுகளிலுள்ள ஓலைகளும் தலையிலுள்ள திருகுப்பூக்களும் மற்ற நகைகளும் தென்படும்.

கூர்ந்து கவனித்தால் பின்னும் சில முக்ய விஷயங்கள் அறியலாம். கண்களின் கருவிழிகளிரண்டும் பிரிந்திருக்கின்றன. மாறுகண் உள்ளவர்களின் கண்கள் "கண்ணிரண்டும் ஒன்றையேகாண்" என்பதை ஒப்ப நடுவில் கூடும். இந்தச் சித்திரத்தில் அவ்விதம் இல்லை. சபையில் இருசாரியிலுள்ளவர்களையும் கவனிப்பதுபோல் தோற்றும். இது நாட்டியத்தில் ஒரு பாவமாம். நாட்டியம் ஒரு நுண்ணிய கலை என்பார்கள், அதைக்குறிக்க அவளது கைவிரல்கள் மெல்லியதாகவும், கூர்மையாகவும், உள்ளன; பின்னும், உட்கை ரேகை சாஸ்திரம் அறிந்தவர் அவளது கையிலுள்ள ஆயுள் ரேகை, புத்தி ரேகை, விதிரேகை முதலியவற்றைக் கவனித்தால் அவள் ஒவ்வொரு விஷயத்திலும் குறைவற்றவள் என்பது தெளிவாகும்.

இவ்வளவு விரிவாக ஒரு படத்தைப் பற்றி எழுதக் காரணமென்ன? எழுதப்படும் ஒவ்வொரு படத்தைப்பற்றியும் எவரும் ஒரு விவரமான விவரணை எழுதுவதுண்டோ? எழுதுவது தான் ஸாத்யமோ? இது இன்றோ நேற்றோ எழுதப்பட்ட படமல்ல. 1300 வருஷங்களுக்குமுன் அமைக்கப்பட்ட புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள சித்தன்ன வாசலில் சமணர் குகைக் கோயில் உள்ளது. காஞ்சீவரத்தைத் தலைநகராகக் கொண்டு தெற்கில் தற்காலம் புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள வெள்ளாறு வரை பரந்திருந்த நாட்டின் பல்லவ வம்சத்தரசன் முதலாவது மஹேந்திரவர்மன் காலத்தில் குடையப்பட்ட கோயில் அது. அவனது காலத்தில் தான் மலைகளைக் குடைந்து கோயில்கள் அமைக்க ஆரம்பித்தனர். அவை நம் தமிழ்நாட்டில் அதிகமாகஇருக்கின்றன. மாமல்லபுர (மஹாபலிபுரம்)த்தில் சில உண்டு. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பல பல்லவக்கோயில்கள் உண்டு. அவற்றைத் திருக்கோகர்ணம், திருமயம், குடுமியாமலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் காணலாம். மேலே சொன்னவை ஹிந்துக்கோயில்கள். மஹேந்திரவர்மன் திருநாவுக்கரசு (அப்பர்) சுவாமிகளால் சைவசமயத்திற்கு மாற்றப்படுமுன் சமண மதப் பற்றுள்ளவனென்று சரித்திரம் சொல்லுகிறது. சித்தன்னவாசல் சமணர் கோயிலைக்கண்டு இது உண்மையென அறியலாம். (சரித்திரத்திற்கு ஆதாரம் புராதனச் சின்னங்கள்) சித்தன்னவாசல்—சித்த—அண்ணல்—வாயில் என்பது பதப்பிரிவு. பெரிய சித்தர்கள் வாழுமிடம் என விளங்கும்.

புதுக்கோட்டையிலிருந்து மேற்கே $9\frac{3}{4}$ மைல்



தூரத்தில் தெற்கு வடக்காக மூன்று பெரும் குன்றுகள் சேர்ந்த மலையொன்றிருக்கிறது. அதன் வடக்குப் பாறையின் மேற்குச் சரிவில் அக்கோயில் குடையப்பட்டிருக்கிறது. அதன் முகப்புப்பார்வைப் படமும் தரைமட்ட அமைப்புப்படமும் அதன் அமைப்பை நன்கு விளக்கும். முகப்புப் பார்வைப் படத்திலிருந்து நடுவில் இரு தூண்களிருப்பதைக் காணலாம்.

அதில் இடப்புறமுள்ள தூணின் முன் பாகத்தில் வரையப்பட்ட படம் முகப்புப் பக்கத்தில் நாட்டியக்காரியினுடையது. 1300 வருஷங்களாக வெய்யில், காற்று, பனி, மழை, குகைகளில் இயற்கையாயுள்ள பிராணிகள் இவற்றிற்கு மேல்



மனிதன், இத்தனைத் தொல்லைகளையும் தாங்கி இன்னமும் மிஞ்சி நிற்கும் சித்திரமாகையால் அதை நாம் கவனிக்கவேண்டியது அவசியமல்லவா? அக்கோயில் முன்னே அர்த்த மண்டபமும் பின்னே கர்ப்பக்கிரகமும் கொண்டது. அர்த்த மண்டபத்தின் தெற்கு வடக்கு இரு பக்கச் சுவர்களிலும் ஒவ்வொரு மாடமும் அதனுள் ஒரு விக்கிரகமும் செதுக்கப்பட்டிருக்கிறது. இரு விக்கிரஹங்களும் சம்மணமிட்டு உட்கார்ந்த அவஸரத்தில் உள்ளன. கைகளிரண்டும் உள்ளங்கை மேல் புறமாகவும், ஒன்றின்மேல் ஒன்ருகவும் நடுவில் சேர்த்துக் கால் மேல் வைக்கப்பட்டிருக்கின்றன. வடக்குமாடத்திலுள்ளவர் தலைக்குமேல் ஒரு குடை யிருக்கிறது. இதை அடையாளமாகக்கொண்டு அது ஒரு சமண ஆசார்யரென்று அறியலாம். தெற்கு மாடத்திலுள்ளவர் தலைமேல் ஒரு ஐந்துதலை நாகம் குடை பிடிக்கிறது. ஆகையால் அந்த விக்கிரகம் 23-வது தீர்த்தங்கரராகிய பார்ச்வநாதருடையது எனத் தெரிகிறது. கர்ப்பக்கிரகத்தின் கீழ்புறச் சுவரில் உள்ள மாடத்திலும் அதே மாதிரி உட்கார்ந்து மூன்று விக்கிரகங்கன் இருக்கின்றன. இடது புறமிருந்து முதல் இரண்டு பேர்களுக்குமேல் ஒன்றுமேல் ஒன்ருகப் பூக்குடைகளும் கடைசியிலுள்ளவருக்கு மேல் ஒரு ஒற்றைக்குடையும் இருப்பதால் முதல் இருவரும் தீர்த்தங்கரர்கள் என்றும் கடைசியிலுள்ளவர் ஒரு ஆசாரியரென்றும் அறியலாம். கர்ப்பக்ருஹத்தின் மேல் தார்சில் அந்த மூன்று விக்கிரகங்களுக்கெதிரில் ஒரு குடைபோலச் செதுக்கப்பட்டிருக்கிறது. தூண்கள், மேலே சொன்ன விக்கிரகங்கள் குடை ஏதும் தனியே கல்லில் அடித்துப்பின்னர் வைத்துக் கட்டப்பட்டவையல்ல; யாவும் ஒரே பாறையில் குடையப்பட்டவை.

எல்லா விக்கிரகங்களுக்கு மேலும் தார்சில் அஸ்மானகிரிபோல் ஒவ்வொரு சித்திரம் எழுதப் பட்டிருக்கிறது. கர்ப்பக்கிரகத்திலுள்ள அஸ்மானகிரி ஒரு சமக்காளம் போலுள்ளது. அதன் நடுவே சதுரங்களாகவும் வட்டங்களாகவும் இணை பின்னி வெகு அழகாக எழுதியிருக்கிறது. சதுரங்களுக்குள் பத்மங்களும், வட்டங்களுள் கூட்டல் குறிபோலிட்டு அக்கோடுகளின் நுனியில் சுழியிட்டு நான்கு சமபாகங்களாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. * மேலிரண்டு பாகங்களிலும் ஒன்றில் ஆணும் மற்ருென்றில் பெண்ணுமாக இரு உருவங்களும் கீழ் இரண்டு பாகங்களிலும் இரு சிங்கங்களும் காணப்படுகின்றன. சிங்கங்கள் சமண சமயக் குறிகளில் முக்கியமானவை. இந்த வட்டங்களிலுள்ளபடி மேலிரண்டு மனித உருவங்களும் கீழே இரண்டு சிங்க உருவங்களும் உஜ்ஜயினி நகரத்தில் தோண்டி



எடுக்கப்பட்ட ஆந்திரநாணயங்களில் காணப்படுகின்றன. அர்த்தமண்டபத்திலுள்ள விக்கிரகங்களின்மேல் தாமரைப்பூக்கள் போல் எழுதப்பட்டிருக்கின்றன.

* இது ஒருவித ஸ்வஸ்திக் அடையாளம்.

தென்புறத்திலும் வடபுறத்திலுமுள்ள விக்கிரகங்களின் மேலுள்ள அஸ்மானகிரியும் கர்ப்பக்கிரகங்களின் மேலுள்ள அஸ்மானகிரியும்போக மீதியுள்ள இடம் பூராவும் ஒரு தாமரைக் குளம்போல் சித்தரிக்கப்பட் டிருக்கிறது. சுவர்க்கலோகத்திலுள்ள புண்ணிய ஆத்மாக்கள், பிரதிதினம், தீர்த்தக்காரர்கள் முன் சென்று உபதேசம் கேட்கப் போவர். அதற்குச் செல்லுமுன் அவர்கள் ஒரு குளத்தில் கைகால்கள் கழுவி மலர்கள் கொய்துகொண்டு சற்று விளையாட்டாகப் பொழுது போக்குவதுண்டு. அவ்விதமாக மூன்று மனிதர்களும் மாடுகளும் யானைகளும் அன்னங்களும் கொக்குகளும் மீன்களும் இடையிடையே தாமரைகளும் அல்லிப் புஷ்பங்களும் வெகு அழகாக பலவர்ணங்களில் தடாகத்தில் நேரில் காண்பதுபோல் எழுதப் பட்டிருக்கின்றன.



ஒரு மனிதனினுருவமும் இங்கே பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. வலக்கையில் ஒரு அல்லியும் இடத்தோளின் மேல் சார்த்திய தாமரை மலர்க் கொத்தும் மேலே சொல்லிய வற்றை விவரிக்கும். அழகாக வகுத்து வாரப்பட்ட தலை மயிரும் இடுப்பிலுள்ள கோவணமும் அக்காலத்து நாகரிகத்தை விளக்கும். ஆங்கிலேயர் நம்மை வென்று ஆள ஆரம்பித்து நமக்கு நாகரிகம் கற்பித்ததாகச் சொல்வது வெறும் பொய்க்கதை என்பது தெளிவாகும்.

இந்தச் சித்திரங்கள் கல்லின் மேல் மெல்லியதாகச் சாந்து பூசி அது காய்ந்தபின் வர்ணங்களை (Mineral colours)க் கொண்டு எழுதியிருக்கிறது. இப்படிச் சித்திரம் எழுதும் விதத்தை சாஸ்திரக்காரர்கள் Fresco Secco என்பர்.

இதுபோன்ற சித்திரங்கள் ஹைதராபாத் சமஸ்தானத்தில் அஜந்தாவிலும் குவாலியர் சமஸ்தானத்தில் பாக் (Bhag caves) குகையிலும், இலங்கையில் சிகிரியாவிலும் உள்ளன. சித்தன்னவாசல் சித்திரங்கள் கொஞ்சகாலத்துக்கு முன் அதிகக்கேடான நிலையிலிருந்தது. பல இடங்களில் பாசியாலும் புகையாலும் மூடப்பட்டுச் சித்திரம் கண்ணுக்குப் புலப்படாமலேயே இருந்தது. இப்பொழுதிருந்து வரும் புதுக்கோட்டை சமஸ்தான நிர்வாகி (Administrator) ஸர் அலெக்ஸாந்தர் டாட்டன்ஹாம், ஸி. ஐ. இ. அவர்கள் புராதன ஞாபகச்சின்ன ஆராய்ச்சியில் அதிகப் பிரியம் உள்ளவராகையால் புதுக்கோட்டை கண்காட்சிச்சாலை அதிகாரி ஸ்ரீ கே. ஆர். ஸ்ரீநிவாஸய்யரால் சென்னை கண்காட்சிச்சாலையைச் சேர்ந்த (archaeological chemist) ஸ்ரீ எஸ் பரமசிவத்தின் மேற்பார்வையில் அந்தச் சித்திரங்களைச் சுத்தம் செய்வித்துப் பின்னும் கெடாதபடி மருந்துகள் பூசச்செய்திருக்கிறார். சித்திரங்கள் இருந்ததாகவே தெரியாதிருந்த சில பாகங்களில் புதிய சித்திரங்கள் கண்டு அங்கு வேலை

செய்த நாங்கள் ஆனந்தம் கொண்டதுண்டு. நம்தேசத்தின் பண்டைக் காலத்து நாகரிகத்தைக் கண்கூடாகக் காண ஒவ்வொரு தமிழனுக்கும் விருப்ப மிருக்குமென நம்புகிறோம்.

---

அங்குள்ள சிற்பங்களும் சித்திரங்களும் விபரமாயும் மிகத் தெளிவாகவும் புகைப்படங்களெடுத்துச் சேர்த்து ஒரு புத்தக ரூபமாக வெளியிடப்பெற்றிருக்கிறது. உலகெங்கும் பிரபல புஸ்தக சாலைகளில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் ஈடுபட்டவர்கள் நேரில் எழுதி விபரமறியலாம்.

ஸ்ரீ ல. கணேச சர்மா, "இயற்கை இல்லம்" புதுக்கோட்டை.

# மதிப்புரை

**தமிழ்க் கொடி:** [கிடைக்குமிடம், தமிழ்க் கொடி ஆபீஸ், 52, பஸ்ட் குரோஸ் ஸ்டிரீட் மலாக்கா. சந்தா வெள்ளி 2—50 தனிப்பிரதி 20 செண்டு.]

தமிழ்க்கொடி திங்கள் வெளியீடாக மலாயாவி லிருந்து வெளி வருகின்றது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய பல அரிய விஷயங்கள் அறிஞர்களால் எழுதப்பெற்றுப் பத்திரிகையை அழகு செய்வனவாக அமைந்துளது. பலவித பகுதிகள் மூலம் தமிழ் மக்கட்கு அறிவையும், மொழியுணர்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்டக்கூடிய வகையில் தொண்டாற்றிவர முனைந்திருக்கும் தமிழ்க் கொடியைத் தமிழர்கள் அனைவரும் ஆதரித்துப் பயன் பெறவேண்டுதல் அவசியம். தமிழ்க் கொடி இன்னும் பல துறைகளிலும் அபிவிருத்தி பெற்று விளங்க இறைவன் அருள் புரிக!

**படியாதவர் படும் பாடு:** [வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 6, பவழக்காரத்தெரு, சென்னை. பக்கம் 96. விலை அணா 6]

எழுத்தறி வில்லாத நந்தமிழ் மக்கள் படும் பாட்டை எழுத்தறிவு சிறிதுடைய முதியவர்கள் உணரும் வண்ணம் பெரிய எழுத்தில், அழகிய வடிவில், விளக்கப் படங்களுடன் வெளிவந்துள்ள 'படியாதவர் படும் பாடு' என்னும் இந்நூல் எழுத்தறியா மக்களின் அறிவுக்கண்களைத் திறக்குமெனச் சொல்லுதல் மிகையாகாது. இஃது எழுத்தறி வியக்கத் தொண்டர்கட்குப் பெரிதும் பயன்படும். இந்நூலை வெளியிட்ட கழகத்தாரைப் பாராட்டுகின்றோம்.

**வித்யாலயம்** [ஆசிரியர்கள்: திருவாளர்களான தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள், சு. குருசாமி அவர்கள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியீடு. வருடச் சந்தா ரூ. 0—8—0 கிடைக்குமிடம். ராமகிருஷ்ண வித்யாலயம். P.O. கோயமுத்தூர் ஜில்லா] 'வித்யாலயம்' வெளியீட்டின் தைப் பொங்கல் இதழ் கிடைக்கப் பெற்றோம். அதில் கல்வி வளர்ச்சிமுறை பற்றிய கட்டுரைகள், ராமகிருஷ்ண வித்யாலய நடவடிக்கைகள் காணப் பெறுகின்றன.

**சங்கீத பாடப் புத்தகம்:**—(ஆசிரியர்: வி. ராமுடுஐயர். Asst., E. R, High School. தெப்பக்குளம், திருச்சி) 1. பிள்ளைப்பாட்டும், கதைப் பாட்டும் (விலை அணா. 2—½.) 2. அபிநயப் பாட்டும், நாட்டுப் பாடமும் (விலை அணா. 3.) என்ற இரு சிறுவர் பா நூல்களும் கிடைக்கப் பெற்றோம். இவைகள் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும். புத்தகங்கள் ஆசிரியரிடம் கிடைக்கும்.

---

# ஒலி—கேட்கப்படுவதும் கேட்கப்படாததும்

(ஸ்ரீ ல. காமேச்வர சர்மா, எம். ஏ., என். டி.)

ஒலியைப் பற்றின அறிவானது மனிதனுக்கு அநேக விதங்களில் உதவுகின்றது. சங்கீதத்தின் மூலம் ஒலியானது மிக்க இன்பத்தை மனிதனுக்கு அளிக்கிறது. உலக வாழ்வினால் ஏற்படும் துக்கத்தின் பெரும்பகுதியைச் சகித்துக்கொள்ள மனிதனுக்குச் சங்கீதம் மிக்க உதவியா யிருக்கின்றது. தற்கால நாகரிக வாழ்வில் ஒலி வேறு அநேக வழிகளிலும் பிரயோஜனப்படுகிறது. இவ்விஷயத்தைப் பற்றி ஸர் ஸி. வி. ராமன் என்ற விஞ்ஞானி சென்ற டிஸம்பரில் சென்னை அகில இந்திய வானொலி நிலயத்தில் ஒரு சிற்றுரை ஆற்றினார். சமுத்திரத்தில் கப்பல்கள் போய்க்கொண்டிருக்கும் போது, எதிர்த்து வரும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கும் இடங்களை அறிந்து கொள்வதற்கும், சமுத்திரத்தின் ஆழத்தை அறிந்துகொள்வதற்கும் ஒலியின் உதவியை நாடுகிறார்கள் என்று ஸர் ராமன் சொல்லுகிறார். இவ்விதங்களில் உதவக்கூடிய ஒலியை நாம் காதால் கேட்க முடியாது. அவ்வொலிகளை அறிய பிரத்யேகமான கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கருவிகளின் அவசியம், யுத்தம் நடந்து கொண்டிருக்கிற இக்காலத்தில் எவ்வளவு இருக்கும் என்று நாம் அளவிட்டுச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொரு கப்பலிலும் இக் கருவிகள் இருக்கின்றன. முதன்முதல் கண்டு பிடிக்கப்பட்ட கருவிக்குப் 'பிரோகா குழாய்' (Broca tube) என்று பெயர். இக் கருவியில் ஒரு நீண்ட உலோகக் குழாய் இருக்கிறது. அதன் இறுதியில் ஒரு மெல்லிய உலோக காப்சூல் (capsule) இருக்கிறது; இக் காப்சூல் நுனியில் ஒரு மெல்லிய விதானம் இருக்கிறது. இன்னும் வேறு சில கருவிகளில் இவ்விதானத்திற்குப் பதிலாக ஒரு தடித்த ரப்பர் பல்பை உபயோகிக்கிறார்கள்.

மேற்கூறியதி லிருந்து நாம் காதால் கேட்கக்கூடிய ஒலிகளும், அப்படிக் கேட்க முடியாத ஒலிகளும் இருக்கின்றன என்று தெரிகிறது. ஒலி யென்பதே பொருளின் அசைவினால் ஏற்படுகிறது. மணியடித்துக் கொண்டிருக்கும்போது அம்மணியின் விளிம்பைக் கைவிரலினால் மெதுவாகத் தொட்டுப் பார்த்தால் அது லோலமிட்டுக் கொண்டிருப்பது தெளிவாக விளங்கும். ஒரு மணி ஜாடியைக் கவிழ்த்துத் தொங்கவிட்டு அதன் விளிம்பின் குறுக்கே ஒரு பிடில் வில்லை இழுத்தால், மணி ஜாடி சப்தம் செய்யும். மணி ஜாடிக் கருகில் சில தட்டைப் பந்துகளைக் கட்டித் தொங்கவிட் டிருந்தால் அவைகள் கூத்தாடுவதைக் காணலாம். இதிலிருந்து மணி ஜாடி துடித்துக் கொண்டிருக்கிறது என்று அறியலாம். ஜாடியைத் தொட்டு, அதன் துடிப்பை நிறுத்தி விட்டால், ஒலியும் அடங்கி விடும். இதையே இன்னொரு சோதனையால் தெளிவாக விளக்கலாம். படத்தில் காட்டியபடி ஒரு உலோகத் தகட்டை ஒரு பிடில் வில்லால், தகட்டின்



Fig. 1

விளிம்பின் குறுக்கே இழுத்தால் தகடு லோலமிட்டு ஒலி பரப்பும். அது லோலமிடாத சமயத்தில் அதில் தெள்ளிய மணலைத் தெளித்து, பின் வில்லால் இழுத்தால், மணல் துளிகள் துடிப்பு அதிகமாயிருக்கும் இடங்களிலிருந்து, துடிப்பு இல்லாத இடங்களில் வந்து குவியும்.

லோலமிடுகிற பொருளானது காற்றாக இருக்குமானால், அவ்வித ஆலோலனங்களை அவ்வளவு சுலபமாகப் பார்க்க முடியாது. ஆனால் பின் விவரிக்கப்பட்டிருக்கும் சோதனையால் அதை விளக்கலாம். ஒரு சிறு காகிதத் தட்டை அதில் கொஞ்சம் மணலோடு ஒரு



Fig. 2

வாத்தியக் குழாயில் இறக்கு. இவ்வாத்தியக் குழாயின் ஒரு புறத்தில் கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கிறது. துருத்தியிலிருந்து காற்றைச் செலுத்தி வாத்தியக் குழாய் வாசிக்கும்படி செய்யவேண்டும். மணலானது

காகிதத்தின் மேல் குதித்துக்கொண்டிருக்கும். இக் காகிதத் தட்டு சில குறித்த இடங்களில் இருந்தால் தான் மணல் துளிகள் நன்ருகக் குதிக்கும். இன்னும் சில குறித்த இடங்களில் அவைகள் குதிக்கவே குதிக் காது. இதன் காரணம் பின் விளக்கப்படும்.

ஆகவே பொருள்கள் ஆலோலனம் செய்தால்தான் ஒலி உண்டாக்க முடியும். பின் நாம் எந்த ஒலிகளைக் கேட்க முடியும்? எவைகளைக் கேட்க முடியாது? ஒரு பொருளானது ஒரு விநாடிக்குச் சுமார் 20 தடவைக்குக் குறைவாகவோ அல்லது சுமார் 20,000 தடவைக்கு மேலாகவோ லோலமிடுமாகில், அப்பொருள் உற்பத்தி செய்யும் ஒலியை நம் காதால் அறிந்துகொள்ள முடி யாது; ஆனல் அவைகளை ஸ்பரிசப்புலனல் அறிந்து கொள்ள முடியும். சுமார் 20 தடவைக்கு மேலாகவோ அல்லது சுமார் 20,000 தடவைக்குக் குறைவாகவோ ஒரு பொருள் லோலமிடுமாகில், அதிலிருந்து கிளம்பும் ஒலியை நாம் காதால் அறிந்துகொள்ள முடியும். அதி உயர்ந்த ஸ்தாயியை உடைய ஒலிகளை வித்தியாசப் படுத்தி அறிந்துகொள்ளும் சக்தி நம் காதுக்குக் கிடை யாது. சங்கீதத்தில் ஒலி ஸ்தாயி 40லிருந்து 40,000 வரையிலும் இருக்கிறது.

ஒலியின் தன்மையானது பொருள் லோலமிடும் முறைக்குத் தக்கவாறு இருக்கும். அது ஒழுங்கான முறைப்படி ஒரே சீராக லோலமிடுமாகில் அதிலிருந்து உண்டாகும் ஒலிக்குச் சங்கீத ஒலி என்று பெயர். அப்படி யல்லாமல் ஒழுங்கீனமாய், கண்டபடி லோலமிடுமாகில், அதிலிருந்து வரும் ஒலிக்குச் சாதாரண ஒலி அல்லது சப்தம் (noise) என்று பெயர். கல் தரையில் வண்டி ஓடும்போது ஏற்படும் சப்தம், தண்ணீரைக் கையினல் அடிப்பதனல் உண்டாகும் சப்தம், நீர் வீழ்ச்சியினல் உண்டாகும் சப்தம், சமுத்திர அலைகள் போடும் சப்தம், மரத்தின் இலைகள் உண்டாக்கும் சப்தம், இவைகளி லெல்லாம், ஒலித்தன்மையானது அதிவேகமாகவும் ஒழுங்கீன முறையிலும் மாறுகின்றது. காற்று ஹௌல் பண்ணும்போது (அலறும்போது) உண்டாகும் சப்தத் தில் ஒலித் தன்மையின் மாற்றம் கொஞ்சம் மெதுவாக நடக்கிறது. ஒலி மெதுவாக எழும்பி, பின் மெதுவாக இறங்கி விடுகிறது. இதற்கு மாருகச் சங்கீத ஒலி தன் தன்மையில் மாருமல் ஒரே சீராகத் தொனிக்கிறது.

பொருள் லோலமிட்டால் மாத்திரம் ஒலி பரவி விடாது. ஒலி பரவுவதற்கு ஒரு ஜடப் பொருள் ஏது (medium) வேண்டும். இதை ஒரு சோதனையால் நிரூபிக்கலாம். ஒரு கண்ணுடி கூஜா எடுத்து அதைப் படத்தில் காட்டியபடி ஒரு துவாரமுள்ள ரப்பர் அடைப்பானல் மூடி ஒரு கயிற்றினல் சிறுமணியைக்



Fig. 3

கூஜாவிற்குள் தொங்கவிடவேண்டும். அடைப்பானி லுள்ள துவாரத்தின் வழியாய் ஒரு கண்ணுடிக் குழா யைப் பொருத்தி, அதன் வெளி நுனியில் இன்னெரு ரப்பர் குழாயைப் பொருத்தவேண்டும். இக்கண்ணுடிக் கூஜாவின் தண்ணீரை அடுப்பின் மேல் வைத்துக் கொதிக்க வைக்கவேண்டும். சுமார் 15 நிமிடங்கள் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த பிறகு, வெளி ரப்பர்க் குழாயை ஒரு பின்ஞ்ச் கார்க்கால் மூடி உடனே அடுப்பை எடுத்துவிட வேண்டும். கொஞ்ச நேரம் கழித்துக் கூஜாவை ஆட்டினல் மணி ஆடுவது நம் கண்ணுக்குத் தெரியும்; ஆனல் சப்தம் ஒன்றும் கேட் காது. தண்ணீர் கொதிக்குமுன் கூஜாவை ஆட்டி னல் உள்ளிருக்கும் மணி ஆடி, சப்தம் உண்டாகும். கூஜாவிலுள்ள தண்ணீர் கொதிக்குமுன் தண்ணீருக்கு மேலும், மணியைச் சுற்றிலும் காற்றிருக்கிறது. ஆனல் கூஜாவின் தண்ணீர் கொதித்து ஆவி அடங்கின பிறகு, வெளிக்காற்று உள்ளே போகாமலிருக்கும்படி செய்து விடுவோமாகில், தண்ணீருக்கு மேலும், மணியைச் சுற்றிலும் காற்றிராது. இச்சோதனை கற் பிக்கும் பாடம் என்னவென்ருல் ஒலி காலி இடத்தின் வழியாய்ப் பரவாதென்பதே.

(தொடரும்)

ஸ்ரீ பழநி பஞ்சாமிர்தம்

தமிழர்கள் குலதெய்வமும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமான ஸ்ரீ பழனி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்க ளடங்கிய செட் 1-க்கு ரூ 3-8-0.

பக்தர்கள் நாமநக்ஷத்திரத்தால் விசேடமாக முறையே ஆண்டவர் பாதார விந்தத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து பிரசாதமனுப்ப ரூ 1-0-0.

மாதக் கார்த்திகைதோறும் வருடக் கட்டளையாக அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்ப ரூ. 7-0-0.

P. நடராஜ பண்டாரம்,

மலைக்கோவில்,

அயன் மிருஸ், பழனி S. I.

# ஆகாச விமானம்

**(விஞ்ஞானி)**

"முன்னொரு காலத்தில் மலைகள் சிறகு முளைத்துப் பறந்தன; ஊர்களை அழித்தன. ததீசி முனிவனது முதுகெலும்பை வஜ்ராயுதமாகக் கொண்டு இந்திரன் மலைச் சிறகுகளை அறுத்தான். முன்னொரு காலத்திலே திரிபுராதிகள் கோட்டைகளுடன் கிளம்பி ஊர்களை அழித்தனர். சிவன் சினநகை புரிந்தான்; அக் கோட்டைகள் எரிந்தன; அதனால் "பாரில் முப்புரம் வேகப் பல்லை யிளித்தாண்டி" என்று கவிகள் சிவனைப் பாடுகின்றனர். ஹனுமார் ஆகாச மார்க்கமாகச் சென்று கடலைத் தாண்டி இலங்கையில் குதித்தார். இந்திரஜித்து மேகத்தில் மறைந்து போர்செய்தான். இராவணனைக் கொன்று விபீஷணனுக்குப் பட்டஞ் சூட்டி இராமர் புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்திக்கு வந்தார்......" இப்படியெல்லாம் புராணம் சொல்லக் கேட்டால் சில ஆண்டுகளுக்கு முன்னே எல்லாம் "பெரியவாள் கப்ஸா" என்றும் சொல்லியிருப்போம்.

இன்று மனிதன் ஆகாசத்திற் செல்வது சாதாரணமாக இருக்கிறது. "குர்ர்ர்" என்றொரு சத்தம் வருகிறது. மேலே பார்த்தால் சிறகு முளைத்த திமிங்கலம் போலே ஆகாசக் கப்பல் வானைத்துருவிச் செல்லுகிறது.

"மனிதனுவது பறப்பாவது; பைத்தியக் கனவு!" என்று ஒரு காலம் உலகம் நினைத்தது. "ஏன், புட்கள் பறக்கின்றனவே! கெப்பிரியல் முதலிய தேவதைகள் சிறகடித்து இங்கே வருவதாக அறிகிறோமே; நாமும் ஏன் சிறகு கட்டிப் பறக்கக் கூடாது?" என்றனர் சிலர். "பட்டம் பறக்கிறதே; சோப் குமிழிகள் காற்றில் பறக்கின்றனவே; ஆடிக் காற்றில் இலைகள் பறக்கின்றன; பஞ்சு பறக்கிறது; காற்றைவிட இலேசான பொருளானல் பறக்கும்" என்றனர் சிலர். லேஞர்தோ-த-வின்ஸி (Leonardo-da-Vinci 1452-1519) என்ற அறிஞர் காற்றாராய்ச்சி செய்து "பட்சியைப் போலப் பறக்கமுடியும்; அதற்கு ஒரு யந்திரம் செய்கின்றேன் பார்" என்று 'பிளான்' (தரைப்படம்) மட்டும் போட்டுக் காட்டினர். பதினெட்டாம் நூற்றாண்டில் வேதியறிஞர் (Chemists) காற்றின் பகுதிகளை நுட்பமாக ஆராய்ந்தனர். 1767-ல் எடின்பரோ கலாசாலை வேதியறிஞர் நீர்க் காற்றால் (Hydrogen) நிறைந்த புகைக் கூண்டு (Baloon) வானில் செல்லும் என்று கண்டுபிடித்தார். அந்தக் காற்றும் கொஞ்சம் சூடானல் எளிதாகப் பறக்கும் என்று கண்டு பிடித்தனர். அடுத்த ஆண்டு விளையாட்டாகப் புகைக் கூண்டுகளை நாடெங்கும் பறக்க விட்டனர். 1783-ம் ஆண்டு லண்டனிலிருந்து ஒரு புகைக் கூண்டு 43 மைல்கள் பறந்தது. பிறகு கூண்டாகச் செய்யாமல் அதையே மீன் வடிவில் செய்தனர்.

முதல் முதல் உருப்படியான விமானம் செய்தவர் லிலியெந்தல் (Liliental) என்னும் ஜர்மனியரும், பெர்ஸி பில்செர் (Percy Pilcher) என்னும் ஆங்கில வீரவாலிபரு மாவார். இவர்கள் தமது பரிசோதனைகளுக்கே பலியானர்கள். இவர்களைப் பின்பற்றி, 1903-ம் ஆண்டு ரைட் சகோதரர் (Wilber Wright and Orvillie Wright) பெரும் புயலையும் எதிர்த்துச் செல்லும் விமானம் செய்து பறக்கவிட்டனர்; வண்டிக்குக் குதிரைபோல பொறியும் (Engine) துடுப்பும் (Propeller) பூட்டி, விசிறியும் சிறகும் சுக்கானும் இணைத்து, விமானத்தின் மீன்போன்ற உடலை மேலெழுந்து பறக்கச் செய்தனர். விமானம் சமநிலையில் மிதக்கத் தகுந்த சிறகுகளை அமைத்தனர். பிறகு முயன்று பறந்தனர். எத்தனையோ எதிர்ப்புகளை வென்று இடர்களைத் தாண்டி ரைட் சகோதரர் 1908-ம் ஆண்டு தங்கள் அற்புத விமானத்தை உலகிற்குக் காட்டினர். 1907-ல் ஜெர்மனி ஃஜெப்பிலின் விமானம் செய்தது. ஜெர்மனி ஏராளமான ஆகாசக் கப்பல்களையும் (Air Ships), பிரான்ஸ் விமானங்களையும் (Air planes) செய்தன. பிரான்ஸிலே தான் முதல் முதல் விமானமோட்டிகள் அதிகமாக எழுந்தனர். 1909-ல் பிளேரியோ (Bleriot) என்பவர் இங்கிலீஷ் வாய்க்காலைக் கடந்தார். பால்ஹன் என்பவர் லண்டனிலிருந்து மான்செஸ்டருக்குப் பறந்து £ 10,000 பரிசு பெற்றார். 1911-ல் நார்த்கிளிஃப் விமானிகளை ஊக்கினர். இங்கிலாந்தைச் சுற்றிப் பறந்த ஒரு விமானிக்கு £ 10,000 பரிசு கிடைத்தது. ஆனல் ஆரம்பத்தில் இந்த விமானச் சோதனைகளில் உயிரிழந்தவர் பலர். 1914-ல் பிக்ஸ்டன் என்பவர் மணிக்கு 87 மைல் வீதம் பறந்து பரிசு பெற்றார். ஆனல் இப்போதும் ஜனங்கள் வெறும் வேடிக்கை பார்த்து "விமானம் பறக்குது டோய்!" என்று கைகொட்டிச் சிரித்தனர். ஆரம்பத்தில் கீழே விழுந்து உயிரிழந்த விமானிகளை "ஆகாசத்தைப் பிடித்தாயோ......விழு!" என்று கேலி செய்தனர். விளையாட்டுப் புகைக் கூண்டுகள் போலவே விமானங்களை மதித்தனர். ஜெர்மனியில் கோந்த் ஃஜெப்பிலின் (Count Zeppelin) என்பவன் தனது பெயரால் விளங்கும் ஆகாயக் கப்பல்களை வெற்றியுறச் செய்தான். 1912-ல் விக்தோரியா லூயி என்ற அவர் விமானம் 23 பிரயாணிகளுடன் $7\frac{1}{2}$ மணி நேரத்தில் 200 மைல் சென்றது. 1913-ல் அதில் 8,551 பிரயாணிகள் 400 தடவை, 29,430 மைல்கள் சென்றனர்.

இது காறும் விமானங்கள் பகலிலேயே பறந்தன. கிராஹாம் ஒய்ட் என்னும் ஆங்கில வீரரே முதன்முதல் இரவில் பறந்து ஒரு பந்தயத்திற் பரிசு பெற்றார். அவருக்குப் பிறகு விமானங்கள் இரவும் பகலும் பறக்

கின்றன. முதலில் விமானங்கள் அதிக உயரம் ஏறவில்லை; அதற்காகப் பரிசு வைத்தனர். 1909-ல் **லாதாம்** என்பவன் 500 அடி மேலோங்கிப் பரிசுபெற்ருன். 1910-ல் **ஷாவே** (Chavey) என்பவன் 5,887 அடி உயர்ந்து, உலகை வியக்க வைத்தான். அவனே அடுத்த மாதம் ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி இத்தலிக்குச் சென்ருன். ஹன்னிபாலும், நெப்போலியனும் வெகு கஷ்டப்பட்டுத் தாண்டிய ஆல்ப்ஸை ஷாவேயின் விமானம் ஒரு நொடியில் தாண்டி விட்டது.

1914-19-ல் நடந்த பெரும்போரில் டாங்கும் ஆகாயவிமான குண்டுமே மிகப் பயங்கரமான நிலப் போர்க் கருவிகளா யிருந்தன. அப்போருக்குப் பிறகு ஆகாய விமானத்தில் எத்தனையோ புதிய புதிய மாறுதல்கள் ஏற்பட்டன. 1919-ல் அத்லாந்திக் சமுத்திரத்தை ஒரே மூச்சில் தாண்டப் பந்தயம் வைத்தனர். **அல்காக், விட்டன்பிரௌன்** என்னும் ஆங்கிலேயர் 16-மணி நேரத்தில் ஒரேயடியாக 1,890 மைல் பறந்து அத்லாந்திக் மூரியைத் தாண்டினர். 1929-ல் DO,X என்னும் மிகப்பெரிய ஜெர்மன் ஆகாயக் கப்பல் **களாட்டோர் நியர்** என்பவரால் செய்யப்பெற்றது. அதில் மூன்று தளங்கள் அமைந்தன ; 6,360 குதிரைத் திறன் (Horse power) உள்ள 12 மோடார்கள் இருந்தன ; 12 தடுப்புகள் அதைத் தள்ளின. 169 பிரயாணிகள் அதில் தாராளமாகச் சென்றனர்.

காற்றுமோதிப் பட்டம் பறப்பதுபோலவே, விமானம் காற்றை எதிர்த்துச் செல்லுகிறது. எதிர் காற்றில்அது கனவேகமாகச் செல்லும். அது அந்தரத்தில் நிற்காது. விமானச் சிறகுகளை முன்னே மாத்திரஞ் செய்தனர் ; இப்போது செம்பும் அலுமினியமும் கலந்த கெட்டி-அலுமினியம் என்னும் உலோகத்தால் செய்து மேலே துணி மூடி வர்ணம் பூசுகிருர்கள். முன்னே ஒரு விசிறி; இப்போது சுமார் 12 விசிறிகள் உண்டு ; விசிறிக்கு இரண்டு இறக்கைகள் ; நிமிஷத்திற்கு 2,000 தரம்சுற்றும் இந்த விசிறிகளாலேயே விமானம் பறக்கும்போது அப்படிச் சத்தம் கேட்கிறது. விசிறிகளை இயக்குவது பொறி (Engine). விமானப் பொறி மிக நுட்பமாகவும், உறுதியாகவும் இருக்கும். போதுமான பெட்ரோல் சேர்த்துவைத்துக் கொண்டே பொறியை இயக்க வேண்டும். விமானத்தை விரும்பியபடி மேலே, கீழே, நடுவே, எண்ணிய திசையில் இயக்க, வாலிலும் சிறகிலும் சுக்கான்கள் (Rudders) அமைந்துள்ளன. விமானங்கள் வரவர நேர்த்தியாகின்றன ; வகை வகை விமானங்கள் இப்போது வழங்குகின்றன. அவற்றில் நிலத்திலிருந்தே உயரப் பறப்பது, **நில விமானம்** (Aeroplane). கடலிலிருந்து பறப்பது **கடல் விமானம்** (Sea-plane); இதற்கு அடியில் தோணியமைந்திருக்கும். நீர் நிலம் இரண்டிலும் செல்வது **நீர் நில விமானம்** (Amphibian).

உலகம் முழுதும் இப்போது விமானப் போக்கு வரவால் இணைக்கப்பெற்றுள்ளது. தரையில் புகைவண்டி போலவே வானில் விமானம் பறக்கிறது. இப்போது எட்டுமைல் உயரத்தில் மணிக்கு 400 மைல் வேகத்தில் விமானக்கூட்டங்கள் பறக்கின்றன. ஒருவாரத்தில் ஒருவர் இந்தியாவிலிருந்து லண்டன் சென்று வரலாம். 200 மணிநேரம் ஆகாயத்தில் சலிக்காமல் பறக்கமுடியும். 4,966 மைல்கள் செல்லமுடியும். அனுமார் இலங்கைக்குத் தாவியது பெரிதல்ல; இப்போது அத்லாந்திக் பசிபிக் சமுத்திரங்களைத் தாண்டுகிருர்கள். எவரஸ்டு சிகரத்தை எட்டப் பறக்கிருர்கள். புதிய நிலங்களைக் கண்டுபிடிக்க, விரைவாகப் பிரயாணம் செய்ய, பகைவரைக் காண, நாடுகளை அளக்க, படம் பிடிக்க, அறிக்கைகளைத் தூவ விமானங்கள் பயனுகின்றன. ஆனல் அவற்றினின்றும் விழும் குண்டுகள் உலகை அழிக்கும்போதே மனம் பகீரென்கிறது. உலகமே நலந் தீதின் விளையாடல்.

போர் விமானங்கள் மணிக்கு 250 முதல் 300 மைல் வீதம் பறக்கின்றன. 400மைல் கூடப் பறக்கும். அவை ஒரு நொடிக்கு 268 கஜங்களுக்கு மேல் செல்லுகின்றன. என்ன வேகம்! என்ன வேகம்! விமானம் உயரவும் தாழவும், நேராகச் செல்லவும், பகை விமானங்களைத் துரத்திச் சரியான தூரத்திலிருந்து குண்டு போடவும் கணக்குகள் உண்டு. ஒவ்வொரு விமானத்திலும் சுமார் 8 பீரங்கிகள் உண்டு. பொத்தானை அமுக்க வேண்டியதுதான். ஊழிக்கனல் பறந்து எதிரிகளைப் ‘படபட’வென்று சுடும். குண்டுகளை எறியும் பீரங்கிகள், சாதாரண யந்திரத் துப்பாக்கிகள் இரண்டும் விமானங்களில் அமைந்திருக்கும். அவற்றினின்று பாயும் தீ, எதிரி விமானத்தில் பட்டதும் அது சின்னபின்னமாகிச் சிதறி விழும். இன்று நடக்கும் போர், பெரும்பாலும் விமானப்போர். கிழக்கே ஜப்பான் விமானங்கள் சீனத்தை அழிக்கின்றன. மேற்கே ரஷ்ஷிய விமானங்கள் பின்லாந்தை அழிக்கின்றன. ஜெர்மன் விமானங்கள் போலந்தை அழித்தன. இன்னும் என்னென்ன அழிவுகள் வருமோ! விஞ்ஞானத்தின்மேல் குற்றமில்லை ; மனிதனிடம் அருளில்லை ; அதனுல் இயற்கையின் சக்திகள் இவ்வாறு பொருட்போரில் புகுந்துள்ளன. எல்லாம் அருளியக்கத்திற்கே பயனுகும் காலத்தை எதிர்பார்ப்போம்.

# என்ரிக் இப்ஸென்

("ராஜாராம்")

சென்ற நூற்றாண்டில் முன்வந்த நாடகாசிரியருள் **என்ரிக் இப்ஸென்** (Henrik Ibsen) தான் மிகவும் கியாதி பெற்றவர். இவர் 1828-ல் நார்வே தேசத்தைச் சார்ந்த ஸ்கீன் நகரத்தில் ஜனித்தவர். பால்யத்தில் தகப்பனாரை யிழந்தமையினால், ஸர்வகலாசாலையிற் படிக்க முடியாமல் அவர் ஒரு வைத்தியரிடம் வேலைக்கமர வேண்டியதாயிற்று. சில வருஷங்கள் கழித்து இப்ஸென் காவ்யங்களும் நாடகங்களு மியற்ற வாரம்பித்தார். நாளடைவில் நார்வே தேசத்தைத் துறந்து அயலூர்களில் வசிக்கலானார். இக்காலத்தில் தான் இவர் தம் பிரசித்தி பெற்ற சமூக நாடகங்களியற்றினார். வயது முதிர்ந்த பிறகு இவர் நார்வே திரும்பினார். ஜனங்களெல்லோரும் இவரைப் பாராட்டினார்கள். இறுதியிலிவர் புத்தி சில வருஷங்கள் சிறிது மங்கியிருந்தது. 1906-ல் இவர் காலமானார்.

சுமார் இருபத்தைந்து நாடகங்கள் இப்ஸெனியற்றினார். சரித்திரத்தை யொட்டிய **லேடி இங்கர்** (Lady Inger of Ostraat) போன்ற நாடகங்க ளிளமையில் எழுதியன ; ஆகையால் அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் 1858-ல் வெளிவந்த **காதலின் கேலிக் கூத்து** (Love's Comedy) காதலரின் மனப்போக்குகளை எடுத்துக் காட்டி நம்மைச் சிரிக்கச் செய்கின்றது. இது போலவே **வாலிபர் சங்க** (League of Youth) த்தில் தன் காரியத்தையே கவனிக்கும் போலித் தலைவர்களை இப்ஸென் கேலி செய்திருக்கிறார்.

இதற்கு நடுவில் இப்ஸென் **ப்ராண்ட்** (Brand), **பீர் கிண்ட்** (Peer Gynt) என்று இரண்டு நாடகங்கள் காவ்ய நடையிலியற்றினார். இவ்விரண்டு நாடகங்களிலும் இப்ஸெனின் மனோபாவமும், காவ்யசிற்பமும், நகைச்சுவையும் மனதைக் கவரக்கூடியதாக விருக்கின்றன. ப்ராண்ட் தத்வ மார்க்கத்தைப் பின்பற்றுகிறார் ; ஆனால் உலகவியல்புக் கேற்றபடி தன் நடத்தையைச் சரிக்கட்டிக்கொள்ள அவரால் முடியவில்லை. சத்தியத்தைப் பின்பற்றுதலிலேயே தன்னுயிரையு மிறுதியில் கொடுக்கிறார்.

பீர் கிண்ட் ப்ராண்டுக்கு நேர்மாறாக நடக்கிறார். தன்னைக் காதலிக்கும் பெண்ணின் கற்பையழித்து விட்டு அவளைக் கைவிடுகிறார் ; கேவல வழிகளையே நோக்குகிறார் ; தன் சுயநலத்தையே எப்போதும் தேடுகிறார். முடிவில் எல்லாம் அவரைக் கைவிடுகின்றன. ஆதிமுதல் ஏகமனதுடன் காதலித்துவரும் ஸால்விக் (Solveig) மட்டுமே அவருக்கு நல்வரவு சொல்லி அவரைத் தாய்போல் பாதுகாக்கிறாள்.

**ப்ராண்டும், பீர் கிண்டும்** எவ்வளவு அழகாயிருந்தபோதிலும், இப்ஸென் நாடகச் சிற்பத்திற்கு புத்துயிரளித்தது அவர் சமூக நாடகங்களால் மட்டுமே. 1877-ல் வெளிவந்த **சமூகத்தின் தூண்கள்** (Pillars of Society) இப்ஸெனின் முதற் சமூக நாடகமெனச் சொல்லலாம். இந்த நாடகத்தின் கதாநாயகன் சில பொய்களை அஸ்திவாரமாகப் போட்டுத் தன் சமூக மதிப்பை யெழுப்பியவன். பணத்திற்காகப் பெண்ணை மணந்தவன் ; பணத்திற்காக மித்திரத்ரோகம் செய்தவன். ஆனால் பாமர ஜனங்கள் அவனை ஒரு சமூகத்தின் முக்கியத் தூணாக மதித்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய அழுக்கு வெளிப்படுகிறது. அவனாகவே தன் பூர்வ கார்யங்களை ஜனங்களிடம் ஒப்புக்கொண்டு "சுதந்திரமும் சத்தியமுமே சமூகத்தின் தூண்கள்" என்று தன் புது நம்பிக்கையைக் காட்டுகிறான்.

இதற்கு மூன்று வருஷத்திற்குப் பிறகு **பொம்மையின் வீடு** (A Doll's House) நடிக்கப்பட்டது. இதன் கதாநாயகியான நோரா (Nora) தன் கணவனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் தகப்பனாரின் கையெழுத்தைத் தானே ஒப்பமிடுகிறாள். இது தனக்குத் தெரிந்தவுடன் அவளின் அளவு கடந்த அன்பைப் போற்றாமல், அவள் கணவன் அவளைத் தாறுமாறாகத் தூஷிக்கிறான். அவள் மனோராஜ்யங்கள் இப்படி விபரீதமாக முடியவே, நோரா தன் கணவனையும், குழந்தைகளையும் விட்டு விட்டு வெளியே செல்கிறாள்.

**பொம்மையின் வீடு** பெண்ணின் உரிமையைப் பற்றிய முதற் சமூக நாடகம். நோராவின் கணவன் அவளை ஒரு பொம்மைபோல மட்டும் நடத்தி வந்தான். அவள் கடமை தன் கணவன் வீட்டை யலங்கரிக்கவும், அவனுடன் சில காலங்களில் சிரித்து விளையாடவும், அவனுடன் வெறும் தாசிபோல் சில சமயம் படுப்பதும் தவிர வேறில்லை. பெண்ணிற்குத் தனி ஆத்மா எது? தகப்பன், கணவன், பிள்ளை—ஒருவரில்லா விட்டால் மற்றவர் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதே. நோரா தன் ஆத்மாவைச் சோதனை செய்து, தன் வாழ்க்கையின் உண்மையைத் தானாகவே நிர்ணயித்துக் கொள்ள வேண்டுமென்றால், தன் கணவன் வீடென்ற ஜெயிலை விட்டு விலகியே தீரவேண்டும். இந்த நிச்சயத்துடன் தான் நோரா தன் கணவன் வீடு துறந்து வெளியே போகிறாள்.

எல்லாப் பெண்களும் இப்படி நோரா போலவே நடக்க வேண்டுமென்பது இப்ஸென் கொள்கையல்ல. ஆனால் ஒரு குடும்பத்தின் சந்தோஷத்திற்கு பரஸ்பரம்

அன்பும் நம்பிக்கையு மவசியம். ஷேக்ஸ்பியர் (Shakespeare) எழுதிய **ஜூலியஸ் ஸீஸர்** (Julius Caesar) என்ற நாடகத்தில், போர்ஷியா (Portia) தன் கணவனிடம் தனக்கு அவனுடைய இரகசியங்களைத் தெரிந்துகொள்வதற்கு உரிமை யுண்டென்று உருக்கத்துடன் வாதாடுகிறாள். அதுபோலவே ஒவ்வொரு பெண்ணிற்கும் உரிமையுண்டு. அவள் கேவலம் வீட்டிலிருக்கும் பொம்மையல்ல ; சமையற்காரியல்ல ; கூத்தியுமல்ல ; தன் கணவன் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ள உரிமையுள்ள தர்மபத்தினியே. கணவன் தன் மனைவி போக்கையறிந்து, அதற்குப் புகல் விட்டு, அவளாத்மாவின் பூரண வசுந்தரத்தையடையத் துணை புரிய வேண்டும்.

**பொம்மையின் வீட்டின்** நாடக சிற்பத்தை மட்டும் நோக்கும்போது ஒரு முக்கிய விஷயம் புலப்படும். இப்ஸென் காலத்துக்குமுன் பிரசித்திபெற்ற நாடகங்களினுட் கட்டுப்பாட்டைப் பின்வருமாறு பிரிக்கக் கூடும்:

(1) நாடக பாத்திரங்களின் கூட்டுறவுகளை விவரித்தல் (Exposition) ;

(2) நாடகத்தின் முக்கிய குழப்பத்தைச் சித்தரித்தல் (Complication) ;

(3) குழப்பத்திற்கு பிறகு நிர்ணயமாகும் அமைதியைக் காட்டுதல் (Reversal of fortune).

இம் மூன்று பாகங்களும் அநேக நாடகங்களில் மூன்று அங்கங்களுக் கிணையாகும்.

**பொம்மையின் வீட்டில்** மேற்குறிக்கப்பட்ட மூன்றாவது பகுதிக்குப் பதில் சமூக சீர்திருத்தத்திற்கு வழி காட்டும் விவாத (Discussion) மொன்று பொருந்தி இருக்கிறது. நோராவுக்கும் அவள் கணவனுக்கும் கடைசி அங்கத்தில் நடக்கும் சம்பாஷணை ஒரு நீடித்த விவாதமென்று சொல்லலாம். நாடகம் முடியுமென்று எதிர்பார்க்கும் சமயம், நோரா திடீரென்று தன் கணவனிடம் "உட்காருங்கள், நாம் அதிக விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது" என்று சொல்லுகிறாள். பின் வருவதுதான் நாடகத்தின் உள்ளர்த்தத்தை வெளிப்படையாக்கும் விவாதம்.

**பொம்மையின் வீட்டிற்குப்** பிறகு மற்ற சமூக நாடகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வெளிவந்தன. **பிசாசுகள்** (Ghosts) பெற்றோர் செய்த வினை பிள்ளைகளைப் பிடிக்குமென்ற கிறிஸ்தவப் பழமொழிக்கு உதாரணமாகும். புருஷன் எவ்வளவு விபரீத புத்தியுடையவனாயினும் மனைவி அவனை விட்டு விலகக் கூடாதென்று சொல்லும் சமூகத் திட்டத்தைப் **பிசாசுகள்** தாக்குகின்றன. நோராவைப் போல் தன் கணவனை விட்டு ஓடாததால், ஆல்விங் மனைவி (Mrs. Alving) ஆயுள் காலம் வரை கஷ்டத்துக்கு ஆளாகிறாள். தகப்பனின் தீயசெயல்களால் பிள்ளை ஆஸ்வால்ட் (Oswold) பிறவியிலேயே உடம்பிலும் மனதிலும் பலமற்றுக் கெட்டுப் போகிறான். தனக்குப் பைத்தியம் பிடிக்குங்கால் பாஷாணங் கொடுத்துத் தன்னைக் கொல்லத் தன் தாயையே ஒப்புக்கொள்ள வற்புறுத்துகிறான். அவளும் பாதி பித்துப் பிடித்தவளாய் தலையசைக்கிறாள். சில நிமிஷங்களுக் கெல்லாம் ஆஸ்வால்ட் "அம்மா, சூரியனைத் தா" என்று பைத்தியம் பிடித்து உளறுகிறான். இத்துடன் திரையும் விழுகிறது.

**ஜனங்களின் விரோதி** (An enemy of the People) என்ற அடுத்த நாடகத்தில் ஜனநாயகத்திற் பதுங்கிக் கிடக்கும் சில விஷமங்களை இப்ஸென் காட்டியிருக்கிறார். ஸ்டாக்மன் (Stockmau) என்ற முனிசிபல் டாக்டர் தன் தமையனாகிய முனிசிபல் தலைவருக்கு நகர ஸ்நான கட்டங்களில் பாஷாணங் கலந்திருக்கிறதால், அவைகளை மூடவேண்டுமென்று சொல்லுகிறார். தலைவர், அங்கத்தினர், பத்திரிகாசிரியர் முதலிய எல்லோரும் இந்த யோசனையை எதிர்க்கிறார்கள். ஸ்நான கட்டங்களை மூடினால் ஊருக்கு வரும் வரும்படி நின்றுவிடும். பாஷாணம் தண்ணீரில் கலந்திருந்தாலென்ன வந்துவிட்டது? சந்தேகப்படுவோர் குளிக்க வேண்டாம்; அயலூர் ஜனங்கள் வந்து, குளித்துவிட்டுப் பணங் கொடுத்தால் அதை யேன் வாங்கிக் கொள்ளக்கூடாது? இப்படி உண்மை தெரிந்துகொண்டே ஜனங்களைப் பாஷாணம் சாப்பிடச் செய்வது மகா பாவமென்று டாக்டர் ஸ்டாக்மன் வாதாடுகிறார். ஆனால் அவர் சொல்லுவதைக் கேட்பாரில்லை. அவர் பெண் தன் வேலையை யிழக்கிறாள் ; அவர் பொதுக் கூட்டத்தில் பேசும்போது அவருக்கு தடியடி மட்டுமே கிடைக்கிறது ; "ஜனங்களின் விரோதி" யென்ற பட்டமும் கிடைக்கிறது.

**சமூகத்தின் தூண்கள், பொம்மையின் வீடு ; பிசாசுகள், ஜனங்களின் விரோதி** ஆகிய நான்கு நாடகங்களுந்தான் இப்ஸெனின் முக்கிய சமூக நாடகங்கள். இவைகளுக்குப் பின் பிரசுரிக்கப்பட்ட நாடகங்கள் எட்டையும் பற்றி மற்றொரு பகுதியில் விவரிப்போம்.

(தொடரும்)

# “ஸ்டாலின்”

(ப்ரொபசர் இந்திர வித்யாவாச்சஸ்பதி)

ஸ்டாலின் ஹிட்லரைப்போலப் பேச்சாளியல்ல. டிராஸ்கியைப்போல உணர்ச்சி பொருந்திய எழுத்தாளியல்ல. மேலும் ரூஸ்வெல்ட்டைப் போன்ற அனுபவ ராஜீயவாதியுமல்ல.

போல்ஷ்விசம் ஒருவகைப்பட்ட வேதாந்தக் கொள்கை நிரம்பியதாகும். ஆனால் ஸ்டாலினோ வேதாந்தியுமல்ல. இருந்தாலும் அவர் போல்ஷ்விசத்தின் இன்றைய பிரதான நிர்மாண கர்த்தாவாக இருக்கிறார். இவைகள் அவரிடத்தில் பொருந்தி இராமல் இருந்தாலும் ராணுவத்திறமை கொண்ட சிப்பாயாகவாவது இருக்கிறாரா என்று பார்த்தால் அதுவுமில்லை. ராணுவ முறைப்படி பார்த்தால் அவர் சாதாரண சிப்பாயாக இருக்கத்தான் முடியும். இவைகளைக் கொண்டு பார்த்தால் எந்த வலிவைக்கொண்டு ரஷியாவில் ஸ்டாலினுக்கு இவ்வளவு பிடிப்பு இருக்கிறதென்ற கேள்வி எழும்புகிறது. ரஷ்ய போல்ஷிவிச இயக்கத்தின் தந்தையாக லெனின் இருந்தார். லெனின் எதையும் கிரியாம்சையில் தனக்குத் தானே வழியை ஏற்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மேலும் மனித வர்க்கத்தை புத்தப் புது வழியில் அழைத்துச் செல்லும் திறமை லெனினுக் குண்டு. இப்பொழுதுள்ள பெரிய மனிதர்களில் மகாத்மாஜிக்கு ஒப்பாக எவரையேனும் சொல்ல முடியுமென்றால் கூசாமல் லெனினைத்தான் சொல்லமுடியும். இப்பொழுதுள்ள சில ராஜீய வாதிகள்போல தனது கொள்கையைத் தனக்குத்தானே தெரிந்துகொள்ளாத அல்லது வகுத்துக்கொள்ள முடியாத ராஜீய வாதியல்ல லெனின். லெனினை ஒரு புதிராக வைத்தால் அதில் அநேக குணங்கள் இருப்பது நமக்குத் தெரியவரும். பெரும் தத்துவங்களைக் கண்டறிவது மட்டும் லெனினிடம் பொருந்தி இருக்கவில்லை. அந்தத் தத்துவங்களை அனுபவத்தில் கொண்டுவரும் ஆற்றலும் கேட்போர் மனதில் பதியவைக்கும் காரணகாரியத் திறமையும் அவருக்குண்டு. இவையெல்லாம் ஒருங்கே சேர்ந்து ஒரே மனிதனுக்கு வாய்ப்பதில்லை. பெரும்பாலும் உலகத்தில் தத்துவத்தை விரும்புபவர்கள் கிரியாம்சையில் வெற்றி யடைவதில்லை. கிரியாம்சையில் உள்ளவர்களுக்குத் தத்துவம் புலப்படுவதில்லை. இவை இரண்டு குணங்களும் லெனினிடம் நிரம்பியிருந்தன.



லெனின் காலத்திற்குப் பிறகு சோவியத் ரஷ்யா இரண்டு பிரிவாகப் பிரிந்தது. ஒன்று டிராஸ்கியும் அவர் கூட்டமும்; மற்றொன்று ஸ்டாலினும் அவர் கூட்டமும். இவைகள் தடுக்க முடியாததாய் விட்டன. ஏனென்றால் இவைகளுக்குத் தலைமை வகித்தவர்கள் லெனினுடைய இரண்டு குணங்களை அல்லது கொள்கைகளை நடத்தியவர்கள். டிராஸ்கி லெனினுடைய பறையாகும். மேலும் அவர் கவர்ச்சி பொருந்திய எழுத்தாளராகவும் கொள்கையைப் பரப்பும் பிரசாரகராகவும் இருந்தார். புதுக்கொள்கைகளைத் திறமையாக மக்களுக்கு எடுத்துக் காட்டும் திறமையும் டிராஸ்கிக்குண்டு.

ஸ்டாலின் லெனினுடைய கிரியாம்சையின் பிரதிநிதியாக இருந்தார். அவருக்கு எப்பொழுதும் அதிகம் பேசுவதற்கோ அல்லது எழுது

வதற்கோ வராது. ஆனால் ஒன்றைப் பண்ணவும் செய்யவும் ஸ்டாலினுக்கு வரும். லெனின் கொடுத்ததை ஸ்டாலின் பிரயோகம் பண்ணினார்.

லெனினுடைய அற்புத சக்தியானது இந்த இரண்டு மஹா புருஷர்களையும் தன்னுள் இழுத்துக்கொண்டது. ஆனால் இறந்த பிறகு இரண்டு சக்தியின் பிரதிநிதிகளுக்குள் சச்சரவு உண்டாகி விட்டது. இரண்டு சக்தியும் லெனின் ஸ்தானத்தை அடைய ஒன்றுடன் ஒன்று மோதியது. சரித்திரத்திலேதான் மஹா புருஷர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருப்பதில்லை. சந்தர்ப்பத்தை அவர்களே சிருஷ்டித்து விடுகிறார்கள். சாதாரண ஜனங்கள் கிடைத்த சமயத்தைக்கூட நழுவ விட்டுவிடுவார்கள். அந்த மஹா புருஷர்கள் சந்தர்ப்பத்தை வேண்டும்போது தேவையான அளவுக்கு உண்டாக்குவதும் அழிப்பதும் உண்டு. லெனினுக்குப் பிறகு ரஷ்யாவின் தேவை என்னவாக இருந்தது? ஒரு கொள்கையைச் செயலில் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்தது. லெனின் கண்ட அல்லது கனவுகண்ட கொள்கையை இன்று பல குழப்பங்களுக்கிடையே ரத்தங்கூடச் சிந்தி நிலைநாட்டியதால் இன்று லெனின் கொள்கையின் சாயல் ரஷ்யாவில் இருப்பதாகச் சொல்லலாம். அந்த வேலை ஒரு கவியாலோ அல்லது அறிவாளியாலோ செய்து முடிக்கக் கூடியதல்ல. அதிக உற்சாகம் நிறைந்தவர்களால் அமைதியான அடிப்படையைக் கொண்ட வேலைத் திட்டத்தை நடத்தமுடியாது.

லெனினுக்குப் பிற்காலம் ரஷ்யாவின் தலைமைப் பதவி டிராஸ்கி கைக்கு வந்தது. ஆனால் மேற்கண்ட அதிக உற்சாகம் அவரிடம் இருந்ததால் அவரால் அதைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடவில்லை.

உத்வேகமும் பிரசாரமும் நிரம்பி இருந்த ரஷ்யாவில் லெனினுக்குப் பிறகு டிராஸ்கியால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. அதைச் செய்ய ஸ்டாலின் வேண்டியதிருந்தது இந்த ஒரே விவகார ஞானத்தினால்தான் ஸ்டாலின் டிராஸ்கியை ஓட்டினார். இன்று ஸ்டாலின், ரஷ்யாவின் அதிகாரியாயிருக்கிறார். டிராஸ்கி தேசப்பிரஷ்டராக இருக்கிறார். ஸ்டாலின் ரஷ்யாவோடு பின்னிக்கொண்டார். ஆனால் இதிலிருந்து போல்ஷ்விசம் ரஷ்யாவில் அமைக்கப்பட்டு விட்டதா என்ற கேள்வி வேறு விஷயம். அதற்குப் பதில் சொல்லுவதும் கடினம். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. என்னவெனில் போல்ஷ்விசம் என்று ஏட்டளவில் இருந்த ஒன்றைச் செயல் முறையில் கொண்டுவர ஸ்டாலின் அதிகக் கஷ்டப்பட்டிருக்கிறார். ஆனால் இன்றைய ரஷ்யா ஒரு யுத்தத்தில் இறங்கியுள்ளது. அதுவும் தற்காப்புக்காக அல்ல. ஆக்ரமிப்புக்காகச் சண்டையாடுகிறது. அந்த யுத்தம் ஸ்டாலின் மனப்பான்மையின் கண்ணாடியாகும். இந்த யுத்தத்தின் முடிவு எப்படி இருக்கும் என்று எவராலும் இப்பொழுது கூறமுடியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்த யுத்தத்தின் முடிவின்மீதே ஸ்டாலின் சார்ந்திருக்கிறார்.

—மொழிபெயர்ப்பு (கு. மு.)

## முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்

யாழ்ப்பாணத்து நவாலியூரிலே உயர் குலத்துத் தோன்றிய அம்பலவாண இறைசுவார் வீரசிங்க உடையாரின் வழித்தோன்றலாயுதித்த செல்லப்பா பிள்ளையின் புத்திரர் திரு. **இராசநாயகம்** அவர்கள். இவர் யாழ்ப்பாணத்தார்களின் சரித்திரத்துக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்ற விருப்புடையவராயிருந்தார். அதன் பொருட்டு மிகவும் உழைத்தார். சரித்திர ஆராய்ச்சிக்காக இங்கிலாந்திற்கு 1929-ல் சென்று திரும்பினார். அத்துடன் நில்லாது கடைசிக் காலத்தில் **நூற்பெயர் அகராதி** என்ற புத்தகத்திற்காக 30,000 தமிழ்ப் புத்தகங்களின் பெயரைத் தொகுத்து அந்தாதி, வெண்பா, சரித்திரம், சமயம் எனப் பலவாறு வகைப்படுத்தித் தொகுத்திருக்கிறார். மற்றும் முதலியார் அவர்கள் சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கத்தினராயிருந்து பழைய இலங்கை அரசர்களின் தமிழ்க் கடிதங்கள் இறந்தொழியா வண்ணம் தொகுத்து செப்பனிட்டு அரசாங்கத்தாரைக் கொண்டு வெளியிட்டிருக்கிறார். தமிழுக்கு பலப் பல தொண்டுகளாற்றி யிருக்கிறார். முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் 17-1-'40-ல் இறைவனடி சேர்ந்தார் என்பது கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

# *பெருங்காயம்

இது, பாரஸீகம், துர்க்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், காஷ்மீரம், பஞ்சாப் முதலிய இடங்களில் தன்னிச்சையாயும், அபரிமிதமாயும் பயிராகும் ஓர்வகைச் சிறு செடியின் பால் அல்லது பிசின். இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கடைகளில் விற்கப்படுகின்றது. அநேக நூற்றாண்டுகளாக இந்தியர் தாங்கள் உண்ணும் உணவிற்குரிய பதார்த்தங்களிலும் நோய் தீர்க்கும் மருந்துகளிலும் உபயோகித்து வருகின்றனர்.

இது மஞ்சள் நிறம். அதிக வாசனை யுள்ளது. சற்றேறக்குறைய வெள்ளைப்பூண்டினது வாசனை வீசும். கரகரப்புடன் மிகவும் கசப்புடையது. சாராயத்தில் கரையும். நீர் விட்டரைத்தால் பால் நிறமாயிருக்கும். க்ஷாரங்களுடன் கூடின் பொடிபடும்.

இதில் ஓர்வகை வெண்ணிறம் பொருந்தியது முண்டு. அதற்குச் '**சோமகாயம்**' எனப் பெயர். இது மேற்கூறிய காயத்திலும் அதிக வீரிய முடையது.

**குறிப்பு** :—இது முக்கியமாய் இரத்தத்தைச் சூடாக்கி, நரம்புகளை வெப்பப்படுத்தும். இருதய ஓட்டத்துக்குக் கிளர்ச்சியை யுண்டுபண்ணிக் காமக் கிளர்ச்சியை யுண்டாக்கும். இதைத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டுவரின் தொண்டைப் புண், வயிறுப்பல், அசீரணபேதி, மூத்திர எரிச்சல் புளியேப்பம் இவைகளை யுண்டுபண்ணும்.

**குணம்** :—இதனால் தந்தரோகம், தந்தமூல ரோகம், சகல சர்ப்பவிடம், தேள்விடம், கிருமி, அசீர்ணம், வாதாதிக்கம். உதாவர்த்தவாதம், யோனிரோகம், இருதவாயு, எண்வகைக் குன்மம், உதரரோகம், கருப்பவித்திரதி, சூலை, இரத்தக்கிருமி, கபநோய், தேகக் குடைச்சல் ஆகியவை நீங்கும்.

தந்தவேதந்த மூலத்தீதழும்பிணி
சருவகாளம் விருச்சிகங்கீடம்மா
மந்தம்வாதம் உதாவர்த்தம் அல்குல்நோய்
மார்பணங்கட்ட குன்மம்மகோதரம்
உந்துகொர்ப்பத்தின் வித்திரஞ்சூலைச்சூர்
உதிரப்பூச்சி சிலேத்துமத்துறும்வலி
வந்தமெய்க்கடுப் போடிவைமுற்றுமே
மாயுநாறுநற் காயங்கிடைக்கினே.

அளவு $2\frac{1}{2}$—10 குன்றி.

இதைப் பொரித்து உபயோகித்தலே நலம். பச்சையாய் உபயோகிக்கில், வாந்தி யுண்டாக்கும்; தலைச் சுற்றும்; பித்தத்தைப் பிரகோபிக்கச் செய்யும்.

**பெருங்காயக்கலவைமெழுகு** :—காயம் 2, கால்பேனம் (Galbanum) என்று வழங்கும் கந்தபிரோஜா 2, வெள்ளைப் போளம் 2, வெல்லப்பாகு (treacle) 1, ஒன்று கூட்டி ஜலேந்திரத்தில் வைத்து உருக்கி, யாவும் ஒன்று சேருகிறவரையில் துழாவிக் கொடுத்து எடுத்து உபயோகிக்கவும். இதைச் சூதக வலியுடைய பெண்களுக்குக் காணும் அசீரணத்துக்குக் கொடுக்கவும்.

அளவு $2\frac{1}{2}$—5 குன்றி.

5 வராகனெடை பெருங்காயத்தை மூன்று ஆழாக்கு நீரில் நன்றாய் அரைக்க அது வெண்ணிறமுள்ள கனத்திரவமாகும். இதில் $\frac{1}{4}$—$\frac{1}{2}$ பலம் எடுத்து அதிசார சந்நிபாதசுரம், ஊழிநோய், வலி, குழந்தைகட்குண்டாகும் மாந்தநோய் முதலியவைகட்கு ஆசனத்துட் செலுத்தலாம்.

இதை நீர்விட்டு உரைத்து மார்பின் மீது பற்றிட, குழந்தைகட்குண்டாகும் கக்குவான் குணப்படும்.

குழந்தைகள் வயிற்றிலுண்டாகும் பூச்சிகளை வெளிப்படுத்த இதன் திரவத்தை ஆசன வழியாய்ச் செலுத்தலாம்.

அபினும் காயமும் சேர்த்துச் சொத்தைப் பல்லில் வைக்க, வலி சாந்தப்படும்.

பிரசவத்தின் பின் அழுக்கை வெளிப்படுத்த, காயத்தைப் பொரித்து, வெள்ளைப்பூண்டு, பனை

* சென்னை இறையாட்சியாளர் பதிப்பித்த "குணபாடம்" என்ற நூலிலிருந்து தொகுக்கப் பெற்றது.
—நிர்வாக ஆசிரியர்.

MM211, N36,S
N40:2 2



வெல்லத்துடன் சேர்த்துக் காலை தோறும் கொடுக்கலாம்.

காயம், கர்ப்பூரம், மிளகு, அபின் சேர்ந்த மருந்து ஆரம்ப ஊழியில் நன்மை தரும்.

ஒற்றைத்தலைவலி, பல்வலிகளில் இதை உபயோகிக்கலாம்.

**பெருங்காய லேகியம்** :—காயம் 25 பலத்தைத் தூணி நீரில் சேர்த்து எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிப் பத்துபலம் சீனி கலந்து பாகு செய்து, பூண்டு, கடுகு, மிளகு, சுக்கு வகைக்கு ஒரு பலம் பொடி செய்து தூவி, கால்படி ஆவின் நெய் விட்டு இலேகிய பதமாய்க் கிண்டி, வேளை யொன்றுக்கு 5 குன்றி முதல் 20 குன்றி கொடுக்க, வாயு, வாந்தி நோய்கள் தீரும்.

### பெருங்காயச் சூரணம்

காயமொன்று லவணமிரட்டி கடியதிப்பிலி அதனிலிர
தியதாகு முள்ளிச்சாறு சேரவேயி ரட்டிகூட்டி [ட்டி
ஆயன்சொல் தப்பாதிந்த ஔஷதங் கொள்வீராயின்
சாயுமே குன்மஞ்சூலை தநுர்வாயுந் தீருமன்றே.
(தேரையர்)

அளவு—5 குன்றி முதல் 10 குன்றி வரை.

(வேறு)

பொரித்த காயம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு இவைகளைச் சமவெடை தூக்கிச் சூரணஞ் செய்து 5–10 குன்றி எடை சோறுண்ணும் பொழுது முதற்பிடியன்னத்துடன் சேர்த்துண்டுவர, மந்தத்தை விலக்கிப் பசியையும் சீரணத்தையு முண்டாக்குவதுடன் வயிற்றுப்பிசம் முதலிய வற்றையும் போக்கும்.

கோழிமுட்டை மஞ்சட்கருவுடன் காயத்தைக் கூட்டிக் கொடுக்க வறட்டிருமல், பக்கவலி நீங்கும்.

வாலேந்திரபோளம், மிளகு, இவைகளுடன் சேர்த்துக்கொடுக்க உதிரச் சிக்கல் அறும்.

எண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் காதுக்கிட காதுவலி நீங்கும்.

சூதகசந்நி, வலி, மூர்ச்சை இவைகட்கு இதன் திரவம் உடனே பலன் தரும்.

கால் ஆழாக்கு நீரில் $\frac{1}{2}$ வராகனெடை காயத்தைக் கரைத்து, ஒரு சங்களவு எடுத்துச் சிறிதுஓமத்தீநீர் சேர்த்துக் கொடுக்கக் குழந்தைகளுக்குண்டாகும் மாந்தம், வயிற்றுப் பொருமல் அனுகூலப்படும்.

காயத்துடன் உழுந்து சேர்த்துப் பொடித்துத் தீயிலிட்டுப் புகைத்த புகையை யுட்செலுத்த சுவாசம் (இரைப்பு உப்பிசம்) தணியும்.

காயத்தை நீர்விட்டரைத்துத் தேள்கடிவிடம், புண்கள் முதலியவற்றிற்குப் பூசலாம்.

134/71
600 008

**பைகார மின்சாரத் திட்டம்** :—இத்திட்டம் 125 லக்ஷம் ரூபா செலவில் இயற்றப்பட்டுள்ளது. பைகார நதியின் நீரை 7000 அடி நீளம் உள்ள குழாய்களின் வழியே வாங்கி ஓர் இடத்தில் தேக்கியிருக்கின்றனர்; நீர்த்தேக்கம் 840 லக்ஷம் கன அடிகள். இந்நீரை இத்தேக்கத்தினின்று 3080 அடிகள் குழாய்கள் வழி கீழ் நோக்கி ஓடச் செய்து இந்த வேகத்தின் சக்தியால் இயந்திரங்களைச் சுழலச் செய்து மின்சாரம் உண்டாக்குகின்றனர். இம்மின்சாரம் தென் னிந்தியாவின் பல ஜில்லாக்களுக்கு உதவுகின்றது.

---

உலகத்திலேயே மிக உயரமானது என்று கருதப்படுவது தாலா என்னுமிடத்தில் பூமியினின்று 110 அடி உயரத்தில் 321 அடி சதுரம் 16 அடி ஆழமுள்ளதாகக் கட்டப்பட்டுள்ள நீர்கொள் எஃகுக் குளம் ஆகும். அது 90 லக்ஷம் காலன் நீர் கொள்ளக் கூடியது. ஒரு எண்ணெய்த் தகரம் 4 காலன்.